தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2032
மார்கழி–தை
ஜனவரி 1–31, 2001
மலர் : 32 இதழ் : 13 & 14
விலை ரூ.10

# அறிவார்ந்த சிந்தனைகள் ஐந்தாண்டுச் சாதனைகள்

## தொகுப்பு - I


- தகவல் தொழில்நுட்பமும் மரபணு உயிரியலும் ---------- 2
- கல்வி நீரோடையில் சாதனை மலர்கள் ---------- 11
- வேளாண் துறையின் வளர்ச்சியும், விவசாயிகள் மீது அரசின் அக்கறையும் ---------- 15
- நாடிச் சென்று வழங்குகிறோம் நல்வாழ்வு ---------- 20
- நாட்டின் உயிர்மூச்சும்; நாடி நரம்புகளும் ---------- 25
- குடிநீர் திட்டப் பணிகள் ---------- 31
- சாலை, பாலங்கள் என சாதனைகள் பாரீர் ---------- 36
- பொதுப்பணித்துறையில் குவியும் புதுப்பணிகள் ---------- 43
- அனைவரும் அகம் மகிழும் வண்ணம் அறநிலையப்பணிகள் ---------- 51
- மின்துறையின் சாதனைகள் ---------- 58
- உதவும் கரங்களாய் விளங்கும் உணவு கூட்டுறவுத்துறை ---------- 63
- சமத்துவ சமுதாயம் அமைத்திடும் அரசின் சாதனைகள் ---------- 71
- வளமார் எமது தமிழகம் வளரும் பல தொழிலகம் ---------- 79
- தமிழ்த்துறை வளர்த்திடத் தனித்துறை ---------- 87


திருக்குறள்

**குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு.**

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.


**கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...**

# தகவல் தொழில் நுட்பமும் மரபணு உயிரியலும்!

தமிழகத்தில் உச்சகட்டத்தில் வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பம் (Information Technology), மரபணு உயிரியல் தொழில் நுட்பம் (Bio-Technology) ஆகிய இரண்டும் புத்தாயிரத்தின் விடியல் விஞ்ஞானங் களாக விளங்கி வருவதை அறிவோம். தகவல் தொடர்புகளில் ஏற்பட்டு வரும் புரட்சிகரமான மாற்றங்கள் காரணமாக இந்தப் பூமிப்பந்தே குக்கிராமம் போல் (Global Village) குறுகிக் கொண்டு வருகிறது; இனவழித் தொடர் (DNA Sequence) இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய உயிரியல் சாதனை என்று போற்றப்படுகிறது. எனவே இந்த இரண்டு தொழில்நுட்பங்களிலும் தமிழகம் முன்னிலையில் இருந்திட வேண்டும் எனும் நோக்கத்துடன் இந்த அரசு பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

**“e” (electronic) என்ற ஓரெழுத்தின் ஆற்றல்.**

எழுபதுகளில் வெறும் கருத்துப் படிவமாக (Concept) மட்டுமே இருந்த தகவல் தொழில் நுட்பம் இன்று எங்கும் நிறைந்த பொருளாய் ஆகிவிட்டது. மானுட சமுதாயத்தின் சகல துறைகளையும், தொழில் வளர்ச்சியின் ஒவ்வொரு பிரிவையும், தகவல் தொழில் நுட்பம் குறிப்பாக “e” என்ற ஓரெழுத்து மந்திரம் (electronic) பின்னிப் பிணைந்து, வளர்த்து வருகிறது. e-Mail, e-Commerce, e-Governance, e-Medicine, e-Value, e-biz, e-Stock, e-education, என்று எல்லாத் துறைகளையும், தகவல் தொழில்நுட்பம் வியாபகம் செய்து வருகிறது. செவிக்கும், கண்ணுக்கும் உலகத்தையே காட்டிவரும் இணையத்தில் இன்று நறுமணத்தையும் பரப்புவதற்கான தொழில்நுட்பம் உருவாகிவிட்டது. உலகப் பொருளாதார முன்னேற்றத்தின் எல்லா முனைகளுடனும் இரண்டறக் கலந்துவிட்டது தகவல் தொழில்நுட்பம். தகவல் தொழில் நுட்பம் இல்லாத எந்தத் தொழிலும் முன்னேற்றம் அடையாத பழைய தொழிலாக கருதப்படுகிறது; தகவல் தொழில்நுட்பத்தைத் தெரிந்து கொள்ளாத இன்றைய மனிதன் நேற்றைய மனிதனாகி விட்டான். 21 – ஆம்



நூற்றாண்டில் உலகப் பொருளாதாரத்தின் உந்து சக்தியாக தகவல் தொழில் நுட்பம் விளங்கப் போகிறது என்பதை இந்த அரசு அறிந்து வைத்துள்ளதால்தான், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்காகவும், அதன் பயன்கள் கிராமப் பகுதிகளிலும் ஊடுருவி, சாமானியர்களுக்கும் சென்றடைய வேண்டும் என்பதற்காகவும், கலைஞர் அரசு தொலைதூர கண்ணோட்டத்தோடு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

**தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பப் பட்டதாரிகள் அதிகம்**

- இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் ஒவ்வொரு ஆண்டும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதன் தொடர்பான கல்வியைப் பெற்று வெளியே வரும் பொறியியல் பட்டதாரிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகம். தமிழ்நாட்டில் 152 பொறியியல் கல்லூரிகளில் இந்த ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்கள் எண்ணிக்கை 42 ஆயிரத்து 892. இவர்களில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பொறியியல் பட்டப்படிப்பில் சேர்க்கப்பட்டுள்ள வர்களின் எண்ணிக்கை 19 ஆயிரத்து 378.

**அமெரிக்க விசா பெறுவதில் தமிழகம் முன்னணி**

- இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக எண்ணிக்கையிலான மென்பொருள் (Software) பொறியியல் வல்லுநர்கள் வேலை செய்து வருகிறார்கள். இன்றைய அளவில் தமிழகத்தில் 22 ஆயிரம் பேருக்கு மேலானோர் மென்பொருளை வாழ்க்கைத் தொழிலாகக் (Software Professionals) கொண்டுள்ளனர். 1998 அக்டோபர் முதல் 1999 செப்டம்பர் வரை சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் 21,371 பேருக்கு விசா வழங்கியது. இதே காலகட்டத்தில் மும்பை தூதரகம் 9,734 பேருக்கும், புதுதில்லி தூதரகம் 5,460 பேருக்கும், கல்கத்தா தூதரகம் 1,367 பேருக்கும் விசாக்களை வழங்கியுள்ளன. இந்தப் புள்ளி விபரங்கள் டில்லியை விட, மும்பையை விட, கல்கத்தாவை விட, வேலை வாய்ப்புகளைப் பெற்று அமெரிக்காவுக்குச் சென்னையிலிருந்து செல்வோர் எண்ணிக்கை தான் அதிகம் என்பதையே காட்டுகின்றன. அதில் சிறப்பம்சம் என்னவெனில், அமெரிக்கா செல்வோரில் பெரும்பாலோர் மென்பொருள் பட்டதாரிகளே.

- தேசிய மென்பொருள் மற்றும் பணி நிறுவனங்களின் சங்கம் (National Association of Software and Services Companies - NASSCOM) சென்னையை, தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் நாடி தேர்வு செய்யும் முதல்நிலை நகரம் என்று அறிவித்துள்ளது.

- தகவல் தொழில் நுட்பத்திற்கென்றே, சென்னை தலைமைச் செயலகத்தில் தனியே ஒரு துறை, ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையின் கீழ் 5.10.1998 முதல் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

- தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பம் வேகமாக வளர்ச்சி அடையவும், அதற்கான அணுகு முறைகளை உருவாக்கிச் செயல்படுத்தவும், முதலமைச்சரின் தலைமையில் பணி முனைப்புக் குழு (I.T. Task Force) உருவாக்கப்பட்டது.

- அரசுத் துறையை கம்ப்யூட்டர் மயமாக்கவும், பள்ளிக் கல்வியில் தகவல் தொழில் நுட்பத்தை இணைக்கவும், தமிழ் மென்பொருளை உருவாக்கிப் பரப்பவும், அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் ஒரு துணைக் குழுவும் உருவாக்கப்பட்டுள்ளது.


- டாக்டர் ஆனந்தகிருஷ்ணன் அவர்கள் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்னணு ஆளுமை (e-Governance) ஆகியவை தொடர்பாக ஆலோசனைகள் வழங்கிட முதலமைச்சரின் ஆலோசகராக 20.9.2000 அன்று நியமிக்கப் பட்டுள்ளார்.

**தகவல் தொழில்நுட்பக் கொள்கை வகுத்த முதல் மாநிலம்**

- அரசு, தகவல் தொழில் நுட்பத்திற்கென்று, தனியே கொள்கை (I.T.Policy) ஒன்றை உருவாக்கி அறிவித்துள்ளது. இக்கொள்கை, தகவல் தொழில் நுட்பத் தொழில் முனைவோர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்குத் தனியே கொள்கையை உருவாக்கி அறிவித்துள்ள முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான்.

**புகழ் வளர்க்கும் டைடல் பூங்கா**

- 340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைடல் மென் பொருள் பூங்கா சென்னை தரமணியில் உருவாக்கப்பட்டு 4.7.2000 அன்று பிரதமர்




வாஜ்பாய் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. டைடல் பூங்கா கிண்டியிலிருந்து கேளம்பாக்கம் வரை பரந்து விரிந்து வேகமாக வளர்ந்து வரும் "Cyber Corridor"ன் நுழைவாயிலில் அமைந்துள்ளது. இந்தப் பூங்கா 12 இலட்சம் சதுரஅடி பரப்பளவு கொண்டதாக, தரை தளத்துடன், 12 மேல் தளங்களும், 2 தரைகீழ் தளங்களும் கொண்டதாக அமைந்துள்ளது. தரை வழியாகவும், செயற்கைக்கோள் வழியாகவும், நுண்ணலைகள் வழியாகவும் செய்திகளை பரிமாறிக் கொள்வதற்கு ஏற்ப பிரத்யேகமான முறையில் வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**தடையில்லா மின்சாரம்**

- இந்த டைடல் பூங்காவில், தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதி செய்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் 110 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின்நிலையம் ஒன்றை அமைத்துள்ளது. கட்டடம் முழுதும் குளிர்ப்பதனப் படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பூங்காவிற்கு 6 ஆயிரம் டன் திறன் கொண்ட குளிர்ப்பதன வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதில் பாதி அளவுக்கு, அதாவது 3 ஆயிரம் டன் அளவிற்கு குளிர்ப்பதன வசதிகளை ஏற்படுத்துவதற்கு, அதே நேரத்தில் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு ஏற்றவகையில், உலகின் மிக நவீனமான "Thermal Energy Storage System" என்ற புதிய யுக்தி இந்தியாவிலேயே முதல் முறையாக இங்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இங்கு அமைந்துள்ள இந்த " மின்தொகுப்பு முறை" உலகிலேயே மூன்றாவது பெரியது ஆகும். ஏற்கனவே பிரான்ஸ் நாட்டில் ஒன்றும், ஜப்பான் நாட்டில் ஒன்றும் பெரிய அளவில் இந்த மின்தொகுப்பு முறை பயன்பாட்டில் உள்ளன. இவை மட்டுமின்றி உலகத் தரத்திலான நவீனமயமாக்கப்பட்ட ஏராளமான வசதிகளும் இந்தப் பூங்காவில் அமைந்துள்ளன.

**முழுப் பரப்பளவும் நிரம்பிவிட்டது**

- ஹைதராபாத்தில் உள்ள மென்பொருள் பூங்காவை விடவும், பெங்களூரில் உள்ள மென்பொருள் பூங்காவை விடவும் இது மிகப்பெரியது. திறந்து வைக்கப்படுவதற்கு முன்பே இந்தப் பூங்காவின் 60 சதவீத இடம் உலகின் பிரசித்திப்பெற்ற மென் பொருள் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. திறந்து வைக்கப்பட்ட 4 மாதத்திற் குள்ளாகவே, அதாவது 2000 ஆண்டின் அக்டோபர் மாதத்திற்கு முன்பே, மொத்தம் உள்ள 12 லட்சம் சதுர அடிப் பரப்பளவும் 34 மென்பொருள் நிறுவனங்க்ளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. அந்த 34 நிறுவனங்களில் பென்டா சாப்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட், சத்யம் இன்ஃபோவே லிமிடெட், கம்ப்யூட்டர் அசோசியேட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், டி.எஸ்.க்யூ.சாப்ட்வேர்

லிமிடெட், எச்.சி.எல்.டெக்னாலஜிஸ் லிமிடெட், ஐ–நாட்டிக்ஸ் டெக்னாலஜிஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பாண்டிச்சேரி டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், சத்யம் கம்ப்யூட்டர் சர்வீஸஸ் லிமிடெட், டாடா கன்சல்டன்சி சர்வீஸஸ், கோக்னிசன்ட் டெக்னாலஜிஸ் சொல்யூஷன்ஸ் இந்தியா லிமிடெட், ஃபோர்டு இன்பர்மேஷன் டெக்னாலஜிஸ் சர்வீஸஸ் லிமிடெட், எலெக்ட்ரானிக் டாடா சிஸ்டம் (இந்தியா) லிமிடெட் ஆகியவை முன்னணி நிறுவனங்களாகும்.

- இப்படி இந்த முதல் டைடல் பூங்கா பெற்றுள்ள பெரும் வெற்றியின் அடிப்படையில், இரண்டாவது டைடல் பூங்கா அறிவிக்கப்பட்டு, மென்பொருள் நிறுவனங்களின் இடத்தேவை ஆய்வு செய்யப்பட்டு, பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.
- நாட்டிலேயே முதன் முதலாக தமிழ்நாடு மென்பொருள் நிதி என்ற ஒன்றை டிட்கோ நிறுவனம், இந்தியச் சிறுதொழில் வங்கி (SIDBI), கட்டமைப்பு மற்றும் நிதிச் சேவை நிறுவனம் (ILFS) ஆகியவற்றுடன் இணைந்து தொடங்கியுள்ளது. அதன் மூலம் இதுவரை மென்பொருள் தொழில் முனைவோருக்கு எட்டு கோடி ரூபாய் முதலீட்டுதவி வழங்கப்பட்டுள்ளது.

#### சிறுசேரி தொழிற் பூங்கா

- பழைய மாமல்லபுரம் சாலையில் சிறுசேரி என்ற இடத்தில் 1000 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய வன்பொருள் மற்றும் மென்பொருள் வளர்ச்சிக்கு பன்னாட்டுத் தரத்தில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை சிப்காட் நிறுவனம் உருவாக்கி வருகின்றது. சென்னை–தரமணியிலிருந்து பழைய மாமல்லபுரச் சாலை, தமிழகத்தின் தகவல் தொழில் நுட்ப நெடுஞ்சாலையாக (Tamil Nadu's I.T. Super Highway) வேகமாக உருப்பெற்று வருகிறது. பழைய மாமல்லபுரம் சாலையில் பல மிகப் பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களுடைய மென் பொருள் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளன; மேலும் நிறுவி வருகின்றன. சோழிங்கநல்லூரில் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (T.C.S.) என்னும் நிறுவனம், ஆசியாவின் மிகப் பெரிய மென் பொருள் மையத்தை தொடங்கியுள்ளது. அதைத் தொடர்ந்து மற்ற மிகப் பெரிய நிறுவனங்களான விப்ரோ, இன்போசிஸ் மற்றும் போலாரிஸ் ஆகிய நிறுவனங்களும் தங்களது மையங்களை இந்தப் பகுதிகளில் நிறுவி உள்ளன.

#### 13,000 சமுதாய இணைய மையங்கள்

- இங்கிலாந்திலுள்ள "வேர்ல்ட் டெல்" (World Tel) நிறுவனத்துடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ள கூட்டுத் தொழில் முயற்சியின் காரணமாக, இம்மாநிலம் முழுவதிலும் பரவலாக 13,000 சமுதாய இணைய மையங்களை அமைப்பதற்கான பணி தொடங்கிவிட்டது. இதன் மூலமாக, சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

#### ஆப்டிக் ஃபைபர் கேபிள் பதித்திட தனிக்கொள்கை

- பூமிக்கடியில் ஆப்டிக் ஃபைபர் கேபிள் பதித்திடத் தனிக்கொள்கை வகுத்துச் செயல்படுத்தும் முதல் மாநிலம் தமிழ்நாடுதான். ஆப்டிக் ஃபைபர் கேபிள் தகவல் தொழில் நுட்பத்தின் முதுகெலும்பு போன்றது. இதுவரை தமிழ் நாட்டில் இந்த கேபிள்கள் அமைத்திட வேர்ல்ட் டெல், பி.பி.எல்., பார்த்தி டெலி சோனிக், டிஷ்நெட் டிஸ்.எஸ்.எல்., ப்ராட் பேன்ட் சொல்யூசன்ஸ், ரிலையன்ஸ் இன்ஃபோகாம் லிமிடெட், எஸ்டெல் கம்யூனிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய ஏழு பெரிய நிறுவனங்களுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த கேபிள்கள் தமிழ்நாட்டை மற்ற எல்லா மாநிலங்களுடனும் இணைத்து, தகவல் தொடர்பை வலுப்படுத்தும். அத்துடன் கடலுக்கடியில் ஆப்டிக் ஃபைபர் கேபிள்கள் அமைத்து, தமிழ்நாட்டை உலக நாடுகளுடன் இணைப்பதற்கான முயற்சியும் நடைபெற்று வருகிறது.

#### 'தமிழ்நெட் 99'

- கணினி பயன்பாடுகளில் உலக அளவில் போதுமான தமிழ்க் குறியீடுகள் இல்லாததால் தமிழ் மென் பொருள் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படாமல் இருந்தது. இதைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு "தமிழ்நெட் 1999" என்ற உலகத் தமிழ் இணைய கருத்தரங்க மாநாட்டை 1999 ஆம் ஆண்டு பிப்ரவரி 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் சென்னையில் நடத்தியது. இந்த மாநாட்டில் ஒருமனதாக மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின்படி, தமிழ் விசைப்பலகையும், தமிழ்க் குறியீடுகளும் தரப்படுத்தப்பட்டு (Standardised) அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

- அமெரிக்காவிலுள்ள யூனிக்கோட் கன்சோர்டியம் எனும் மையத்தில் தமிழ்நாடு கூட்டு அங்கத்தினராகப் பதிவு செய்து கொண்டுள்ளது. இதில் அங்கத்தினராகும் முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

**உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம்**

- உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் பயன்பெறும் வகையில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் (Tamil Virtual University), முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வா.செ.குழந்தைசாமி அவர்களைத் தலைவராகவும், மென்பொருள் துறையில் சிறந்து விளங்கும் வல்லுநர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது.



**அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி மையங்கள்**

- மாநிலம் முழுவதும் உள்ள 1200 மேல்நிலைப் பள்ளிகளிலும் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டம் 187 கோடியே 66 லட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு பள்ளியிலும் 40 மாணவர்கள் என்ற அடிப் படையில் சுமார் 48 ஆயிரம் மாணவர்கள் ஆண்டுதோறும் மென்பொருள் துறையில் வேலை பெறும் வாய்ப்புக்குத் தகுதியுடையவர்களாக ஆவார்கள். இத்திட்டம் அரசின் அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகள், வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றிற்கும் 34 கோடியே 48 லட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டுதோறும் இக்கல்லூரிகளைச் சார்ந்த 60 ஆயிரம் மாணவ மாணவியர் கணினிக் கல்வியிலும் தேர்ச்சி பெறுவர். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த கணினி கல்வித் திட்டம் இந்தியாவிலேயே முதலாவதாக, மிகப்பெரிய திட்டமாகும்.

பள்ளி மாணவர்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கும் திட்டத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை 23.4.99 அன்று தள்ளுபடி செய்து, சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பில், “அரசின் இந்தப் பொன்னான நோக்கத்தால், அடுத்த ஆண்டு 48 ஆயிரம் மாணவர்கள் கணினி பயிற்சி பெறுவார்கள் என்பதை இந்த நீதிமன்றம் பாராட்டுகிறது. தமிழக அரசின் மீது இந்த நீதிமன்றம் நம்பிக்கை வைத்திருக்கிறது. சமூக நீதிக் காவலனாகப் பாடுபடும் அரசு, கிராமப்புற மற்றும் நடுத்தர மக்களிடையே படிக்க வருகிறவர்களின் நலனில் கவனம் கொள்ளும் என்று நம்பிக்கை கொள்கிறது” என்று குறிப்பிட்டுள்ளது.

**தொலைத் தொடர்பு வழி மருத்துவம்**

- கணினியைப் பயன்படுத்தி நெடுந்தொலைவுக்கு அப்பால் உள்ள மருத்துவ வல்லுநர்களிடமிருந்து அறிவுரை மற்றும் வழிகாட்டுதலுடன், நவீன மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு “தொலைத் தொடர்பு வழி மருத்துவம்” (Tele medicine) வசதி தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- தகவல் தொழில்நுட்பத்துறையில் தமிழில் ஆராய்ச்சியை ஊக்குவிக்க தமிழ் இணைய ஆய்வு மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

#### டானிடெக்

- தகவல் தொழில் நுட்பக் கல்வியை மேம்படுத்த "டானிடெக்" என்னும் தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றை 1998-ல் அரசு ஏற்படுத்தியுள்ளது. முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வாசகம் தற்பொழுது இதன் தலைவராக உள்ளார். இந்நிறுவனம், தகவல் தொழில் நுட்பத்தில் முதுகலை பட்டயப் படிப்பை (Post Graduate Diploma in Information Technology) அளிக்கிறது. ஓராண்டு காலத்திற்கு அளிக்கப்படும் இப்படிப்பில் இதுவரை ஒவ்வொன்றிலும் 50 மாணவர்களைக் கொண்ட இரண்டு குழுவினர் முடித்துள்ளனர். தற்போது மூன்றாவது குழுவினர் இப்பட்டயப் படிப்பினைப் பயின்று வருகின்றனர். இந்த "டானிடெக்" நிறுவனத்தை நிகர்நிலைப் பல்கலைக் கழகம் (Deemed University) என்ற அந்தஸ்திற்கு உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. டானிடெக், தகவல் தொழில் நுட்பத் துறையில் பட்டப் படிப்புகளைத் தொடங்கி நடத்துவதுடன், தகவல் தொழில்நுட்பத் திறமையை தமிழ்நாட்டிலுள்ள பொறியியல் நிறுவனங்களில் மேம்படுத்தும் ஒருங்கிணைப்பு மையமாகவும் செயல்படுகிறது.

#### மென்பொருள் நிறுவனங்களின் வளர்ச்சி

- தமிழ்நாட்டில் 1996 மே மாதத்திற்கு முன்பு வரை 34 மென்பொருள் நிறுவனங்களே (Software Units) இருந்தன. ஆனால், 1996 மே மாதத்திற்குப் பிறகு, அதாவது இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இதுவரை 632 மென்பொருள் நிறுவனங்கள் தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டு, இன்றைய நிலையில் 666 மென்பொருள் நிறுவனங்கள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. 1999-2000 ஆண்டில் மட்டும் 430 மென்பொருள் நிறுவனங்கள் தமிழகத்தில் உருவாக்கப் பட்டுள்ளன. 1995-96ல் கோவையில் 4 மென்பொருள் நிறுவனங்களே இருந்தன. ஆனால், இன்றைக்கு 58 மென்பொருள் நிறுவனங்கள் கோவையில் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. ஹாலிவுட்டில் தயாரிக்கப்படும் திரைப் படங்களுக்குத் தேவையான மென்பொருள்களில் பெரும்பாலானவை, சென்னையிலுள்ள மென் பொருள் நிறுவனங்களில்தான் தயாரித்து அனுப்பப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

- 1994-95ஆம் ஆண்டில் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 12.17 கோடி ரூபாய் என்கிற அளவிற்குத்தான் இருந்தது. ஆனால், 1998-99-ஆம் ஆண்டில் அது 1,246 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்தது. 1999-2000 ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து மென்பொருள் ஏற்றுமதியின் அளவு 1,914 கோடி ரூபாய் ஆகும்.

#### அரசுத் துறைகள் கணினிமயம்

- ஒளிவுமறைவு இல்லாத, வெளிப்படையான நடைமுறைகளில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ள இந்த அரசு, நிர்வாகம் வழங்கும் சேவைகள் தங்கு தடையின்றி, விரைவாகவும், முழுமையாகவும், மக்களைச் சென்று அடைந்திட வேண்டுமென்ற நோக்கத்துடன், அரசுத் துறைகளை கணினி மயமாக்கி வருகின்றது. முதல் கட்டமாக, பத்திரப் பதிவுத் துறை, மோட்டார் வாகனங்கள் துறை, நிலப் பதிவேடுகள் மற்றும் வரைபடங்கள், விற்பனை வரித் துறை போன்றவற்றைக் கணினிமயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தஞ்சை, திருவாரூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில், மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும், முழுமையாகக் கணினிமயமாக்கும் திட்டத்தை தொடங்கி வைத்திருக்கிறோம். தமிழகத்தில் மொத்தமுள்ள 206 வட்டங்களில், இதுவரை 50 வட்டங்கள் முழுமையாகக் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 156 வட்டங்களிலும் கணினிமயமாக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெறுகின்றன. இப்பணிகள் 31.12.2000த்திற்குள் முடிவடையும். இந்த நடவடிக்கைகளின் மூலம் "e-Governance" என்பது நமது மாநிலத்தில் வேகமாக நடைமுறைக்கு வந்துகொண்டிருக்கிறது. அரசு அலுவலர்கள் அனைவரும் கணினி நேய மனப்பான்மையை வளர்த்து, பெருமளவுக்குக் கணினிகளைப் பயன்படுத்த முற்பட்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

#### வல்லுநர்கள், பத்திரிகைகள் பாராட்டு

- போலாரிஸ் நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான திரு.அருண்ஜெயின் 2000, ஏப்ரல் 20ந்தேதி முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் "30 ஆண்டுகள் நான் டெல்லியில் வாழ்ந்துவிட்டேன். தமிழகத்தில்

நிலவும் சூழ்நிலைகளும், பண்பாட்டு மதிப்புகளும் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. அவற்றின் அடிப்படையில் என்னுடைய நிர்வாகக் குழுவுடன் சென்னையில் போலாரிஸ் நிறுவனத்தை அமைத்திட முடிவு செய்துள்ளேன்'' என்று தெரிவித்துள்ளார்.

- பிசினஸ் ஸ்டாண்டர்டு பத்திரிகை “ 10 மாநகரங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இருந்து தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதில் சென்னை நகரம் முதலிடத்தைப் பெற்றுள்ளது” என்று பாராட்டியுள்ளது.

- பிப்ரவரி 5–11, 2000 நாளிட்ட "Economic and Political weekly" பத்திரிகையில் "Raising global competitiveness of Tamil Nadu's IT industry" என்ற தலைப்பில் “தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பத் தொழில் சமீபகாலங்களில் மிக நேர்த்தியாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி அதன் அண்டை மாநிலங்களைவிட வேகமாக முன்னேறி வருகிறது. இந்தியாவிலுள்ள மென்பொருள் வல்லுநர்களுள் மிக அதிக எண்ணிக்கையிலான வல்லுநர்கள் (Software Professionals) இன்று தமிழ்நாட்டில் உள்ளனர். மல்டிமீடியா மென்பொருள் வளர்ச்சியிலும் (Multimedia Software Applications) மிக முக்கியமான இடமாக சென்னை வளர்ந்து வருகிறது. '' என்று கூறப் பட்டுள்ளது.

- “எகனாமிக் டைம்ஸ்'' ஆங்கில நாளேடு 7.2.2000 இதழில், “சென்னை நகரம் தேவையான மனிதவளத்துடன், உரிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுத் திகழ்வதால், உலகின் மிகப்பெரிய மென் பொருள் நிறுவனங்களின் முக்கிய தளமாக விளங்கி வருகிறது” என்று குறிப்பிட்டுள்ளது.

- கம்ப்யூட்டர் வார இதழான “தி டி.க்யூ வீக்” 6.3.2000 இதழில், “மத்திய நிதியமைச்சர் சின்கா தமது பட்ஜெட் உரையில் குறிப்பிடத் தவறிவிட்டாலும்கூட தமிழ்நாடு முதல்வர் மு.கருணாநிதி அவர்கள் உச்சியில் ஏறிநின்று சென்னையில் நிகழ்ந்துவரும் அமைதியான புரட்சியைப் பற்றி உரக்கச் சொல்லிட வேண்டிய அவசியம் இல்லாமலேயே, ஓசையில்லாமல் ஏராளமான மென்பொருள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரே நகரம் சென்னை தான்'' என்று செய்தி வெளியிட்டு தமிழக அரசுக்கும், சென்னை மாநகருக்கும் பெருமை சேர்த்துள்ளது.

- தினமணி 12.12.2000 நாளிதழில் வெளியிட்ட தலையங்கத்தில் “பழைய மாமல்லபுரம் சாலை தமிழகத்தின் தகவல் தொழில்நுட்ப நெடுஞ்சாலையாக உருவெடுக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை என எதிர்பார்க்கலாம். குறைந்த செலவில் மிகச் சிறந்த கட்டமைப்பு வசதிகள், மேம்பட்ட மனிதவளம் ஆகியவற்றை தமிழகம் அளிக்கிறது. “தகவல் தொழில்நுட்ப அறிவுத்திறனின் ஊற்றுக்கண்ணாகத் தமிழகம் திகழ்கிறது” என விப்ரோ மென்பொருள் நிறுவனத்தின் தலைவர் பிரேம்ஜி வர்ணித்திருப்பது மிகவும் பொருத்தமே. ஆக, கணினி மென் பொருள் உற்பத்தித் தொழிலில் முதலீடு செய்வதற்கு ஏற்ற இடமாகத் தமிழகம் கருதப்படுவதில் வியப்பில்லை” என்று பாராட்டியுள்ளது.

**தமிழகத்தில் உயிரியல் தொழில்நுட்பம்**

- இருபத்தோராம் நூற்றாண்டில், மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான வளம், நலம் இரண்டையும் வழங்கிடும் மிக முக்கியமான இரண்டு துறைகளில் தகவல் தொழில்நுட்பத்தினை அடுத்து நிற்பது உயிரியல் தொழில்நுட்பம். கோடிக் கணக்கான மக்களுக்குத் தேவைப்படக்கூடிய சத்துணவு, சுகாதாரம், சுற்றுப்புறச் சூழல்கள் போன்றவைகளில் உயிரியல் தொழில்நுட்பத்தின் ஆற்றல்கள் பொதிந்து கிடக்கின்றன. இந்த ஆற்றல் முழுமையாக பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். மக்கள் தொகைப் பெருக்கம், வரம்பிற்குட்பட்ட விளைநிலங்கள், அதிக அளவில் பரவும் தொற்று நோய்கள் ஆகியவை தொடர்பான இன்றைய சவால்களைச் சந்தித்துத் தீர்வு காண்பதற்கு உயிரியல் தொழில்நுட்பம் நமக்குப் பெரிதும் உதவும். உயிரியல் தொழில்நுட்பம் பெரிய அளவில் வேலை வாய்ப்புகளையும் உருவாக்கக் கூடியது. உயிரியல் தொழில்நுட்பத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் இந்தியாவில் பயன்படுத்தப்படும் பொருள்களின்

மதிப்பு சென்ற ஆண்டில் 7,154 கோடி ரூபாயாக இருந்தது. நடப்பு ஆண்டில் இது 9,400 கோடி ரூபாய் அளவினை எட்டும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இது 2005ஆம் ஆண்டில் 14,560 கோடி ரூபாய் அளவுக்கு உயரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விவரங்களின் அடிப்படையில் உயிரியல் தொழில்நுட்பத் துறையில் புதிய முதலீடுகள் செய்யப்படுவதற்கு மிகச்சிறந்த வாய்ப்புகளை இந்தியா பெற்றுள்ளது என்பது விளங்கும்.

**உயிரியல் தொழில்நுட்பத்திற்கு தனிக்கொள்கை**

- தமிழகம் உயிரியல் வளங்களை மிக அதிக அளவில் கொண்டுள்ளது. தமிழகத்தில் அமைந்துள்ள பல்வேறு வகையான நிலவியல் பகுதிகளிலும் (Geographical Terrains) உயிரியல் வகைகள் பல காணப்படுகின்றன. தமிழகத்தின் வனவளம், வேளாண்வளம், நிலவளம் ஆகியவை அளவில் பெரியதாகவும், பல்வேறு வகையினதாகவும் அமைந்துள்ளன. நாட்டிலேயே மிக நீண்ட கடற்கரையையும் தமிழகம் கொண்டுள்ளது. இவற்றின் காரணமாக உயிரியல் தொழில்நுட்பம் சார்ந்த ஆராய்ச்சிகளுக்காகவும், உயிரியல் சார்ந்த உற்பத்திப் பொருள்களின் மேம்பாடுகளுக்காகவும், வர்த்தக நடைமுறை களுக்காகவும் அதிக அளவில் முதலீடுகள் செய்வதற்குரிய வாய்ப்புகளைத் தமிழகம் பெற்றுள்ளது. இதன் காரணமாக, உயிரியல் தொழில்நுட்பத்தினைத் தமிழகத்தில் பெருக்கி வளர்ப்பதற்கு உதவும் வகையில் இந்தியாவிலேயே முதல்முறையாக உயிரியல் தொழில் நுட்பத்திற்குத் தனிக் கொள்கை வகுத்திட தமிழக அரசு முடிவு செய்தது. 2000–2001 ஆண்டு நிதிநிலை அறிக்கையில், "வளர்ந்துவரும் உயிரியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்திட உயிரியல் தொழில் நுட்பக் கொள்கை ஒன்றை உருவாக்க ஆய்வறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதனை தலைவராகக் கொண்ட நிபுணர் குழு இந்த அறிக்கையைப் பரிசீலித்து தனது பரிந்துரைகளை அளிக்கும்" – என அறிவிக்கப்பட்டு உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. உயர்நிலைக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழக அரசினால் தயாரிக்கப்பட்ட "உயிரியல் தொழில்நுட்பக் கொள்கை ஆவணம்" இன்றைக்கு உலகிலேயே உயிரியல் தொழில் நுட்பத் துறையில் முன்னணியில் உள்ள அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகம் 12.9.2000 அன்று சென்னையில் நடத்திய உயிரியல் தொழில்நுட்ப மாநாட்டில் வெளியிடப்பட்டது.


**தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்ப வாரியம்**

- "தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்ப வாரியம்" ஒன்று 22.11.2000 அன்று தமிழக அரசினால் அமைக்கப்பட்டது. இதன் தலைவராக பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களும், மத்திய அரசின் உயிரியல் தொழில்நுட்பத் துறையின் முன்னாள் செயலாளர் டாக்டர் எஸ். இராமச் சந்திரன், கோவை பாரதியார் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் எஸ். இன்னாசிமுத்து, பெங்களூர் இந்திய அறிவியல் கல்வி நிலையத்தில் உள்ள குளோபல் பயோடைவர்சிடி கன்வென்ஷனின் (Global Biodiversity Convention) அறிவியல் ஆலோசகக்குழுத் தலைவர் பேராசிரியர் மாதவ் காட்கில், மராட்டிய மாநிலம் ஜாய்னாவில் உள்ள மாய்கோ உயிர் அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் (Mahyco Life Sciences Research Centre, Jaina) இணை இயக்குநர் டாக்டர் திருமதி உஷா பர்வாலே–செர் ஆகியோர் இந்த வாரியத்தினுடைய உறுப்பினர்களாக தமிழக அரசினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**சென்னையில் மகளிர்க்கான முதல்**
**உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா**

- 1996ஆம் ஆண்டு டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற உயிரியல் தொழில்நுட்பச் செயலரங்கத்தில் "உயிரியல் தொழில்நுட்பத் துறையில் தகுதி வாய்ந்த பெண்களுக்குச் சுயவேலை வாய்ப்புகளைப் பெருக்கிடும் நோக்கத்துடன் பெண்களுக்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்கலாம்" என்று செய்யப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு, மகளிருக்கான முதல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை சென்னையிலிருந்து 26 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கேளம் பாக்கத்திற்கு அருகில் சிறுசேரியில் அமைத்திட

ஒப்புதல் அளித்து, அதற்காக கேளம்பாக்கத்தில் 20 ஏக்கர் நிலம் வழங்கியது. பெண்களுக்கான இந்த முதல் உயிரியல் தொழில்நுட் பப் பூங்காவுக்கு மேதகு குடியரசுத் தலைவர் திரு.கே.ஆர். நாராயணன் அவர்களால் 29.7.1998 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் இந்த உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கப்பட்டு, 24.11.2000 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் அமையும் தொழில் முகவர்கள் தங்கள் உற்பத்திகளைத் தொடங்குவதற்குத் தேவையான வசதிகள் அனைத்தும் இங்கு ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன. வேளாண் உயிரியல் தொழில்நுட்பம், உணவுசார் உயிரியல் தொழில்நுட்பம், மருத்துவ உயிரியல் தொழில் நுட்பம் ஆகியவைகளின் அடிப்படையில் இப் பூங்காவில் பொருள்கள் உற்பத்தியாகி, உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் விற்பனையாகும்.



• தமிழக அரசின் உயிரியல் தொழில்நுட்பக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களில் ஒன்று உயிரியல் தகவல்கள் மற்றும் மரபணுத் தொகுப்பு மையம் உருவாக்குவது என்பதாகும். அமெரிக்காவில் மாடிசன் நகரில் உள்ள விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தின் ஆய்வுப் பூங்காவில் அமைந்துள்ள ஜீனோம் டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் தலைவர் டாக்டர். சேனா சேனாதிபதி அவர்களுடன் இணைந்து சென்னையில் 450 கோடி ரூபாய் முதலீட்டில் உயிரியல் தகவல் தொழில்நுட்ப மற்றும் மரபணு தொகுப்பு மையம் (Bio-informatics and Genomics Centre) ஒன்றினை அமைத்திட தமிழக அரசின் டிட்கோ நிறுவனம் முடிவு செய்துள்ளது. ஜீனோமிக் டெக்னாலஜீஸ் நிறுவனம் அதிநவீன ஆய்வுக்கூட மரபியல் தொழில்நுட்பங்களை மேம்படுத்தி அதன்மூலம் மரபணு வடிவமைப்பு மற்றும் மரபியல் சார்ந்த பரிமாணங்களை உபயோகித்து நோய் தடுப்பு மருந்துகள் போன்ற பல்வேறு பொருள்களைத் தயாரித்து அதனை வர்த்தக ரீதியாகப் பயன்படுத்துகிறது. தமிழகத்தில் உருவாக்கப் படவுள்ள உயிரியல் தகவல் தொழில்நுட்ப மற்றும் மரபணுத் தொகுப்பு மையம், மரபணு முறையைப் பயன்படுத்தி வேளாண்மை, மருத்துவம் மற்றும் தொழில் துறைகளில் அடுத்து 5 ஆண்டுகளில் ஏறத்தாழ 75 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புடைய பொருள்களை தயாரிக்கும். இந்த மையத்தில் ஏறத்தாழ 600 உயிரியல் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இதற்கான ஒப்பந்தம் 5.12.2000 அன்று கையெழுத்தாகி யுள்ளது.

பழைய பெருமையையும் தொன்மையான பண்பாட்டையும் விளக்கிடும் வண்ணம் அய்யன் திருவள்ளுவருக்கு அகிலமே அதிசயிக்கும் நிலையில் மிகப் பெரிய சிலையொன்றை நிறுவுவதற்கு எத்தகைய ஆர்வத்துடன் இந்த அரசு பணியாற்றியதோ, அதே ஆர்வத்துடனும், அக்கறையுடனும் புதிய அறிவியல் வளர்ச்சிக்காகவும், அதன் மூலமாகத் தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் மிடுக்கோடு நடைபோட வேண்டும் என்பதற்காகவும் அல்லும் பகலும் அயராது உழைத்து வருவதை, அந்த உழைப்பால் விளையும் மேன்மையை, மேதினி அறிந்துள்ளது.

★ ★ ★

# கல்வி நீரோடையில் சாதனை மலர்கள்!

நாடு விடுதலை பெற்ற நாளை "கணக்குத் தீர்த்த நாள்" என்றும், அந்த விடுதலை நாளை ஆண்டு தோறும் விழா எடுத்துக் கொண்டாடும்போது அந்நாளை, "கணக்குப் பார்க்கும் நாள்" என்றும் நமது அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்தியம்பினார்கள். ஆகவே இந்த அரசு ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தது முதல் இந்த நான்கரை ஆண்டுகளில் துறைவாரியாக என்னென்ன பணிகள் – எத்தகைய சாதனைகள் – எத்தனை திட்டங்கள் என்பன பற்றிய விவரங்களை தொகுத்து வழங்கப்படுகிறது.

அந்த வரிசையிலே கல்வித்துறை மூலமாக இந்த நான்கரை ஆண்டு காலத்தில் இந்த அரசு ஆற்றிய பணிகளின் பட்டியல் வருமாறு :–

- 1995–96ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே கல்வித் துறைக்கு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 2,233 கோடி ரூபாய். 2000–2001ஆம் ஆண்டிற்கு கல்வித்துறைக்காக செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 4,949 கோடி ரூபாய். அதாவது 2,716 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கீடு கல்வித் துறைக்காகச் செய்யப்பட்டுள்ளது. 95–96இல் ஒதுக்கப்பட்ட நிதியைப் போல மேலும் கூடுதலாக ஒரு மடங்கு நிதி இந்தத் துறையின் முக்கியத்துவத்தைக் கருதி ஒதுக்கப்பட்டுள்ளது.


- 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை ஐந்தாண்டு காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 531. தற்போதைய இந்த ஆட்சியில் நான்கரை ஆண்டுக் காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 965.

- கடந்த கால ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் 196 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 512 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

- முந்தைய ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் 134 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 380 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

- கடந்த ஆட்சியிலே 80 உயர்நிலைப் பள்ளிகள்தான் மேல்நிலைப்பள்ளிகளாக ஆக்கப்பட்டிருக்க இந்த ஆட்சியிலே 303 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டுள்ளன.

- கடந்த ஆட்சியிலே ஐந்தாண்டுக் காலத்தில் 8,450 இடைநிலை ஆசிரியர்கள் பணிகள் மட்டுமே வழங்கப்பட்டதற்கு மாறாக இந்த ஆட்சியிலே 41,887 இடைநிலை ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு முன்னுரிமைப்படி நியமிக்கப் பட்டுள்ளார்கள்.



- அதைப் போலவே கடந்த கால ஆட்சியில் வெறும் 843 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் மட்டுமே புதிதாக நியமிக்கப்பட்டதற்கு மாறாக இந்த ஆட்சியிலே 2,916 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணியிலே அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

- கடந்த கால ஆட்சியிலே 838 பட்டதாரி ஆசிரியர்கள்



நியமிக்கப்பட்டதற்கு மாறாக இந்த ஆட்சியில் 4,046 பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

- கடந்த ஆட்சியிலே சிறப்பாசிரியர் பணிகளிலே ஒருவர்கூட நியமனம் செய்யப்பட வில்லை. மாறாக இந்த நான்கரை ஆண்டுகளில் 2,270 பட்டதாரி சிறப்பு ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப் பட்டுள்ளார்கள். மேலும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களிலே 238 ஆசிரியர்கள் இந்த ஆட்சியிலே அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

- பத்தாம் வகுப்புத் தேர்விலும் 12ஆம் வகுப்புத் தேர்விலும் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களது உயர் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்வதென்று முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே 1996 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

- பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களில் இருந்து ஒவ்வொரு வகைத் தொழில் கல்விப் பிரிவுகளிலும் சேரும் முதல் பத்து நிலை மாணவர்களின் கல்விச் செலவை 1996–97 முதல் அரசே ஏற்றுக் கொள்கிறது.

- கிராமப்புற பள்ளி மாணவர்களுக்கு அனைத்துத் தொழிற் கல்விப் பிரிவுகளிலும் 15 விழுக்காடு இடஒதுக்கீடு திட்டம் 1997–98ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இதன் மூலம் 97–98இல் 864 மாணவர்களும், 98–99இல் 1,190 மாணவர்களும், 99–2000இல் 1,544 மாணவர்களும் பயன் பெற்றுள்ளனர்.

- 1999–2000ஆம் ஆண்டு முதல் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11, 12ஆம் வகுப்புகளில் 112 கோடி ரூபாய் செலவிலும், 2000–2001ஆம் ஆண்டு முதல் எஞ்சிய 516 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 75.66 கோடி ரூபாய் செலவிலும், 16 சென்னை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 192 இலட்சம் ரூபாய் செலவிலும், 12 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 279 இலட்சம் ரூபாய் செலவிலும், 5 அரசு சட்டக் கல்லூரிகளில் 155 இலட்சம் ரூபாய் செலவிலும், 60 அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் 28.22 கோடி ரூபாய் செலவிலும் கணினிப் பாடம் கற்பிக்கப்படுகிறது.

- தீவிர தொடக்கக் கல்வித் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டதன் விளைவாக 1999–2000ஆம்

ஆண்டில் 6 முதல் 14 வயது வரையுள்ள 27,000 குழந்தைகள் முந்தைய ஆண்டு சேர்க்கையை விட கூடுதலாகப் பள்ளிகளிலே சேர்க்கப்பட்டுள்ளனர்.

- 1998–99ஆம் ஆண்டு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்கள் வழங்கப்பட்ட வகையில் பயன்பெற்ற மாணவர்கள் 59.13 இலட்சம். இதற்காக அரசு வழங்கிய தொகை 25.31 கோடி ரூபாயாகும்.

- 857 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 40.49 கோடி ரூபாய் செலவில் வகுப்பறை வசதிகளும், 400 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு 3 கோடி ரூபாய் செலவில் கழிப்பறை வசதிகளும், 662 பள்ளிகளுக்கு 39.09 கோடி ரூபாய் செலவில் அறிவியல் ஆய்வகக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

- 1,544 பள்ளிகளுக்கு 6.98 கோடி ரூபாய்ச் செலவில் அறிவியல் கருவிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

- 400 பள்ளிகளுக்கு 2 கோடி ரூபாய் மதிப்பில் நூலகப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- மாணவர் உடல் நலன்காக்க 1999–2000இல் வாழ்வொளித் திட்டம் அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.

- பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு படித்து முடித்துச் செல்லும்போதே மாணவர்களுக்கு சாதிச்சான்றிதழ், வாழ்விடச் சான்றிதழ், குடும்ப வருமானச் சான்றிதழ் ஆகியன வழங்கும் திட்டம் 1999–2000ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டு அதன் மூலம் 14 இலட்சத்து 11,173 மாணவ, மாணவிகள் பயன் பெற்றுள்ளனர்.

- பள்ளிகளில் நியமனம் செய்திட இடை நிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆதி திராவிட வகுப்பினர் இல்லாத காரணத்தினால், 1997–98ஆம் ஆண்டு முதல் 17 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் ஒவ்வொன்றிலும் 50 மாணவர்கள் வீதம் ஆண்டு தோறும் 850 ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சி அளித்திடும் தனிப் பிரிவுகள் கூடுதலாகச் செயல்படுகின்றன.

- அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் பயின்று, கடந்த ஆட்சியில்



பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 1998–99 ஆம் ஆண்டு முதல் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு; 2000–2001 இல் 40 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. ஐந்தாண்டுகள் வரை வயது வரம்பும் தளர்த்தப் பட்டுள்ளது.

- 1997இல் உயர் கல்வித் துறை என்று தனியே ஒரு துறை தலைமைச் செயலகத்தில் உருவாக்கப்பட்டது.
- கடந்த கால ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 31 சுயநிதி பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டதற்கு மாறாக இந்த நான்கரை ஆண்டுகளில் 81 சுயநிதி பொறியியல் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- கடந்த கால ஐந்தாண்டு ஆட்சியில் 32 சுயநிதி பாலிடெக்னிக் நிறுவனங்கள் தொடங்கப்பட்டதற்கு மாறாக இந்த நான்கரை ஆண்டுகளில் 72 சுயநிதி பாலிடெக்னிக் நிறுவனங்கள் தொடங்கப் பட்டுள்ளன.
- பொறியியல் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையில் 1997–98 முதல் ஒற்றைச் சாளர முறை அறிமுகம் செய்யப்பட்டது.
- 1998–99 முதல் பாலிடெக்னிக் நிறுவனங்களிலும் இந்த ஒற்றைச் சாளர முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.
- கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் 65 புதிய சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டதற்கு மாறாக இந்த நான்கரை ஆண்டுகளில் 125 புதிய சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகளுக்கும் இரண்டு அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- 42 தனியார் கல்லூரிகளில் எம்.பி.ஏ., எம்.சி.ஏ., ஆகிய பட்டப் படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. 60 அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் கணினி அறிவியல் பாடம் தொடங்கப்படுகிறது.
- இளம் கலை/இளம் அறிவியல் பட்டப்படிப்பில் தமிழ்வழி பயின்ற 76,526 மாணவ மாணவியர்க்கு 400 ரூபாய் வீதம் சுமார் மூன்று கோடி ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை மெட்ரிகுலேஷன் மற்றும் மாநில அரசு பாட முறையை பின்பற்றும் பள்ளிகளில் தாய்மொழி அல்லது தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்றும் தமிழ் அல்லது தாய்மொழியே முதல் மொழியாகப் பயிற்றுவிக்கப்படவேண்டும் என்றும் இந்த அரசின் சார்பில் 19–11–1999 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால் இந்த ஆணையை எதிர்த்து நீதிமன்றத்திலே தடையாணை பெறப்பட்டதால் அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.
- 1997–98இல் தமிழ்நாடு தகவல் தொழில் நுட்ப மையம் தொடங்கப்பட்டுள்ளது.
- 1–1–96 முதல் கலைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக கல்லூரி ஆசிரியர்களுக்கு யு.ஜி.சி. ஊதிய விகிதம் தரப்படுகிறது.
- 1996இல் நெல்லையில் சட்டக் கல்லூரி தொடங்கப் பட்டது. இந்தக் கல்லூரிக்கு புதிய கட்டடம் 3.10.2000 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- திருச்சியில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் பெயரில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு, அதற்கான கட்டடமும் கட்டி முடிக்கப்பட்டு இந்த ஆண்டு ஜூன் திங்களில் திறந்து வைக்கப்பட்டது.
- தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி 1–10–2000 அன்று திறக்கப்பட்டது.
- சேலத்தில் 17–9–1997 அன்று பெரியார் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.
- 20–9–1997இல் சென்னையில் டாக்டர் அம்பேத்கர் பெயரிலே சட்டப் பல்கலைக் கழகம் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் அவர்களைக் கொண்டு திறந்து வைக்கப்பட்டது.
- 15 பல்கலைக் கழகங்களில் பழங்கால மன்னர்கள், தலைவர்கள், புலவர்கள் பெயரில் 25 இலட்சம் ரூபாய் வீதம் ஏழு கோடி ரூபாய் செலவில் 28 அறக்கட்டளைகள் தொடங்கப்பட்டுள்ளன.
- உயர்கல்வியில் தமிழ் மொழியைப் பயிற்று மொழியாக்குவது குறித்து முதல்வர் தலைமையில் உயர்மட்டக் குழு துணைத் தலைவராக கல்வி அமைச்சர் பேராசிரியர் மற்றும் செயல் தலைவராக முனைவர் வா.செ. குழந்தைசாமி நியமிக்கப் பட்டுள்ளனர்.
- 1999இல் உருது அகாடமி தொடங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக பதினைந்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மலர்க்கூட்டமென மொய்த்துள்ள கல்வித்துறை சாதனைகள் பாராட்டுக்குரியன.

★ ★ ★

# வேளாண் துறையின் வளர்ச்சியும் விவசாயிகள் மீது அரசின் அக்கறையும்

அய்யன் வள்ளுவரின் கருத்துப்படி அனைத்துலகையும் தாங்கி நிற்கும் அச்சாணியாக அமைந்தோர் உழவர் குடிமக்கள் என்பதை உணர்ந்து அவர்கள் எல்லாவகையிலும் ஏற்றமுற எத்தனை திட்டங்கள் – எத்தனை சாதனைகள் இந்த அரசின் முயற்சியால் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. முதலில் உணவுப் பொருட்கள் உற்பத்தியில் கடந்த நான்கரை ஆண்டுகளில் எந்த அளவிற்கு முன்னேறியுள்ளோம் என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் தெளிவாக்கிடும்.

**1995–96 – 64.05** இலட்சம் மெட்ரிக் டன்கள்

**1996–97 – 69.30** இலட்சம் மெட்ரிக் டன்கள்

**1997–98 – 81.04** இலட்சம் மெட்ரிக் டன்கள்

**1998–99 – 94.12** இலட்சம் மெட்ரிக் டன்கள்

**அரிசி உற்பத்தியில் சாதனை**

**1995–96 – 52.90** இலட்சம் மெட்ரிக் டன்கள்

**1996–97 – 58.05** இலட்சம் மெட்ரிக் டன்கள்

**1997–98 – 68.94** இலட்சம் மெட்ரிக் டன்கள்

**1998–99 – 81.41** இலட்சம் மெட்ரிக் டன்கள்


**தமிழகத்தின் முப்பெரும் சாதனை**

15–5–2000 தேதிய 'பிசினஸ் லைன்' என்ற ஆங்கில இதழில்

“பஞ்சாப் மாநிலம் கோதுமை உற்பத்தித் திறனில் தொடர்ந்து முன்னணியில் இருந்தாலும் அரிசி உற்பத்தித் திறனில் பஞ்சாப் மாநிலம் இதுவரை தக்க வைத்துக் கொண்டிருந்த தனிச் சிறப்பான நிலையை மாற்றி தமிழ்நாடு முதல் இடத்திற்கு வந்துவிட்டது. இதனை அசோசியேட்டட் சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் நடத்தியுள்ள ஆய்வு வெளிப்படுத்துகிறது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனில் அரியானா மாநிலம் இதுவரை முதலாவது இடத்தில் இருந்து வந்துள்ளது. ஆனால் அந்த முதல் நிலை தற்போது அரியானாவிடமிருந்து நழுவிவிட்டது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித்



திறனில் அரியானா, ஒரிசா ஆகிய இரண்டு மாநிலங்களையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு தமிழ்நாடு முதல் இடத்திற்கு வந்து விட்டது. **1998–99** ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு என்று மூன்று தனிச் சிறப்புகள் சேர்ந்துள்ளன. இந்தியாவிலேயே தமிழ்நாடு அரிசி உற்பத்தித் திறனில் முதல் இடம், கரும்பு உற்பத்தித் திறனில் முதல் இடம், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனில் முதல் இடம் பெற்றுள்ளது'' என்று எழுதப்பட்டுள்ளது.



இந்திய மாநிலங்களில் அரிசி உற்பத்தியில் தமிழகத்தின் உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டேருக்கு **3,579** கிலோ எனச் சாதனை புரிந்து முதல் இடத்தில் உள்ளது.

உலகத்திலேயே கரும்பு உற்பத்தியில் தமிழகத்தின் உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டேருக்கு **134.16** மெட்ரிக் டன் எனச் சாதனை செய்து முதல் இடத்தில் இருக்கிறது.

இந்திய மாநிலங்களில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகத்தின் உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டேருக்கு **1,650** கிலோ எனச் சாதனை புரிந்து அதிலும் முதல் இடத்தில் இருக்கிறோம். (Based on Season & Crop Report 1998-99 of Director of Statistics)

ஒரிசா புயல், மேற்கு வங்கப் புயல், ஆந்திர மாநில வறட்சி நிலை போன்ற காரணங்களால் அகில இந்திய அளவில் உணவு உற்பத்தி குறைந்தாலும், தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கூடுதல் உணவு உற்பத்தியால் இந்திய நாட்டு உணவு நிலை மேம்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. (FINANCIAL EXPRESS dated 14.2.2000)

கடந்த கால ஆட்சியில் தமிழகத்தில் **1995–96** ஆம் ஆண்டு காய்கறிகளின் மொத்த உற்பத்தி **39.57** இலட்சம் மெட்ரிக் டன். **1999–2000** ஆம் ஆண்டு காய்கறிகளின் மொத்த உற்பத்தி **49.13** இலட்சம் மெட்ரிக் டன்.

**1995–96** ஆம் ஆண்டு தமிழகத்தில் பழங்கள் மொத்த உற்பத்தி **31.20** இலட்சம் மெட்ரிக் டன். **1999–2000** ஆம் ஆண்டு பழங்கள் மொத்த உற்பத்தி **46.12** இலட்சம் மெட்ரிக் டன்.

**100 உழவர் சந்தைகள் - ஒரு புதிய சாதனை**

உழுவோரும், நுகர்வோரும் பயன்பெற வேண்டுமென்ற எண்ணத்துடன் முதல்வர் கலைஞரால் உருவாக்கப்பட்ட ஒரு திட்டம்தான் உழவர் சந்தை. மதுரையில் **14.11.1999** அன்று, முதல் உழவர் சந்தை திறக்கப் பட்டது. ஓராண்டு காலத்தில் **100** உழவர் சந்தைகள் திறக்கப்பட்டு சாதனை நிகழ்த்தப் பட்டுள்ளது. **100**–வது உழவர் சந்தை **14.11.2000** அன்று பல்லாவரத்தில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இதுவரை மாநகராட்சி பகுதிகளிலே **12** உழவர் சந்தைகளும், நகராட்சிப் பகுதிகளிலே **76** உழவர் சந்தைகளும், பேரூராட்சி பகுதிகளிலே **12** உழவர் சந்தைகளும் திறக்கப்பட்டுள்ளன.

**23–11–2000** வரை உழவர் சந்தைகளில் வரப் பெற்ற காய்கறிகள் **17** கோடியே **85** இலட்சத்து **51** ஆயிரத்து **130** கிலோ. இந்தக் காய்கறிகளின் மதிப்பு **120** கோடியே **82** இலட்சத்து **75** ஆயிரம் ரூபாய். பயனடைந்த விவசாயிகள் **16** இலட்சத்து **8** ஆயிரத்து **914** பேர். பயனடைந்த நுகர்வோர் **5** கோடியே **10** இலட்சத்து **92** ஆயிரத்து **740** பேர்.

வெளியே மொத்த வியாபாரிகளிடம் விற்பதைக் காட்டிலும் **20** முதல் **25** சதவிகிதம் கூடுதலாக விவசாயிகளுக்கு விலை கிடைக்கிறது என்று ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு இந்த அரசினால் வழங்கப்பட்ட முக்கிய சலுகைகளின் பட்டியல் பின்வருமாறு :–

இந்தியாவிலேயே முதன்முதலாக **1990** இல் கலைஞர் அரசு விவசாயிகளுக்கு வழங்கிய இலவச மின்சாரம்; தொடர்ந்து எத்தனையோ எதிர்ப்புகள், சிரமங்களுக்கிடையிலும் நீடிக்கப்பட்டு அதனால் இலட்சக்கணக்கான விவசாயிகள் பயன் பெற்று

வருகிறார்கள். இத்திட்டத்தின் மூலம் 16 இலட்சம் மோட்டார் பம்புகள் பயனடைகின்றன.

விவசாயிகளுக்கு 8,00,000 உர அடையாள அட்டைகள் 11.41 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

1995–96இல் நெல்கொள்முதல் குவிண்டால் ஒன்றுக்கு மோட்டாரகம் ரூ. 360; சன்ன ரகம் ரூ.375;

1.9.2000 முதல் குவிண்டால் ஒன்றுக்கு மோட்டா ரகம் ரூ.510; சன்ன ரகம் ரூ.540. அதாவது கடந்த கால ஆட்சியை விட குவிண்டால் ஒன்றுக்கு மோட்டா ரகத்திற்கு 150 ரூபாயும் சன்ன ரகத்திற்கு 165 ரூபாயும் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

காவிரிப் பாசனப் பகுதிகளில் கொள்முதல் செய்யும் போது சாதாரண மற்றும் "ஏ" கிரேடு ரக நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணய விலையைவிட குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் இடைநிகழ் செலவாக அரசினால் விவசாயிகளின் நலன் கருதி வழங்கப்படுகிறது.

இரண்டாம்தர நெல்லுக்கு தர வெட்டுத்தொகை ரூ.15இல் இருந்து ரூ.5ஆகவும், மூன்றாம்தர நெல்லுக்கு ரூ.20இல் இருந்து ரூ.10ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

4 ஆண்டுகளில் 32 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

நெல் கொள்முதல் 95–96இல் 2.45 இலட்சம் டன்; 97–98இல் 16.78 இலட்சம் டன். 1998–99இல் 11.81 இலட்சம் டன், 1999–2000இல் 12.13 இலட்சம் டன்.

மைய அரசு நிர்ணயவிலையைவிட முந்தைய அரசினால் கரும்பு டன் ஒன்றிற்கு ரூ.50, ரூ.60 என்ற அளவிலேயே விலையை உயர்த்தி பரிந்துரை விலை நிர்ணயிக்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த அரசுதான் மைய அரசு நிர்ணயவிலையைவிட டன் ஒன்றிற்கு ரூ.180/– கூடுதலாகப் பரிந்துரை விலையை நிர்ணயித்தது.

சர்க்கரை கட்டுமானத்தைப் பொறுத்து, 8.5 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றிற்கு 1995–96இல் முந்தைய அரசு பரிந்துரை விலை ரூ.560/–; தற்போது இந்த அரசில் பரிந்துரை விலை ரூ.740; 1999–2000இல் சர்க்கரை ஆலைகளால் விவசாயிகளுக்குக் கூடுதல் விலைகளும் வழங்கப்படுகின்றன. 10 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.1000 வழங்கப்படும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

கரும்பு பயிர்க்கடன் ரூ. 45,000 என்பது ரூ. 55,000 ஆகவும், இதர பயிர்களுக்கு ரூ. 25,000 என்பது ரூ.35,000 ஆகவும் தற்போது உயர்த்தி வழங்கப்படுகிறது.

கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்க 1997–98இல் கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு அரசு வழங்கிய முன்பணம் ரூ.76.41 கோடி; 1998–99இல் இத்தொகை ரூ.210 கோடி. 1999–2000 ஆண்டிற்கு ரூ.30 கோடி.

இத்துடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குத் தேவைப்படும் வெளிச்சந்தை சர்க்கரைக்கு முன்பணமாக ரூ.36.66 கோடி.

டிசம்பர் 1996இல் ஏற்பட்ட வெள்ளச்சேதம் காரணமாக விளைபொருள் இழப்புக்காக வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ. 55.15 கோடி. இதன் மூலம் பயன் பெற்ற விவசாயிகள் 10,05,166 பேர்.

மீண்டும் நவம்பர் 1997இல் ஏற்பட்ட வெள்ளச்சேதம் காரணமாக – விவசாயிகளுக்கு கலைஞர் அரசினால் வழங்கப்பட்ட பயிர்கள் இழப்பீட்டுத் தொகை உட்பட வெள்ள நிவாரணம் ரூ.59 கோடி. இதன் மூலம் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 2,50,297.

1997ல் ஏற்பட்ட பெருமழை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசினால் ரத்து செய்யப்பட்ட நிலவரி மதிப்பு ரூ.44 கோடி.

1999 – மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட திருச்சி, கரூர், தஞ்சை, நாகை, புதுக்கோட்டை, திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை ரூ.33.28 கோடி.

இயற்கைச் சீற்றத்தால் ஆடு இறந்தால் ரூ. 1000/; மாடு இறந்தால் ரூ.5,000; கன்று இறந்தால் ரூ. 3,000/–



நிவாரணத் தொகையாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு அவ்வாறே வழங்கப்பட்டு வருகிறது.

மூன்று குதிரைத்திறன் கொண்ட ஆயில் என்ஜின்களுக்குப் பதிலாக ஐந்து குதிரைத் திறன் கொண்ட ஆயில் என்ஜின்கள் வாங்க சிறு விவசாயிகளுக்கு 25 விழுக்காடு அளவிற்கும், மிகச்சிறு விவசாயிகளுக்கு 30 விழுக்காடு அளவிற்கும், தாழ்த்தப்பட்ட/மலைவாழ் இன விவசாயிகளுக்கு 50 விழுக்காடு அளவிற்கும் மானியத் தொகை அரசினால் வழங்கப்படுகிறது.



கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு 25,000 ரூபாய் வரை வழங்கப்படும் கடன் தொகைக்கு விதிக்கப்படும் 13 சதவிகித வட்டி 12 சதவிகிதமாகவும், 50,000 ரூபாய் வரையிலான கடன் தொகைக்கு விதிக்கப்படும் 16 சதவிகித வட்டி 15 சதவிகிதமாகவும் குறைப்பதென்று 24-10-2000 அன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1996-97**இல் வறட்சியாலும், 1997 நவம்பர் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாகவும் மத்தியகாலக் கடன்கள் நீண்டகாலக் கடன்களாகவும் மாற்றப்பட்டதோடு அபராத வட்டி ரூ.50 கோடி விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

**1997-98**ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குறுகியகாலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றியதால் ரூ.62.35 கோடி அரசுக்கு செலவு ஏற்பட்டது.

**30-6-99**க்கு முன்பு தவணை தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களுக்கு, 31-7-2000க்குள் வட்டியுடன் கடனைச் செலுத்திய 3,40,727 சிறிய, பெரிய விவசாயிகள் அனைவர்க்கும் 13.20 கோடி ரூபாய் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது.

**1998-99**ல் நடப்புக் கடன்தொகையை முறையாக திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு கடன் தொகையில் 6.25 சதவிகிதம் வட்டி ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடனை 1.7.1998 முதல் 30.9.1999 வரையான தவணைத் தேதிக்குள் வட்டியுடன் திருப்பிச் செலுத்திய சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட 6.25 விழுக்காடு வட்டி ஊக்குவிப்புத் தொகை ரூ.6.58 கோடியாகும்.

இதனால் பயன்பெற்ற சிறு மற்றும் குறு விவசாயிகளின் எண்ணிக்கை – 1,47,654.

**1999-2000**இல் இந்த ஊக்குவிப்புத் தொகை 7 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த விவசாயிகள் எண்ணிக்கை 2,42,817; இந்த விவசாயிகளுக்கு ரூ.19.72 கோடி அளவிற்கு வட்டி ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது.


**1995-96**இல் கூட்டுறவு வங்கிகள் மூலம் ஒருவருக்கு வழங்கப்பட்ட நகைக் கடன் ரூ.25,000 என்பது, 6.9.1996 முதல் ரூ.50,000 என்றும், 27.5.1998 முதல் ரூ.1 இலட்சம் என்றும் உயர்த்தப்பட்டுள்ளது.

யூரியா உரத்திற்கு விற்பனை வரி 4 விழுக்காடு என்பது 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நிலமற்ற விவசாயிகளுக்கு வயதின் அடிப்படையில் வழங்கப்படும் மாத ஒய்வூதியம் ரூ. 100 என்பது 1997இல் ரூ.150 ஆகவும், 2000–2001இல் ரூ. 200 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக இதுவரை விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் (Track Rent) 2000–2001இல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

வரலாற்றிலேயே முதல்முறையாக 2000–2001 நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்குமுன் விவசாயச் சங்கப் பிரதிநிதிகளை 12.3.2000 அன்று அழைத்துப்பேசி, அவர்களின் கருத்தினைப் பெற்று பரிசீலித்து முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.



1999–2000இல் மாநில நிதியைக் கொண்டு 10 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 1000 ஹெக்டேர் நிலப் பரப்பில் மொத்தம் 10,000 ஹெக்டேர் தரிசு நிலத்தினை மேம்பாடு செய்து பழமரக் கன்றுகள் 3979 ஹெக்டேரிலும், வேளாண் மரக்கன்றுகள் 6,021 ஹெக்டேரிலும் 4 கோடியே 90 இலட்ச ரூபாய் செலவில் நடப்பட்டுள்ளன.

1996–97லிருந்து 2000–2001 வரை 500 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டடங்கள் கட்டித்தர அரசு முடிவெடுத்து இதில் 59 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டடங்கள் ரூ.5 கோடியே 6 இலட்ச ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் கட்டடம் கட்டும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

50 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டடங்கள் கட்டித்தர அரசு முடிவெடுத்து, இதில் 16 கட்டடங்கள் ரூ.2கோடியே 8 இலட்ச ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. 16 வங்கிகளின் கட்டடப்பணி நடைபெற்று வருகிறது.

1643 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு பாதுகாப்பு அறை மற்றும் பாதுகாப்பு கதவுகள் வசதி ரூ.21கோடியே 98 இலட்ச ரூபாய் செலவில் செய்து தரப்பட்டுள்ளது.

விவசாயத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க திரு.கோலப்பன், ஐ.ஏ.எஸ்., தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

கோலப்பன் குழுவின் பரிந்துரைகளையேற்று சொந்த ஏர் மாட்டுடன் உழவு செய்யும் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் என்றும், சொந்த ஏர் மாடு இல்லாத தொழிலாளர் களுக்கு நாள் ஒன்றுக்கு 54 ரூபாய் என்றும் கூலி உயர்த்தப்பட்டதோடு வேளாண்மைத் தொழிலில் ஈடுபடும் மற்றத் தொழிலாளர்களுக்கும் இதுபோன்று கூலி உயர்த்தப்பட்டது.

விவசாயத் தொழிலாளர்களுக்கென்று தனியாக நல வாரியம் ஒன்று தொடங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ●

ஒரு மனிதனுக்கு வாழ்வில் வளம் சேர்க்க வற்றாத செல்வம் இருக்கலாம். அவன் ஆணை கேட்டு நடக்க ஆள் அம்புகள் ஆயிரக்கணக்கில் இருக்கலாம்; அதிகாரம் செலுத்தும் வாய்ப்புள்ள அரியாசனத்தில் கூட அமர்ந்திருக்கலாம்; அறிவுடையோன் என்று அறிஞர் போற்றும் கீர்த்தியும் இருக்கலாம்; எல்லாம் இருந்தும் என்ன பயன்?

அதனை "நல்வாழ்வு" என்று நவின்றிட இயலுமோ! இயலாது, இயலவே இயலாது! நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் எனும் முதுமொழி; அக்கால மனிதனின் அனுபவத்தினால் விளைந்த தன்றோ!

வசதி வாய்ப்புடையோரே நோயற்ற நல் வாழ்வுக்குச் சிரமம் பல ஏற்க வேண்டியிருக்கிறது என்கிற போது; சாதாரண சாமானிய நடுத்தர மக்கள் ஏழை எளியோர் நல்வாழ்வை நாடிச் செல்ல அவர்கள்

- எய்ட்ஸ் என்னும் கொடிய நோயைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் இந்தியாவில் முதல் இடத்தில் உள்ளது. (National Aids Control Organisations' Report)


- இருக்கும் வளத்தைப் பகிர்ந்துகொள்ள பிறக்கும் விகிதத்தைக் குறைத்து மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் இந்தியாவிலே முதல் இடத்தை வகிக்கின்றது. குழந்தைகள் பிறப்பு தேசிய அளவில் சராசரி 27; அதாவது மக்கள் தொகை கணக்குப்படி 1000 பேர் என்றால் ஆண்டு ஒன்றுக்கு புதிதாக 27 பேர் பிறக்கிறார்கள். ஆனால் தமிழகத்தின் சாதனை 19; அதாவது ஆயிரம் பேர் கொண்ட மக்கள் தொகைக்கு 19 பேர் மட்டுமே தமிழகத்திலே பிறக்கிறார்கள்.

# நாடிச்சென்று வழங்குகிறோம் நல்வாழ்வு!

தமக்காக அமைத்துக் கொண்ட அரசு தானே கை கொடுக்க வேண்டும், வழி காட்டவும் வேண்டும். அந்தக் குறிக்கோளைக் குறிப்பிடும் நோக்கத்துடன் தான் "மக்கள் நல்வாழ்வுத் துறை" என இத்துறைக்குக் கலைஞர் அரசு பெயரே சூட்டியுள்ளது.

**இத்துறையின் சாதனைகள்**

- குழந்தைகள் நலம் காக்க போலியோ ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றியதில் தமிழகம் இந்தியாவில் முதல் இடம் வகிக்கின்றது. (According to National Polio Surveillance Programme - W.H.O. Report)



- சிசு மரண விகிதத்தை குறைத்துள்ளதிலும் தமிழகம் மகத்தான சாதனை புரிந்துள்ளது. 1000 பேர் பிறக்கிறார்கள் என்றால் இதில் பிறந்த ஓராண்டிற்குள் அகில இந்திய அளவில் 72 குழந்தைகள் இறந்து போகிறார்கள். ஆனால் தமிழகத்தில் 1000 பேர் பிறக்கிறார்கள் என்றால் 53 குழந்தைகள் மட்டுமே இறந்து போகிறார்கள்.

- 1995–96ஆம் ஆண்டு கடந்த ஆட்சியிலே மக்கள் நல்வாழ்வுத் துறைக்கென ஒதுக்கப் பட்ட 688.85 கோடி ரூபாய் என்பது 2000–2001ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையிலே 1263 கோடி ரூபாய் என்ற அளவிற்கு அதாவது சுமார் இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

- அரசு மருத்துவமனைகள் மூலம் அரசின் சார்பில் கடந்த நான்காண்டுகளில் மாத்திரம் ஏழை எளியோர்க்கு வழங்கப்பட்ட மருந்துப் பொருள்களின் மதிப்பு 354 கோடி ரூபாயாகும்.

- 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் நியமிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை 1,327 என்பதற்கு மாறாக கடந்த நான்காண்டு காலத்தில் மட்டும் 2,641 மருத்துவர்கள் அதாவது இரண்டு மடங்கு அளவிற்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

- அது போலவே கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலே நியமிக்கப்பட்ட 786 செவிலியர்களுக்கு மாறாக கடந்த நான்காண்டு கால ஆட்சியிலே 1,570 செவிலியர்கள்.

- 1989–90 மற்றும் 1990–1991 ஆகிய இந்த இரண்டே ஆண்டுகளில் கலைஞர் ஆட்சியிலே 136 தொடக்க சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டன. பிறகு 1991 முதல் 1996 வரையிலான ஐந்தாண்டுகளில் 15 கோடியே 92 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் 213 தொடக்க சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே கட்டடங்கள் கட்டப்பட்டன. மீண்டும் 1996ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சிக்கு வந்த போது 653 தொடக்க சுகாதார நிலையங்கள் சொந்தக் கட்டடம் இல்லாத நிலையிலே இருந்தன. எனவே சொந்தக் கட்டடம் இல்லாத தொடக்க சுகாதார நிலையங்களே இல்லை என்ற நிலையை உருவாக்குவோம் என்று அறிவித்து, அதன்படி 1996க்குப் பின் கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 653 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கும், 200 துணை சுகாதார மையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட 61 கோடியே 16 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு அதில் 613 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 196 துணை சுகாதார மையங்களுக்குமென கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

- முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் கட்டிய மருத்துவமனைக் கட்டடங்கள் 145. கழக அரசு 1996க்குப்பின் நாலரை ஆண்டுகளில் இது வரை கட்டிமுடித்துள்ள மருத்துவமனைக் கட்டடங்களின் எண்ணிக்கை 261.

- கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் 18 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாகத் தொடங்கப் பட்டுள்ளன.

- கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்காக 28 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு வட்டார மருத்துவ மனைகளாக மேம்படுத்தப் பட்டுள்ளன.



- மருத்துவத்துறை நவீன மயமாகி வருவதையொட்டி கருவுற்ற தாய்மார்களுக்குத் தரமான சிகிச்சையளித்திட 201 மருத்துவமனைகளுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- இரத்தப் பரிசோதனைகளைத் துல்லியமாக உடனுக்குடன் அறிய உதவும் செமி–ஆட்டோ அனலைசர் (Semi-Auto Analyser) என்னும் நவீன கருவி ஒன்றரை கோடி ரூபாய் செலவில் 140 மருத்துவமனைகளுக்கு வழங்கப் பட்டுள்ளன.

- மருத்துவப் பரிசோதனைக்காக மனித உறுப்புகளை வண்ணத்தில் படம் பிடித்துக் காட்டும் கலர் டோப்லர் (Colour Doppler) கருவிகள் இரண்டு வாங்கப்பட்டு, சென்னை அரசு பொது மருத்துவமனைக்கும், மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டுள்ளன.

- நோய்களைக் கண்டறிந்து, உரிய சிகிச்சை அளிக்க உதவிடும் நவீன கருவிகள் ரூ.20 கோடி செலவில் அனைத்து மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

- மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கு 26 நோயாளி ஊர்திகள் ஒரு கோடியே பன்னிரண்டு இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

- 1989ல் கலைஞர் ஆட்சியில் தொடங்கப்பட்ட சேலம் மருத்துவக் கல்லூரிக்குப் பிறகு 26.10.1997இல் தொடங்கப்பட்ட திருச்சி

கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரிக்கு ரூ.12 கோடியே 73 இலட்சம் செலவில் கட்டப்பட்ட கட்டடம் 26.6.2000 அன்று திறக்கப்பட்டது.

- தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி 1.10.2000 அன்று தொடங்கப்பட்டது.
- வேலூரில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி 2000–2001இல் தொடங்கப்பட உள்ளது. தொடர்ந்து குமரி மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும்.
- 1996க்குப் பின் தனியார் பல் மருத்துவக் கல்லூரி ஒன்றும், தனியார் மருந்தாக்கக் கல்லூரிகள் மூன்றும், தனியார் செவிலியர் பயிற்சி நிறுவனங்கள் பதினாறும், தனியார் பிசியோதரபி கல்வி நிறுவனங்கள் இருபத்தி இரண்டும், தனியார் முடநீக்கியல் கல்வி நிறுவனங்கள் மூன்றும் தொடங்கப்பட்டுள்ளன.
- சித்த மருத்துவத்தில் இரண்டு தனியார் கல்லூரிகள், ஆயுர்வேத மருத்துவத்தில் ஒரு தனியார் கல்லூரி, ஓமியோபதி மருத்துவத்தில் நான்கு தனியார் கல்லூரிகள், இயற்கை மருத்துவத்தில் இரண்டு தனியார் கல்லூரிகள், 'அரசு யுனானி மருத்துவக் கல்லூரி' ஒன்று எனத்தொடங்கி நடைபெற்று வருகின்றன.
- சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி வளாகத்தில் ஒரு செவிலியர் பயிற்சிப்பள்ளி 13–10–2000ல் தொடங்கப்பட்டுள்ளது.
- மாவட்ட / வட்ட தலைமை மருத்துவமனைகளில் 10 ஓமியோபதி மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.
- மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் ஒவ்வொரு மருத்துவமனையிலும் தலா மூன்று ஆயுர்வேதா மற்றும் யுனானி மருத்துவப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.
- சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகத்தில் யோகா மற்றும் இயற்கை முறை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.
- சித்தமுறை மருத்துவத்தை மேம்படுத்தவும், சித்த மருத்துவர்களின் பதிவு மற்றும் புதுப்பித்தல் முறைகளை வரன்முறைப்படுத்தவும், தமிழ்நாடு சித்த மருத்துவ முறை சட்டம் 1997, மாநில அரசால் இயற்றப்பட்டு அமுலுக்கு கொண்டுவரப் பட்டுள்ளது.



- கடும் நோயால் அவதியுறும் ஏழை மக்களின் மருத்துவச் சிகிச்சைக்கு உதவிட "தமிழ் நாடு மாநில நோயாளர்கள் நிதி அமைப்பிற்கு" ரூ.10 கோடி 30.3.1998 அன்று அரசினால் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு இந்த நிதிக்கு மேலும் ஐந்து கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளது.
- அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் முழு உடல் பரிசோதனைத் திட்டத்தைத் தொடங்கிட 11.6.1999 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.
- மருத்துவமனைகளின் உள்நோயாளிகளின் வசதிக்காக ரூ.8 கோடி செலவில் கட்டில்கள், மெத்தைகள், படுக்கை விரிப்புகள் முதலியன புதிதாக வாங்கி வழங்கப்பட்டுள்ளன.
- புதிதாய் அமைந்த திருவாரூர், நாகை, பெரம்பலூர் மாவட்டங்களில் ரூ.5 கோடி செலவில் காசநோய் மையங்கள் கட்டப் பட்டுள்ளன.

**24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

- திட்டமிடப்பட்டவை 298 – இதுவரை செயலாக்கப் பட்டவை 250.

**வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வோர்க்கு ரூ.25,000 மருத்துவ சிகிச்சை நிதி**

- 1997–98இல் இதய நோய், சிறுநீரக நோய், புற்றுநோய் ஆகிய நோய்களுக்கு அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.25,000 அளிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இதுவரை 4,774 பயனாளிகளுக்கு 8 கோடியே 16 இலட்சத்து 31,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- அரசு மருத்துவமனைகளில் வெளி நோயாளிகள் பார்வை நேரம் பகல் 12 மணி வரை நீடிக்க ஆணையிட்டதின் மூலம் இலட்சக்கணக்கான ஏழையெளிய நோயாளிகள் பயனடைகிறார்கள். மருத்துவமனையிலே உள்ள நோயாளிகளைக் காண வரும் பார்வையாளர்களுக்கு முந்தைய அரசு விதித்திருந்த கட்டணம் இரண்டு ரூபாய் இந்த அரசு பொறுப்பேற்ற அன்றே ரத்து செய்யப்பட்டது.

- கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதிகள் உடனுக்குடன் கிடைத்திட 10 கோடி ரூபாய் செலவில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், மருத்துவ மனைகளுக்கும் 381 ஆம்புலன்ஸ் வண்டிகள்.

- 1996ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலும்,மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளிலும் சி.டி. ஸ்கேன் கருவிகளை நிறுவிட அரசு திட்டமிட்டு இதுவரை 17 அரசு மருத்துவமனைகளிலே அந்த வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது.

- ஜப்பானிய அரசின் 21 கோடி ரூபாய் மானிய உதவி பெற்று சென்னை எழும்பூர் குழந்தைகள் நல நிறுவனம் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையின் பல்வேறு துறைகளுக்கும் மருத்துவக் கருவிகளும், மருத்துவச் சாதனங்களும் வழங்கப்பட்டு குழந்தை மருத்துவம் மிகச் சிறந்த முறையில் பராமரிக்கப்படுகிறது.

**தொழில் நிறுவனங்களின் உதவியோடு மருத்துவமனை மேம்படுத்தும் திட்டம்**

- 1.11.1997 அன்று தமிழகத்தைச் சார்ந்த தொழிலதிபர்கள் கூட்டத்தை நடத்தி ஒரு சில மருத்துவமனைகளை அவர்களுடைய தொழில் நிறுவனங்களின் சார்பில் தத்து எடுத்துக் கொண்டு மேம்படுத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன்.

- அதன் பயனாக 51 தொழில் நிறுவனங்கள் 24 அரசு மருத்துவமனைகளையும் 69 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் 5 துணை சுகாதார நிலையங்களையும் மேம்படுத்திட பொறுப் பேற்றுக் கொண்டுள்ளன.

**கண்ணொளி வழங்கும் திட்டம்**

- 1972–73இல் கலைஞர் முதன் முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்த காலக் கட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு இடையில் தொய்வு ஏற்பட்டது. 1996க்குப் பின் இத்திட்டத்திற்கு மீண்டும் புத்துயிர் அளித்து அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் கண் சிகிச்சை பிரிவுகள் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளன.

- மேலும் முக்கிய வட்ட மருத்துவமனைகளில் கண் மருத்துவ சிகிச்சை பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

- 26 மாவட்டங்களில் நடமாடும் கண் சிகிச்சை பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- 4 ஆண்டுகளில் 13,42,000 பேருக்கு கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

- 2,87,776 பேருக்கு கண் உள் ஆடி (Intra-Ocular Lens) பொருத்தப்பட்டுள்ளது. ஏழையெளிய மக்களும் இந்த வசதியை எளிதில் பெறத்தக்க வகையில் "கண் உள் ஆடி"களுக்கு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டது.

- நவீன மருத்துவ சிகிச்சை பெறுவதற்கென தொலை தொடர்பு (Telemedicine) வழி மருத்துவத்தால் சென்னை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையுடன் வேலூர் மாவட்ட வாலாஜா மருத்துவமனை இணைக்கப் பட்டுள்ளது.

- அமெரிக்க நாட்டின் உதவியுடன் டெலிமெடிசின் டிரான்ஸ்மிஷன் யூனிட் டாக்டர்.எம்.ஜி.ஆர்.

மருத்துவ பல்கலைக்கழக வளாகத்திலும், ரெசீவர் யூனிட் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்திலும் அமைக்கப் படவுள்ளது.

- 60 வயதிற்கு மேம்பட்ட பரம்பரை சித்த மருத்துவர்களுக்கான மாத உதவித் தொகை ரூ. 150 என்பது ரூ. 500 ஆக உயர்வு.
- பயிற்சி மருத்துவர்களின் கோரிக்கையினை யேற்று அவர்களின் மாத ஊதியத்தினை உயர்த்திய இந்த அரசு தொடர்ந்து 1.3.2001 முதல் ஆண்டு தோறும் இந்த உதவித்தொகை 10 சதவிகிதம் உயர்த்தி வழங்கப்படும் எனவும் ஆணையிட்டுள்ளது.
- பல்வேறு மருத்துவ முதுநிலை பட்ட/பட்டய/ சிறப்பு மேற் படிப்புகளை அரசு மருத்துவக் கல்லூரிகளில் 1996ஆம் ஆண்டு முதல் துவங்குவதற்கான அனுமதி களை வழங்கியது இந்த அரசு.
- 1996–ஆம் ஆண்டு முதல் அரசு மருத்துவக் கல்லூரி களில் பல்வேறு மருத்துவ முதுநிலை பட்ட / பட்டய படிப்பிற்கான இடங்களின் எண்ணிக்கையை உயர்த்தி யுள்ளது இந்த அரசு.
- அரசு பல் மருத்துவக் கல்லூரியில் (BDS) இளநிலை பல் மருத்துவப் படிப்பின் இடங்களை 60லிருந்து 100 ஆக 1997ஆம் ஆண்டில் உயர்த்தியது இந்த அரசு.

**வாழ்வொளித் திட்டம்**

1999–2000ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட வாழ்வொளித் திட்டத்தின் மூலம் அனைத்து அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களிடையே செயல்படுத்தப்பட்டு முதற் கட்டமாக 59 இலட்சம் மாணவ மாணவியர்கட்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களுள் 29 இலட்சம் பேருக்கு உரிய சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளது. மேலும் 66 ஆயிரம் மாணவர்கள் குறிப்பான நோய்களுக்கான சிறப்புச் சிகிச்சை பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

**வருமுன் காப்போம் திட்டம்**

- இந்த அரசினால் மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக தொடங்கப்பட்ட இத் திட்டத்தின் மூலம் மருத்துவர்கள் கிராமங்களை நாடிச் சென்று முகாமிட்டு ஏழை யெளியோர்க்கு மருத்துவ பரிசோதனைகளும் சிகிச்சைகளும் வழங்கும் திட்டம் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இதுவரையில் வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் 848 முகாம்கள் நடைபெற்றுள்ளன. அந்த முகாம்களில் மருத்துவ பரிசோதனை செய்து கொண்ட ஏழை எளிய மக்களின் எண்ணிக்கை 84 இலட்சத்து 58 ஆயிரம் பேர். இவர்களில் தொடர் சிகிச்சைக்காக பெரிய மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப் பட்டவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 58 ஆயிரத்து 880 பேர். இங்கே பரிசோதிக்கப்பட்ட ஏழையெளிய நோயாளிகளுக்கு அரசின் சார்பில் இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு 4.58 கோடி ரூபாயாகும்.



இந்தச் சாதனைகளில் மாநிலத்தில் உள்ள எல்லா மக்களின் நலனும் பின்னிப் பிணைந்துள்ளது.

★ ★ ★

மக்களாட்சியில் அரசு நிர்வாகத்தை ஆலமரத்துக்கு ஒப்பிட்டால் அதன் வேர்களாகவும் விழுதுகளாகவும் உள்ளாட்சி அமைப்புகள் விளங்கு கின்றன. மனிதனோடு ஒப்பிடும்போது அந்த அமைப்புகள் நாடி நரம்புகளாகவும் உயிர் மூச்சாகவும் இருக்கின்றன.

இத்தனை முக்கியத்துவம் வாய்ந்த இந்த அமைப்புகள் இடையில் பத்தாண்டுக் காலம் செயல்பட முடியாமலே கட்டுண்டு கிடந்தன. நான்காவது முறையாக இந்த ஆட்சி 1996ஆம் ஆண்டு அமைந்த பிறகு தான் உடனடியாக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலை அறிவித்து மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள் அனைத்திலும் 1,16,747 மக்கள் பிரதிநிதிகள் நிர்வாகப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புகளைப் பெற்றனர்.


அந்தப் பொறுப்புகளில் மகளிருக்கு அனைத்துப் பதவிகளிலும் 33 விழுக்காடு ஒதுக்கீடு செய்து பெரும் சாதனையைப் புரிந்ததின் காரணமாக 44,143 பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பதவியேற்கும் நிலையை இந்த அரசு செய்து காட்டியது.

இந்த அமைப்புகளுக்குத் தேவை யான உரிமைகளை வழங்கி, உதவிகளையும் உடனுக்குடன் செய்து, அரசு நிர்வாகத்திற்கும் மக்களுக்கு மிடையே இருந்திடும் தொலைவைச் சுருக்கி, நெருக்கத்தை ஏற்படுத்தி, நேர்மையான முறையில் நெறி பிறழாமல் இந்த அமைப்புகள் செயல்பட எல்லா வகையிலும் இந்த அரசு உறுதுணையாக இருக்கிறது என்பதற்கான சான்றுகள் பின்வருமாறு :

**உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி அதிகாரம்**

உள்ளாட்சி அமைப்புகள் யாவும் சுய ஆட்சி அமைப்புகளாக செயல்பட மாநில அரசு நிதி மற்றும் உரிய பிற அதிகாரங்களை முழுமையாகப் பகிர்ந்தளித்து ஒவ்வொரு நிலையிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தெளிவாக பொறுப்புகளை வரையறை செய்ததோடு ஜனநாயக அமைப்பில் மக்களின் பங்கினை ஊக்கப்படுத்தும் நோக்குடன் கிராம சபையையும் வலுப்படுத்தி வருகிறது.

திட்டங்கள் தாமதமின்றி உடனுக்குடன் நிறை வேற்றப்படவேண்டும் என்பதற்காக, உள்ளாட்சி அமைப்புகளில் திட்டங்களுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்படும் நிதிவரம்பு 1996க்குப் பின் சென்னை மாநகராட்சிக்கு ரூ.7.50 இலட்சம் வரை என்பது ரூ.50 இலட்சம் வரை என்றும், மற்ற மாநகராட்சிகளுக்கு ரூ.2 இலட்சம் வரை என்பது ரூ.25 இலட்சம் வரை என்றும், நகராட்சிகளுக்கு



ரூ.10 ஆயிரம் என்பது ரூ.10 இலட்சம் வரை என்றும் உயர்த்தப்பட்டுள்ளது.

மாவட்டத் திட்டக் குழுவிற்கு மாவட்ட ஊராட்சித் தலைவரையே தலைவராக நியமிப்பது என்று அரசு அறிவித்துள்ளது.

ஊராட்சி அமைப்புகள் சுதந்திரமாகச் செயல்பட ஊராட்சித் தலைவரையே நிர்வாக அதிகாரியாக நியமித்து அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## நாட்டின் உயிர்மூச்சுகளும் நாடி நரம்புகளும்!



மாவட்ட ஊராட்சிக்கு தனியாக ஒரு செயல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**வரி வருவாயில் உள்ளாட்சிகளுக்கு 8 விழுக்காடு**

1997–98 முதல் மாநில வரி வருவாயிலிருந்து 8 விழுக்காடு நிதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து வழங்கப்படுகிறது.

97–98இல் இதன்படி 612 கோடியே 57 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டதற்கு மாறாக 2000–2001இல் 1036 கோடியே 42 இலட்சம் ரூபாயாக இது உயர்த்தி வழங்கப்படுகிறது.

ஊராட்சி நிதியைப் பெருக்க விளம்பர வரி, கேபிள், தொலைக்காட்சி மீதான கேளிக்கை வரி போன்றவற்றை ஊராட்சிகளே வசூலித்துக் கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தல வரி, தல மேல் வரி, சிறு கனிமம் மீதான வரி, முத்திரைத் தாள் வரி, கேளிக்கை வரி இவற்றை முழுமையாக ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளித்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரத்தை பெருக்கியுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் முந்தைய ஆட்சியில் நிலுவையிலிருந்த தொகுப்பு வீடுகள், சிறு பாலங்கள் போன்ற 1,14,141 பணிகளுடன், கடந்த நான்கு ஆண்டுகளில் எடுக்கப்பட்ட புதிய பணிகளையும் சேர்த்து மொத்தம் 9,36,129 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

முந்தைய ஐந்தாண்டுகளில் ஆதி திராவிடர்களுக்காகக் கட்டிய இலவசத் தொகுப்பு வீடுகள் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 700. ஆனால் 96க்குப் பின் இந்த நான்காண்டு காலத்தில் 631 கோடியே 6 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 2,96,131 தொகுப்பு வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

இந்த வீடுகளுக்கு கான்கிரீட் கூரை போடுவதற்காக வீடு ஒன்றுக்கு மாநில அரசால் வழங்கப்பட்ட 7000 ரூபாய் 98–99 முதல் 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

29 கோடியே 49 இலட்ச ரூபாய் செலவில் உள்ளாட்சி நிறுவனங் களைச் சேர்ந்த 737 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்களும் 133 கோடியே 15 இலட்ச ரூபாய் செலவில் 5,326 ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

106 கோடியே 43 இலட்ச ரூபாய் செலவில் 6,652 நியாய விலைக் கடைகளுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

18 கோடியே 28 இலட்ச ரூபாய் செலவில் 1,406 சத்துணவு மையங்களுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

தமிழகத்தில் உள்ள பேரூராட்சிகளுக்கு நான்கு ஆண்டுகளில் ரூ.540 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சாலைகள், தெரு விளக்குகள் போன்ற அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

**மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் அவலம் நீக்கி அரிய சாதனை**

மனிதக் கழிவுகளை மனிதனே சுமக்கும் அவல நிலையை அகற்றிட அனைத்து பேரூராட்சிகளிலும் இருந்த 417 உலர் கழிப்பிடங்களும், அனைத்து நகராட்சி மாநகராட்சிப் பகுதிகளிலும் இருந்த 238 உலர் கழிப்பிடங்களும் – ஆக மொத்தம் 655 உலர் கழிப்பிடங்களும் நவீன கழிப்பிடங்களாக 10 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் மாற்றப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. தற்போது எந்தவொரு நகராட்சியிலும், மாநகராட்சியிலும் பொது உலர் கழிப்பிடம் எதுவும் இல்லை என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளோம்.

9 புதிய ஊராட்சிகளும், ஏற்காடு ஊராட்சி ஒன்றியமும் உருவாக்கப்பட்டன.

533கோடியே 86 இலட்ச ரூபாய் செலவில் 35 ஆயிரத்து 591 நீர்ப்பிடிப்பு / ஆதாரப் பணிகளும், 67 கோடியே 56 இலட்ச ரூபாய் செலவில் 13,513 ஜீவன்தாரா கிணறுகளும், 11 கோடியே 92 இலட்ச ரூபாய் செலவில் 701 ஊராட்சி அலுவலகக் கட்டடங்களும் 44 கோடியே 11 இலட்ச ரூபாய் செலவில் 22 ஆயிரத்து 53 தொலைக்காட்சி அறைகளும், 53 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் 2,67,871 தனி நபர் கழிப்பறைகளும் ஊரக

வளர்ச்சித் துறை மூலமாக அமைத்து கொடுக்கப் பட்டுள்ளன.

4 கோடியே 60 இலட்ச ரூபாய் செலவில் 4,60,000 புகையில்லா அடுப்புகளும், 9 கோடியே 50 இலட்ச ரூபாய் செலவில் 9,500 கரிமவாயு கலன்களும் அமைக்கப்பட்டுள்ளன.

7 கோடியே 99 இலட்ச ரூபாய் செலவில் 2,499 தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன.

221 கோடியே 56 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 4,70,442 பயனாளிகளுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

4 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் பேருந்து நிலையங்களும், வணிக வளாகங்களும் பேரூராட்சி களில் கட்டப்பட்டுள்ளன.

பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 11,836 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி 11 கோடியே 94 இலட்சத்து 39,000 ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது.

4,855 சுயஉதவிக் குழுக்களுக்கு சுயதொழில் துவங்க மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் உதவி 121 கோடியே 82 இலட்சம் ரூபாய்.

23,920 தனிநபர் பயனாளிகளுக்கு 45 கோடியே 25 இலட்சத்து 91,000 ரூபாய் மானியத்துடன் கூடிய வங்கிக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 31 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுயஉதவிக் குழுக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள்.

19 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் ஊரக இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 44,737 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சுயஉதவிக் குழுக்களுக்கு 7 கோடியே 78 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் செலவில் ஆரம்ப பயிற்சி மற்றும் திறன்வளர் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளன.

ஊரகப் பகுதிகளில் 12,000 தெரு விளக்குகளும், நகர்ப்புறப் பகுதிகளில் 90,000 தெரு விளக்குகளும் சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன.

சாதி சமயப் பூசல் அகற்றிட இந்த அரசின் மிகச் சிறந்த திட்டமான பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் 150 அமைக்கத் திட்டமிடப்பட்டதில் இதுவரை 98 சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டுள்ளன. 20 சமத்துவ புரங்கள் திறப்பு விழாவிற்கு தயாராக உள்ளன.

மற்றுமொரு சீரிய திட்டமான அண்ணா மறு மலர்ச்சி திட்டத்தின்கீழ் 692 கோடி ரூபாய் செலவில் 74,810 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நமக்கு நாமே திட்டத்தின்கீழ் 147 கோடியே 74 இலட்ச ரூபாய் செலவில் 18,590 பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி நிறைவேற்றப்படும் பணிகளுக்கு பொதுமக்களும் செலவில் ஒரு பங்கினை உழைப்பாகவோ நிதியாகவோ தந்திட வேண்டுமென்ற விதிப்படி மக்கள் பங்கு 51 கோடியே 42 இலட்ச ரூபாய் கிடைத்துள்ளது.

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டமான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர்களின் 234 தொகுதிகளிலும் 414 கோடியே 94 இலட்ச ரூபாய் செலவில் 30,505 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1989–91 ஆண்டுகளில் நடைமுறையிலிருந்த மக்கள் நலப் பணியாளர்கள் திட்டம் கடந்த ஆட்சியில் 13–7–91 அன்று கைவிடப்பட்டது. மீண்டும் 96ஆம் ஆண்டு இந்த அரசு ஏற்பட்ட பிறகு பணியிழந்த மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. முதியோர் கல்வியைப் பரப்புவதிலும், குடிப்பழக்கத்தின் தீமைகளை மக்களுக்கு உணர்த்துவதிலும் தெரு விளக்குகளைப் பராமரிப்பதிலும் மற்றும் சத்துணவு மையங்களைக் கவனிப்பதிலும் இவர்களது பணி பயன்படுத்திக் கொள்ளப்பட்டு வருகிறது.

வரலாறு காணாத அளவில் கிராமங்களில் சுமார் 20,900 கிலோ மீட்டர் கிராமச் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றப்பட்டுள்ளது. 2900 கிலோ மீட்டர் கிராமத் தெருக்கள் சிமெண்ட் கான்கிரீட் தெருக்களாக மாற்றப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறை உருவான காலத்திலிருந்து இதுவரையில் இல்லாத சாதனையாக இத்துறைக் கென தனியாக ஒரு பொறியியல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஏற்கனவே இருந்த வாகனத்தோடு மேலும் ஒரு வாகனம் வழங்க 621 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டன.

இதுவரை ஊரக வளர்ச்சித் துறையில் இல்லாத அளவிற்கு கடந்த நான்காண்டுகளில் 338 வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உதவி இயக்குநர் களாகவும், 65 உதவி இயக்குநர்களுக்கு இணை இயக்குநர்களாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டது. இது தொடர்பான பொறியியல் பிரிவில் பல்வேறு கட்டத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

கிராம இளைஞர்கள் பயன்பெற ஊராட்சிகளிலே அய்யன் திருவள்ளுவர் நூலகங்களை அமைத்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த நான்காண்டுகளில் பேரூராட்சிகளில் மட்டும் சிமெண்ட் சாலைகளின் நீளம் 380 கிலோ மீட்டரிலிருந்து 909 கிலோ மீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. தார்ச்சாலை களின் நீளம் 2733 கிலோ மீட்டலிருந்து 3421 கிலோ மீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

ஊரக உற்பத்திப் பொருட்கள், பூமாலை வணிகச் சின்னத்துடன் விற்பனை செய்ய மாநிலம் மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் விற்பனை அரங்கங்கள் அமைக்க 14 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவிடப்படவுள்ளது.

9 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் 3 ஆயிரத்து 850 கிராமப்புற விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

புதிதாக சமத்துவ மயானம் அமைக்கும் ஊராட்சிகளுக்கு தலா இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் ஊக்க நிதி வழங்கப்படுகிறது.

சேலம், திருநெல்வேலி, காஞ்சிபுரம் மாவட்டங் களில் உள்ள 52 வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டு வருகின்றன.

நலிந்த ஊராட்சிகளுக்கு மின் கட்டணம், குடிநீர் கட்டணம் செலுத்த தற்போதுள்ள சிறப்பு நிதி ஐந்து கோடி ரூபாய் இந்த ஆண்டு ஏழு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மட்டும் 10 நகராட்சிகளுக்கு நகர் மன்றக் கூட்டம் நடத்துவதற்கு புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்க இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சிகளில் பராமரிக்கப்படும் பேருந்து நிலையங்களில் ஒடு தளத்தை சிமெண்ட் கான்கிரீட் தளமாக மாற்றிட ஏழு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை இராயபுரத்தில் ரூ. 17 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 1.10 கிமீ. நீளமுள்ள ரயில்வே மேம்பாலம் 1999 நவம்பரில் திறந்து வைக்கப்பட்டது.

சைதாப்பேட்டை ரயில் பாதையின் கீழாக வாகன சுரங்கப்பாதை சுமார் இரண்டு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது.

எழிலகம் அருகில் பயணிகள் சுரங்கப்பாதை 74.37 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

கோயம்பேட்டில் ஆசியாவிலேயே பெரிய பேருந்து நிலையம் ஏறத்தாழ 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

கொத்தவால் சாவடி காய்கறிச் சந்தை கோயம்பேட்டிற்கு மாற்றப்பட்டதால் உயர்நீதி மன்றத்தை சுற்றியுள்ள பகுதியில் நெரிசல் நீக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தின் அருகில் பூக்கடை வளாகம் அகற்றப்பட்டுப் புறநகர் பேருந்து நிலையம் அங்கு அமைக்கப்பட்டதால், போக்குவரத்து சீரடைந்துள்ளது.

சிங்கப்பூர் நிறுவனத்தின் மூலம் திருவல்லிக் கேணி, மயிலை, கோடம்பாக்கம் பகுதிகளில் தூய்மை திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பத்தாவது நிதிக்குழு பரிந்துரை அடிப்படையில் சென்னை நீங்கலாக 5 மாநகராட்சிகளுக்கும் நான்கு ஆண்டுகளில் ரூ.16.85 கோடி வழங்கப்பட்டு, எடுக்கப்பட்ட 770 பணிகளில் – தெருவிளக்குகள், சாலை வசதிகள், பொதுக் கழிப்பிடம், குடிநீர் மேம்பாடு உள்ளிட்ட 751 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாநகராட்சிகளின் நிதிநிலையை உயர்த்த 6 மாநகராட்சிகளுக்கும் மாநில நிதிப்பங்கீடாக 1997–98 முதல் 3 ஆண்டுகளில் ரூ.313.61 கோடி

## மாநகராட்சிகள்

**சென்னை மாநகராட்சி**

1997க்குப் பின் கட்டப்பட்ட சிறு பாலங்கள் 52 – செலவு ரூ.4,51 கோடி.

ரூ.115.50 கோடி செலவில் கட்ட திட்டமிடப்பட்ட 10 மேம்பாலங் களில் 7 மேம்பாலங்கள் திறக்கப்பட்டு விட்டன. டிசம்பர் திங்கள் 2ந்தேதி யன்று மேலும் இரண்டு மேம்பாலங்கள் திறக்கப்பட்டன.

ரூ.5 கோடியே 11 இலட்சம் செலவில் நேப்பியர் பாலம் எழிலுடன் அகலப்படுத்தப்பட்டுள்ளது.




வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் மட்டும் ரூ.142.18 கோடி வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

**மதுரை மாநகராட்சி**

மதுரை, திருச்சி, நெல்லை, கோவை, சேலம் ஆகிய ஏனைய ஐந்து மாநகராட்சிகளுக்கும், அடிப்படை வசதிகளை மேம்படுத்திட மொத்தம் ரூ.100 கோடி வழங்கப்பட்டு, குடிநீர், சாலை, தெருவிளக்குகள், வடிகால்கள் முதலிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதில் 8,755 பணிகள் முடிந்துள்ளன.

ரூ.11.31 கோடி செலவில் பேருந்து தடச் சாலைகளும், பிரதானச் சாலைகளும், ரூபாய் ஒன்றரை கோடியில் புறச் சாலைகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

விசுவாசபுரி, ஆர்.வி. நகர், ஆரப்பாளையம், கண்மாய்க்கரை ஆகிய இடங்களில் ரூ.1 கோடியே 81 இலட்சம் செலவில் கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.



தரைப்பாலம் ரூ.1 கோடி செலவிலும், கல்பாலம் ரூ.8 கோடி செலவிலும், மதுரா கோட்ஸ் பாலம் ரூ.9 கோடி செலவிலும் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளன.

ரூ.10 கோடி செலவில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது.

ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் புதை வடிகால் திட்டம் மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறப்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 75 சாலைப் பணிகள் 8 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 39 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

உட்புற சுற்றுசாலை அமைக்கும் பணி 44 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, வேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

8 கோடி ரூபாய் செலவில் வைகையாற்றின் கரைகளை வலுப்படுத்தி சீரமைக்கும் திட்டம்.

**கோவை மாநகராட்சி**

ரூ.2 கோடியே 52 இலட்சம் செலவில் 31.76 கி.மீ. நீளச்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

ரூ.1 கோடியே இரண்டு இலட்சம் செலவில் 10.94 கி.மீ. நீள வடிகால் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ரூபாய் ஒன்றரை கோடியில் மின்தகன நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டது.

பில்லூர் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக ரூ.27 கோடியே 23 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ரூ.5 கோடி செலவில் தடாகம் ரோடு, சக்தி ரோடு ஆகிய இடங்களில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கோவை நான்காவது மண்டலத்தில் புதை வடிகால் அமைக்க ரூ.57.46 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

சிறப்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 133 பணிகள் 8.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 47 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**திருச்சி மாநகராட்சி**

ரூ.2.76 கோடியில் 1412 சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ரூ.1.50 கோடியில் பல்வேறு வாகனங்களும், தளவாடங்களும் வாங்கப்பட்டுள்ளன.

சிறப்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 179 பணிகள் 6.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 25 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

50 கோடி ரூபாய் செலவில் உய்யகொண்டான் கரைகளை வலுப்படுத்தும் திட்டம்.

**சேலம் மாநகராட்சி**

ரூ.4.39 கோடி மதிப்பீட்டில் 176 கடைகள் கொண்ட வணிக வளாகம் கட்டி திறக்கப்பட்டுள்ளது.

சிறப்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 278 பணிகள் 8.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 150 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

5 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் திருமணிமுத்தாறு மேம்பாட்டுத் திட்டம்.

**நெல்லை மாநகராட்சி**

வேய்ந்தான்குளம் பகுதியில் 6 கோடியே 90 இலட்சம் ரூபாயில் பேருந்து நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறப்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 136 பணிகள் 7.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 31 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

ஆறு மாநகராட்சிகளிலும் 51,404 குடிசைகளை 70 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர்களுடன் கூடிய கல்நார் தகடுகளால் வேயப்பட்ட வீடுகளாக மாற்றித் தரப்பட்டுள்ளது.

**நகராட்சிகள்**

1997–98 முதல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு களுக்கு மூன்று ஆண்டுகளில் ரூ.1013.97 கோடி வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.458.63 கோடி வழங்கப்படுகிறது.

ஆண்டுக்கு ரூ.10 கோடி வீதம் ரூ.40 கோடி வழங்கப்பட்டு, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சுகாதார மேம்பாடு, துப்புரவு, சிமெண்ட் சாலை முதலிய இனங்களில் 2271 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன;

63,975 தெருவிளக்குகள் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ளன; நடப்பாண்டில் 8000 தெரு விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

குப்பை அகற்றும் பணியில் மாட்டு வண்டிகளை படிப்படியாக அகற்றிட 1180 வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன.

ஆண்டுக்கு ரூ.15 இலட்சம் வீதம் நான்கு ஆண்டுகளில் 60 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு 53 மகப்பேறு மருத்துவமனைகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில் இப்பணிக்காக 15 இலட்சம் ரூபாய் எட்டு நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டு, மகப்பேறு மருத்துவமனைகள் கட்டப்படவுள்ளன.

பத்தாவது நிதிக்குழுப் பரிந்துரைகளின்கீழ் 4 ஆண்டுகளில் ரூ.35 கோடியே 71 இலட்சம் விடுவிக்கப்பட்டு, சாலைகள், குடிநீர் வசதி, தெரு விளக்குகள் போன்ற 23,635 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழக நகராட்சிகளில் திட்ட அமைப்பாளர்கள், புள்ளி விவரக் குறிப்பாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், ஒட்டுநர்கள் போன்ற பல்வேறு பதவிகளில் 5400 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டாம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் சிறப்பு சாலைப்பணிக்காக 30 கோடி ரூபாய் 1999–2000 ஆம் ஆண்டிற்கும், 50 கோடி ரூபாய் 2000–2001ஆம் ஆண்டிற்குமாக 80 கோடி ரூபாய் நகராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, 4011 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 2288 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை 40.20 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் கடந்த நான்காண்டுகளில் மட்டும் 90,907 தெரு விளக்குகள் உட்பட மொத்தம் 2,72,012 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 1997–98ஆம் ஆண்டு 27,907 தெரு விளக்குகள் அமைப்பதற்கு 7 கோடியே 28 இலட்சம் ரூபாயும், 1998–99ஆம் ஆண்டு 35,284 தெரு விளக்குகள் அமைப்பதற்கு 12 கோடியே 60 இலட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1998–99ஆம் ஆண்டு நகரப் பகுதிகளை ஒட்டி அமைந்துள்ள ஊரகப் பகுதிகளில் பத்தாயிரம் குழல் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக உயர்த்துவதற்கு சுமார் 2 கோடியே 65 இலட்சம் ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் 1999–2000ஆம் ஆண்டில் 2000 சோடியம் ஆவி விளக்கு அமைப்பதற்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

அடி வேர் முதல் உச்சிக் கொப்பு வரையில் அணுஅணுவாக அக்கறையுடன் கவனித்து அயராப் பணி புரியும் இந்த அரசின் கடும் உழைப்பினால் களிப்படைகின்றனர், கிராமப்புறத்து மக்கள் நகர்ப்புறத்து மக்கள் என்பதற்கு இவையனைத்தும் அழிக்க முடியாத ஆதாரங்களாகும்.

★ ★ ★

# இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டும் குடிநீர் திட்டப் பணிகள்

பல நோய்கள், அதிலும் பயங்கரமான நோய்கள் பரவுவதற்கும் மக்களைப் பலி கொள்வதற்கும் தண்ணீர் காரணமாக இருப்பதால், தாகம் தீர்த்துக் கொள்ளப் பருகிடும் அந்த நீர், பாதுகாக்கப்பட்ட குடிநீராக இருக்க வேண்டும் என்ற அக்கறையுடன் **1971**ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியிலேதான் அதற்கெனத் தனியாக ஒரு வாரியம் "குடிநீர் வடிகால் வாரியம்" என்ற பெயரில் அமைக்கப்பட்டது.

இந்தியாவிலேயே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்தான் தலை சிறந்த வாரியமாகத் திகழ்கிறது என்று "ஹட்கோ" நிறுவனம் நற்சான்றிதழும், கேடயமும் வழங்கியுள்ளது.

குடிநீர்த் திட்டங்களை சிறப்பாகவும் தரக் கட்டுப்பாட்டுடனும் செயல்படுத்துவதில் தெற்காசியாவிலேயே சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம்தான் சிறந்த வாரியம் என்று உலக வங்கி சான்றிதழ் அளித்துள்ளது.

சான்றிதழ்கள் பெற்ற மகிழ்ச்சியுடன் நின்று விடாமல் மேலும் மேலும் மக்களின் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய நமது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும் அதற்கென செலுத்தும் சிறப்பு கவனத்தையும் இங்கு காட்டப்பட்டுள்ள புள்ளி விபரங்கள் விளக்கும்.



**1995 – 96** ஆம் ஆண்டு கடந்த ஆட்சியிலே குடிநீர் வழங்கும் பணிகளுக்காக செலவிடப் பட்ட தொகை **213** கோடியே **82** இலட்சம் ரூபாய் என்பதற்கு மாறாக **2000–2001**ஆம் ஆண்டில் குடிநீர் வழங்கும் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை **842** கோடி ரூபாய் என்ற ஒரு புள்ளி விவரத்திலிருந்தே குடிநீர் வழங்குவதில் இந்த அரசுக்கு எந்த அளவிற்கு ஆர்வம் உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.


சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து **1996**ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட மேல்நிலை குடிநீர் தொட்டிகளின் எண்ணிக்கை **17,501** தான். ஆனால் கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் **24,793** மேல்நிலை குடிநீர் தொட்டிகளை அமைத்து சுமார் **50** ஆண்டு காலத்தில் நிறுவப்பட்ட மேல்நிலை குடிநீர் தொட்டிகளின் எண்ணிக்கையைத் தாண்டி சாதனை புரிந்துள்ளோம்.

அதைப் போலவே **1996**க்கு முன்பு **50** ஆண்டுக் காலத்தில் பொருத்தப்பட்ட அடிகுழாய்களின் எண்ணிக்கை **1,44,102**. ஆனால் கடந்த நாலரை ஆண்டு காலத்திலே பொருத்தப்பட்ட அடிகுழாய் பம்புகளின் எண்ணிக்கை **33,576** ஆகும்.

**ஊரகக் குடிநீர் வசதிகள்**

கடந்த கால ஆட்சியில் ஊரக குடிநீர்த் திட்டங்களுக்கு **1995–96**ஆம் ஆண்டில் **69.93** கோடி ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் **2000–2001**இல் அதை ஏழு மடங்கு அளவுக்கு உயர்த்தி **500** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஏராளமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**1992–93** முதல் **1995–96**ஆம் ஆண்டு வரை ஊரகக் குடிநீர் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை **307** கோடியே **43**



இலட்ச ரூபாய். 1996–97 முதல் 2000–2001ஆம் ஆண்டு வரை கலைஞர் ஆட்சியில் ஊரகக் குடிநீர்த் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 1,503 கோடியே 79 இலட்ச ரூபாய்.

ஆரம்பக் காலங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு அவற்றில் கைபம்புகள் பொருத்தப் பட்டன. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர உயர, விசைப்பம்புகள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெரு குழாய்கள் மூலம் வழங்கும் முறையை தீவிரமாக அமல்படுத்தப்படுகிறது.

ஊரகக் குடியிருப்புத் திட்டத்தைப் பொறுத்த வரை 1999–2000இல் 6,300 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் 378 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் முழுமையாக நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டது. 2000–2001இல் 6,500 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

அரசு 9–12–98 அன்று பிறப்பித்த ஆணைப்படி ஆயிரம் ரூபாய் காப்புத் தொகையாகவும் மாதாந்திர குடிநீர் கட்டணமாக முப்பது ரூபாயும் ஊராட்சிக்குச் செலுத்த முன்வருவோரின் வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகளுக்கே அரசு வழங்கியுள்ளது.

இதுவரையில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஊரகப் பகுதிகளில் 4,06,000 வீட்டு குடிநீர் இணைப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை நகர்ப் பகுதிகளில் மட்டுமே இருந்து வந்த குடிநீர் வீட்டு இணைப்பு வசதியினை ஊரகப்-பகுதிகளிலும் விரிவுபடுத்தப்பட்டது.

தற்போது கிராம ஊராட்சிகள் மூலம் 1,75,965 கைப்பம்புகளும் 37,956 விசைப்பம்புகளும் பராமரிக் கப்பட்டு வருகின்றன.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்காத குடியிருப் புகளே தமிழகத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம் என்று 97–98ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே அறிவித்ததற்கிணங்க அந்தச் சபதம் இன்றையதினம் நிறைவேறி யிருக்கின்றது.

ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் அளிக்க உறுதிபூண்டு, 32,203 குடியிருப்பு களில் 1996 முதல் இதுவரை 24,720 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.1,213 கோடியே 91 இலட்சம் செலவில் முழுமையாக குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 7,483 குடியிருப்பு களுக்கும் மார்ச், 2002–க்குள் முழுமையாக குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால் 1–4–92 முதல் 1–4–96 வரையிலான நான்காண்டுகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் கடந்த கால ஆட்சியில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்ட குடியிருப்புகள் சுமார் 14,000 மட்டுமே.

இந்திய துணைக் கண்டத்திலேயே முதல் மாநிலமாக தமிழகத்தில் ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் அளவினை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டரிலிருந்து 55 லிட்டராக உயர்த்தியிருக்கிறோம். நீர் ஆதாரமில்லாத பகுதிகளில் 40 லிட்டர் குடிநீர் வழங்குவதற்கான திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 846 ஊராட்சிகளில் 6,134 குடிநீர்த்திட்டப் பணிகள் 179 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் பணி முடிக்கப்பட்ட குடியிருப்புகள் 4,414. இதற்கான செலவு 145 கோடியே 96 இலட்ச ரூபாயாகும்.

பெரியார் நினைவு சமத்துவபுரங்களுக்கு 6 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர்த் திட்டங்கள் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

பயனற்றுப் போனவை என்று கடந்த கால ஆட்சியில் ஒதுக்கப்பட்ட 3,740 குடிநீர்த் திட்டங்களை புனரமைப்பு செய்து மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்காக முதன் முறையாக திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு இதுவரை 53 கோடியே 37 இலட்சம் ரூபாய்க்கு பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

1,288 ஊராட்சிகளில் அடங்கிய 3,555 குடியிருப்புகள் புளோரைடால் பாதிக்கப்பட்டிருந்தன. இந்தக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க 132 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டு இதுவரை 2419 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுவிட்டது.

அரசு துவக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல் நிலைப்பள்ளி ஆகியவைகள் அடங்கிய 18,511 அரசுப் பள்ளிகளுக்கு நாள் ஒன்றுக்கு பள்ளி ஒன்றுக்கு ஆயிரம் லிட்டருக்குக் குறையாமல் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 4,417 பள்ளிகளுக்கு 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் வசதி கொடுக்கப்பட்டுள்ளது.

கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டங்களில் ஊரகப் பகுதிகளை இணைக்க பிரதான குழாயிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குள் ஊரகக் குடியிருப்பு இருக்க வேண்டுமென்ற வரம்பு நீக்கப்பட்டு தேவையை மட்டும் கருத்தில் கொண்டு கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டத்தில் இணைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளுக்கு மின் மோட்டார் பொருத்தி குழாய் மூலம் குடிநீர் வழங்குவதற்கு ஒரு குடியிருப்பில் மக்கள் தொகை 300க்கு மேல் இருக்க வேண்டும் என்கிற வரம்பைத் தளர்த்தி ஒரு குடியிருப்பில் மக்கள் தொகை 150க்கு மேல் இருந்தாலே போதுமென்று மாற்றியமைக்கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 72 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட உவர்நீரை நன்னீராக்கும் 11 திட்டங்களால் (கலன்களால்) 237 கிராமக் குடியிருப்புகள் குடிநீர் வசதி பெற்றுள்ளன.

**நகர்ப்புறக் குடிநீர் வசதிகள்**

நகரகக் குடிநீர் வழங்கும் பணிக்கென 1992–93 முதல் 1995–96 வரை கடந்த ஆட்சியில் செய்யப் பட்ட நிதி ஒதுக்கீடு 128 கோடியே 87 இலட்சம் ரூபாய். 1996–97 ஆம் ஆண்டு தொடங்கி 2000–2001ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை வரை செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு 455 கோடி ரூபாய்.

நகர்ப்புற குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்த வரையில் அரசு சிறப்பு நிதி உதவியாக கடந்த ஆண்டு 50 கோடி ரூபாய் வழங்கியதற்கு மாறாக இந்த ஆண்டு 80 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 12 நகராட்சிகளுக்கும் மற்றும் 25 பேரூராட்சிகளுக்கும் புதிய குடிநீர்த் திட்டங்களை அமைத்திட உத்தரவிட்டதற்கு மாறாக இந்த ஆண்டு 74 நகரங்களுக்கு புதிய குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட ஆணையிடப்பட்டுள்ளது.

விரைவுபடுத்தப்பட்ட நகரக் குடிநீர் திட்டம் என்னும் பெயரில் தமிழகத்தில் 26 நகரங்களில் குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி செலவில் 50 சதவிகிதத்தை மைய அரசும் 45 சதவிகிதத்தை மாநில அரசும் 5 சதவிகிதத்தை அந்த உள்ளாட்சி அமைப்பும் ஏற்க வேண்டும்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய – கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் – 27.6.1999 அன்று இராமநாதபுரம் மாவட்டம் நரிப்பையூரில் ரூ.51 கோடியில் நிறை வேற்றப்பட்டது.

மதுரை மாநகராட்சியில் ரூ.95 இலட்சம் செலவில் புதிய குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு,

ரூ.2.70 கோடி செலவில் குடிநீர் வழங்கும் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த நான்கரை ஆண்டுகளில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நந்திவரம் கூடுவாஞ்சேரி, திருநீர்மலை, பெருங்களத்தூர், திருக்கழுக்குன்றம், சோளிங்க நல்லூர்; விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி, அனந்தா புரம், உளுந்தூர்பேட்டை; தருமபுரி மாவட்டத்தில் தேன்கனிக்கோட்டை, காவிரிப்பட்டினம், ஒசூர், மத்தகிரி, கடத்தூர், கிருஷ்ணகிரி; திருவாரூர் மாவட்டத்தில் கொரடாச்சேரி; திருச்சி மாவட்டத்தில் நங்கவரம், அரியமங்கலம், இனாம்கரூர், கே.அபிஷேகபுரம், பிராட்டியூர்; கரூர் மாவட்டத்தில் கரூர் நகராட்சி, புலியூர், பி.ஜெ. சோழபுரம், பள்ளப்பட்டி; புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, பொன்னமராவதி; சேலம் மாவட்டத்தில் ஜலகண்டா புரம்; நாமக்கல் மாவட்டத்தில் ஆலப்பாளையம், இடப்பாடி, ராசிபுரம்; ஈரோடு மாவட்டத்தில் அரியப்ப பாளையம், பெருந்துறை, ஆப்பக்கூடல், சத்திய மங்கலம், சித்தோடு, பெரிய சேமூர், இலத்தூர் நம்பியூர், அரச்சலூர்; கோவை மாவட்டத்தில் சியாமளாபுரம், சூலிசுரப்பட்டி, கிணத்துக்கடவு, சர்க்கார் சாமக்குளம், வீரபாண்டி, ஆனைமலை, பள்ளபாளையம், மூப்பேறிபாளையம், உடுமலைப் பேட்டை, வீரகேரளம்; மதுரை மாவட்டத்தில் திருநகர், ஒத்தக்கடை, ஆர்.வி.பட்டி; திண்டுக்கல் மாவட்டத்தில் எரியோடு, அம்மையநாயக்கனூர், கன்னிவாடி; சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி, திருப்பத்தூர், நாட்டரசன்கோட்டை; திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு, திருவேங்கடம், அம்பாசமுத்திரம், திசையன்விளை, ராயகிரி, அச்சம்புதூர், தச்சநல்லூர், ஆயக்குடி, பண்பொழி; கன்யாகுமரி மாவட்டத்தில் குளச்சல், களியக்காவிளை, வடகரை கீழ்ப்படுகை, காட்டாத்துறை; தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடை மருதூர், ஆடுதுறை, பாபநாசம், திருநாகேஸ்வரம், திருவோணம், ஆனைக்காரன்சத்திரம், கும்பகோணம், தாராசுரம், பட்டுக்கோட்டை; நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகப்பட்டினம், வைத்தீஸ்வரன் கோவில்; தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி, தென் திருப்பேரை; இராமனாதபுரம் மாவட்டத்தில் கீழக்கரை, ராமேஸ்வரம்; பெரம்பலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம்; நீலகிரி மாவட்டத்தில் உதக மண்டலம்; விருதுநகர் மாவட்டத்தில் மம்சாபுரம்; திருவண்ணாமலை மாவட்டத்தில் புதுப்பாளையம், வந்தவாசி; வேலூர் மாவட்டத்தில் காட்பாடி, தாரப்படவேடு, ஆம்பூர், கழிஞ்சூர், காந்திநகர், உதயேந்திரம், பனப்பாக்கம், தக்கோலம், காவேரிப் பாக்கம்; திருவள்ளூர் மாவட்டத்தில் நாரவாரிக்குப்பம்



ஆகிய 98 குடிநீர்த் திட்டங்கள் முழுவதுமாக நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.


நடப்பாண்டில் முடிக்கப் படவுள்ள முக்கிய குடிநீர்த் திட்டங்கள் :-

திருநெல்வேலி மாவட்டத்தில் 6 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் பாளையங் கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் வாசுதேவ நல்லூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்;

தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாயர்புரம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

ஒரு கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பெருங்குளம் பேரூராட்சி குடி நீர்த் திட்டம்;



ஒரு கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடம்பூர் பேரூராட்சி கூட்டுக் குடிநீர் திட்டம்;

விருதுநகர் மாவட்டத்தில் 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ரோசல்பட்டி மற்றும் 11 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

மதுரை மாவட்டத்தில் 14 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பேரையூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 9 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழனி நகராட்சி குடிநீர்த் திட்டம்;

கோவை மாவட்டத்தில் 9 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேட்டுப்பாளையம் நகராட்சி குடிநீர்த் திட்டம்;

நீலகிரி மாவட்டத்தில் 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குன்னூர் ஒன்றியத்தில் மூன்று குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

ஈ.ரோடு மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளக்கோவில் மற்றும் காங்கேயம் ஒன்றியத்தைச் சேர்ந்த 127 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

6 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் காங்கேயம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

நாமக்கல் மாவட்டத்தில் 9 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குமாரபாளையம் நகராட்சி குடிநீர்த் திட்டம்.

சேலம் மாவட்டத்தில் 2 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மகுடஞ்சாவடி, கொங்கனாபுரம் ஒன்றியங்களில் உள்ள 49 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் போளூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செவிலிமேடு பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

3 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செம்பாக்கம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 3 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புழல் பேரூராட்சி மற்றும் 10 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

3 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருநின்றவூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

விழுப்புரம் மாவட்டத்தில் 5 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கள்ளக்குறிச்சி பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

விழுப்புரம் மாவட்டத்தில் 5 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சின்னசேலம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கரூர் மாவட்டத்தில் 4 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தாந்தோணி பேரூராட்சி குடிநீர்த் திட்டம்.

திருச்சி மாவட்டத்தில் 14 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருச்சி மாநகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

என்ற முக்கிய திட்டங்கள் உட்பட 48 குடிநீர்த் திட்டங்கள் சுமார் 129 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்படவுள்ளது. இதனால் சுமார் 21 இலட்சம் மக்கள் பயனடைவர். இது தவிர மேலும் 119 புதிய குடிநீர்த் திட்டங்களும் இந்த ஆண்டு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. இந்தக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் 30 இலட்சம் மக்கள் பயனடைவார்கள். ☆


# சாலை, பாலங்கள் என சாதனைகள் பாரீர்!

போக்குவரத்துக்கு வான் வழிக்கென விமானங்கள் பயன்படுகின்றன. இருப்புப் பாதைக்கென இரயில்கள் இருக்கின்றன. கடல் வழி செல்வதற்குக் கப்பல்கள் உண்டு. இத்தனை போக்குவரத்து வசதிகள் இருந்தும் கூட பழங்காலந்தொட்டு இருந்து வருகிற அடிப்படைப் போக்குவரத்துக்கென அமைந்திடும் சாலை வசதிகளைப் புறக்கணிக்கத்தான் முடியுமா? அவற்றில் புதுமை காணாமல் இருந்திடத்தான் முடியுமா? முன்பு ஆண்டிருந்த முடியுடை மன்னர்கள் ஆட்சியைப் பற்றிச் சிறப்பிக்கும் வரலாறுகள்; அவர்கள் வெட்டிய குளங்கள் – சீர்படுத்திய ஆறுகள் – வளர்த்திட்ட மரங்கள் – என்று வர்ணனை செய்யும் போது, அவர்கள் அமைத்திட்ட சாலை வசதிகளையும் ஓர் சாதனையாகச் சொல்வதை அறிந்திருக்கிறோம் அல்லவா!

போக்குவரத்து விரிவாக்கத்திற்கு அடிப்படையாக சாலைகளும் – அவற்றுக்கு அவ்வப்போது தேவைப் படும் மேம்பாட்டுப் பணிகளும் – இன்றியமையாதவையாகும்.

தமிழகத்தின் சமூகப் பொருளாதார தொழில் வளர்ச்சிகளுக்குத் தேவையான அடித்தளங்களை உருவாக்கிடும் முயற்சிகளில்; சாலை வசதிகளை உருவாக்கி, மேம்படுத்தி தொடர்ந்து பராமரிப்பதில் தனிக் கவனம் செலுத்துவதும் ஒன்றாகுமெனக் கருதி 1–8–1996 அன்று தலைமைச் செயலகத்தில் அதற்கென தனியானதொரு துறை உருவாக்கப்பட்டது.

கிராமப்புறங்களை, முக்கிய சாலைகளுடன் இணைக்கும் இணைப்புச் சாலை திட்டத்தை கலைஞர் அரசுதான் 1976க்கு முன்பே தீட்டி அதில் வேகமான வளர்ச்சி கண்டது என்பதை அனைவரும் அறிவர்!



அவ்வழி நின்றுதான் 1998 மார்ச் 26ஆம் நாள் தமிழக வரலாற்றில் முதன் முறையாக நெடுஞ்சாலைத் துறைக்கென தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டது.

நெடுஞ்சாலைத் துறைக்கு 1991 முதல் 1995 வரை கடந்த ஆட்சியிலே ஒதுக்கப்பட்ட நிதி 1632 கோடியே 45 இலட்சம் ரூபாய். 1996க்குப் பின் கலைஞர் ஆட்சியில் 3728 கோடியே 56 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


**பாலங்களும், மேம்பாலங்களும்**

கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் நபார்டு நிறுவனம், ஹட்கோ நிறுவனம் ஆகியவற்றின் நிதியுதவிகளுடனும், பல்வேறு சிறப்புத் திட்டங்களின் மூலமும் இதுவரை திறக்கப்பட்ட பாலங்கள் 247. அவற்றின் மதிப்பு ரூ.292 கோடி.

மேலும் 200 பாலங்களின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்றுள்ளன. 35 பாலங்களுக்கு 80 விழுக்காடும் 51 பாலங்களுக்கு 60 விழுக்காடும் கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன.

கட்டிமுடிக்கப்பட்டுள்ள 247 பாலங்களில் 1 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பீடு உள்ள பாலங்களின் விவரங்கள் பின்வருமாறு:

மதுரை மாவட்டத்தில் மதுரை அண்ணா நகர் 80 அடி சாலையையும், காமராசர் சாலையையும் இணைத்து வைகை ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 30.4.97 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மதுரா கோட்ஸ் அருகில் புதிய ஜெயில் சாலையில் ஆறு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம் 13.11.99 அன்று கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. மதுரை வைகை ஆற்றின் குறுக்கே ஏற்கனவே இருந்த கல்பாலம் தாம்போகிக்கு பதிலாக 8 கோடி ரூபாய் செலவில் ஓர் உயர்மட்டப் பாலம் 23.2.2000 அன்று கட்டிமுடிக்கப்பட்டது. மதுரை சுற்றுச்சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே 4 கோடி ரூபாய் செலவில் ஓர் உயர்மட்டப்பாலம் 25.5.2000 அன்று கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. மதுரை சுற்றுச்சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே 8 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலமும், 6 கோடி ரூபாய் செலவில் மற்றொரு மேம்பாலமும் 15.9.2000 அன்று கட்டிமுடிக்கப் பட்டுள்ளன. மதுரை மாவட்டம் மேலூர்–பூவந்தி திருப்புவனம் சாலையில் தமிழ்நாடு விவசாய மேம்பாட்டுத்



திட்டத்தின்கீழ் 3 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலம் 31.10.1997 அன்று கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. மதுரை – தென்காசி சாலையில் 1 கோடியே 10 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு பாலம் 30.7.2000 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் மயிலாடுதுறை – முத்துப்பேட்டை சாலையில் திருவாரூரில் 5 கோடி ரூபாய் செலவில் சாலைகீழ் பாலம் அமைக்கும் பணிகள் 31.8.2000 அன்று முடிவடைந்துள்ளன.

கடலூர் மாவட்டத்தில் கொத்தாச்சாரி – குண்டியமல்லூர் சாலையில் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 31.7.2000 அன்று முடிவடைந்துள்ளன. முருகர்குடி – கிள்ளிமங்கலம் சாலையில் வெள்ளாற்றின் குறுக்கே 1 கோடியே 21 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 31.5.2000 அன்று முடிவடைந்துள்ளன.

திருவள்ளூர் மாவட்டத்தில் பெரியபாளையம் அருகில் ஆரணி ஆற்றின் குறுக்கே 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தின் பணிகள் 2.1.1999 அன்று முடிவடைந்தன. தண்டலம் – பேரம்பாக்கம் சாலையில் 2 கோடியே 33 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 31.5.2000 அன்று முடிவடைந்துள்ளன. திருவொற்றியூர் – பொன்னேரி சாலையில் நாப்பாளையம் அருகில் 1 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்தின் பணிகள் 2.1.99 அன்று முடிவடைந்தன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அபிராமம் – முதுகுளத்தூர் சாலையில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தின் பணிகள் 31.10.2000 அன்று முடிக்கப்பட்டுள்ளன.

சிவகங்கை மாவட்டத்தில் இளையான்குடி – மறவமங்கலம் சாலையில், 1 கோடியே 29 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.3.2000 அன்று முடிவடைந்துள்ளன. இளையான்குடி – மறவமங்கலம் சாலையில், 1 கோடியே 11 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள மற்றொரு பாலத்தின் பணிகள் 30.8.2000 அன்று முடிவடைந் துள்ளன. அதே இளையான்குடி – மறவமங்கலம் சாலையில் 2 கோடியே 22 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஓர் உயர் மட்டப் பாலத்தின் பணிகள் 30.9.2000 அன்று முடிவடைந்துள்ளன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் வந்தவாசியிலிருந்து கொடநல்லூர் சேதாரக்குப்பம் சாலை வழியாக ஒசூர் செல்லும் சாலையில் 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட உயர்மட்டப் பாலத்தின் பணிகள் 30.4.2000 அன்று முடிவடைந்துள்ளன. புதுப்பாளையம் சாலையில் 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 30.9.2000 அன்று முடிவடைந்துள்ளன. போளூர் ஜமுனாமத்தூர் ஆலங்காயம் சாலையில் 1 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.5.2000 அன்று முடிவடைந்துள்ளன.

சென்னையில் ராயபுரத்தில் இரண்டு இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக 17 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பெரிய மேம்பாலத்தின் பணிகள் 15.11.1999 அன்று முடிவடைந்தன. கிண்டி இரயில் நிலையத்தின் அருகில் 5 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தின் பணிகள் 30.4.2000 அன்று முடிவடைந்தன. சென்னை – கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில், சென்னையிலிருந்து 7வது கிலோ மீட்டரில் 3 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டப் பாலத்தின் பணிகள் 31.3.1998 அன்று முடிவடைந்துள்ளன. சென்னை – கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் கொசத்தலை ஆற்றின் குறுக்கே 2 கோடியே 4 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் பி.ஒ.டி. திட்டத்தின்கீழ் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் முடிவடைந்து அணுகுசாலைப் பணிகள் நடைபெறுகின்றன.

திருச்சி மாவட்டத்தில் 8 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் தில்லைநகர் சாலையையும், கரூர் புறவழிச்சாலையினையும் இணைக்கும் இணைப்புச் சாலையும், அதில் அமைந்துள்ள பாலத்தின் கட்டுமானப் பணிகளும் 31.12.99 அன்று முடிவடைந்தன. திருச்சி – நாமக்கல் சாலையில் 2 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்டுள்ள ஒரு பாலத்தின் பணிகளும், அதே சாலையில் 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்டுள்ள ஒரு பாலத்தின் பணிகளும் 31.10.2000 அன்று முடிவடைந்துள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி நகரில் மதுரை – கன்னியாகுமரி புறவழிச்சாலையுடன் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே 8 கோடி ரூபாய் செலவில் ஓர் உயர்மட்டப் பாலத்தின் கட்டுமானப் பணிகள் 31.12.99 அன்று முடிவடைந்துள்ளன.

கோவை மாவட்டத்தில், கோவை நகராட்சி சாலையை மேம்பாடு செய்து, நொய்யல் ஆற்றின் குறுக்கே 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 28.5.99 அன்று முடிவடைந்துள்ளன. கோவை பெரிய கடைவீதியில் அமைந்துள்ள கீழ்வழிப் பாதை 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு பணிகள் 15.11.99 அன்று முடிவடைந்துள்ளன.

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆலாத்துக்கரை – கோலக்காநத்தம் சாலையில் 1 கோடியே 17 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.10.2000 அன்று முடிவடைந்துள்ளன. கிருஷ்ணாபுரம் – பூலாம்பாடி சாலையில் 1 கோடியே 10 இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.7.2000 அன்று முடிவடைந்தன.

விழுப்புரம் மாவட்டத்தில் வேட்டைக்காடு – கய்த்தாறு சாலையில் 1 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 30.9.2000 அன்று முடிவடைந்துள்ளன. விழுப்புரம் – சென்னை சாலையில் கீழ்பெரும்பாக்கத்தில் இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கீழ்பாலத்தின் பணிகள் 31.3.2000 அன்று முடிவடைந்தன.

விருதுநகர் மாவட்டத்தில் சிவகாசி – கழுகு மலைச் சாலையில் 1 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 31.8.2000 அன்று முடிவடைந்தன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பழவந்தாங்கல் இரயில் நிலையத்தின் அருகில் 4 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரயில்வேகீழ் பாலத்தின் பணிகள் 2.6.1997 அன்று நிறைவேறின. மதுராந்தகம் – வெண்நாகுபட்டு சாலையிலிருந்து தச்சூர் செல்லும் சாலையில் 1 கோடியே 10 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.8.2000 அன்று முடிவடைந்தன.

தருமபுரி மாவட்டத்தில் காவேரிப்பட்டினம் – காக்கன்கரை சாலையில் 5 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் ஹட்கோ உதவித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.5.2000 அன்று முடிவடைந்தன. வேலூர் மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் செலவில் அம்முண்டி பூட்டுதாக்கு சாலையில் ஒரு புதிய பாலத்தின் கட்டுமானப் பணிகளும், பூட்டுதாக்கு தாம்போகி சாலையில் விரிவுபடுத்தி கட்டப்பட்ட பாலத்தின் பணிகளும் 31.5.2000 அன்று முடிவடைந்தன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை ஏம்பல் சாலையில் 1 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில்

விரிவுபடுத்தி கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.5.2000 அன்று முடிவடைந்தன.

கரூர் மாவட்டத்தில் பள்ளப்பட்டு – மண்மாரி சாலையில் 1 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தி கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.5.2000 அன்று முடிவடைந்தன.

சேலம் மாவட்டத்தில் சேலம் புறவழிச்சாலையில் 1 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலத்தின் பணிகள் 30.4.2000 அன்று முடிவடைந்தன. கொன்னன் செட்டி – ராஜபட்டினம் சாலையில் 1 கோடியே 35 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பாலத்தின் பணிகள் 31.3.2000 அன்று முடிவடைந்தன.

சாலை வசதிகள்

1.7.1972இல் 1500க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டம் கலைஞர் அரசினால் அறிமுகம் செய்யப்பட்டது.

1990இல் 1000க்குமேல் மக்கள் தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப் பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 1996க்குப் பின், 517 கிராமங்கள் இணைப்புச் சாலை வசதிகளைப் பெற்றன.

இணைப்புச் சாலை வசதி இல்லாத 1000 பேருக்கு மேல் மக்கள் தொகை கொண்ட கிராமங்களே தமிழகத்தில் இல்லை என்ற சாதனை படைக்கப்பட்டுள்ளது.


இணைப்புச் சாலைகள் உருவாக்கும் திட்டத்தின் தொடர்ச்சியாக 1999–2000இல் முதற்கட்டமாக 500க்கு மேல் 1000க்குள் மக்கள் தொகை கொண்ட 340 கிராமங்களுக்கு ரூ.123.70 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டன. 2000–2001இல் ரூ.90.75 கோடி செலவில் 140 கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டு விட்டன.

முந்தைய அரசு காலத்தில், 5 ஆண்டுகளில் இணைப்புச்சாலைத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 186 கோடி ரூபாய்.

ஆனால், இந்த அரசு 1996 முதல் 2000 வரை நான்கு ஆண்டுகளில் மட்டும் இணைப்புச் சாலைகளுக்காக ஒதுக்கீடு செய்த தொகை 433 கோடி ரூபாய்.

மேலும், 72 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.





### அமைக்கப்பட்டு வரும் புறவழிச்சாலைகள்

ரூ.49.85 கோடி செலவில் இரண்டு பெரிய பாலங்கள் உட்பட 18.80 கி.மீ. நீள தாம்பரம் – மதுரவாயல் – சென்னை புறவழிச்சாலைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

24.70 கி.மீ. நீள சாலைப் பணிகளும், 3 மேம்பாலப் பணிகளும் அடங்கிய மதுரை சுற்றுச்சாலை அமைக்கும் பணி ரூ.47.35 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ரூ.110 கோடி செலவில் 28.40 கி.மீ. நீளக்கோவை புறவழிச்சாலை அமைக்கப்பட்டு, போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

நபார்டு வங்கி உதவியில் ரூ.410.23 கோடி மதிப்பீட்டில் 4976.20 கி.மீ. நீள ஊரகச் சாலைகள் எடுக்கப்பட்டு, 4053 கி.மீ. நீளப் பணிகள் 294.30 கோடி ரூபாயில் முடிக்கப்பட்டுள்ளன. 4154.15 கி.மீ. நீள மாவட்ட பெரிய சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகளின் பணிகள் ரூ.271.09 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 3588 கி.மீ. நீளப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

1977க்குப்பின் சாலைப் பணியாளர்கள் நியமிக்கப் படாததால் நெடுஞ்சாலைகள் சரிவரப் பராமரிக்கப் படவில்லை. இக்குறையைப் போக்கிட 1998–99இல் நியமிக்கப்பட்ட சாலைப் பணியாளர்கள் 10,000 பேர்.

### ஆரச்சாலைகள்

ஹட்கோ உதவியுடன் சென்னை மாநகர் நோக்கி வரும் 251.60 கி.மீ. நீள ஆரச்சாலைகளும், 24 பாலங்களும், 212.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவற்றுள் அமைந்துள்ள 11 பாலங்களின் கட்டுமானப் பணிகளும், 128.90 கி.மீ. நீளச் சாலைப் பணிகளும் ரூ. 103 கோடியே 24 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 122.70 கி.மீ. நீளத்திற் கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நிலஎடுப்பு ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், 1000த்திற்கு மேற்பட்ட மின் கம்பங்களையும், 50க்கு மேற்பட்ட மின்மாற்றிகளையும் வேறு இடங்களுக்கு மாற்றுதல் முதலிய பணிகளும் விரைவுபடுத்தப்பட்டுள்ளதால், இந்த ஆரச்சாலைகளின் பணிகள் விரைவில் நிறைவு பெற்று சென்னையை நோக்கி வரும் சாலைகள் அனைத்தும் அழகும் வலிவும் பெறும்.

1841.33 கி.மீ. நீள சாலைப் பணிகள் இயந்திரம் மூலம் தார்ச்சாலைகளைப் புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன. இதில், 1241.68 கி.மீ. நீளத்திற்குரிய பணிகள் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள சாலைகளின் பணிகள் 31.12.2000த்திற்குள் முடிவடையும் நிலையில் உள்ளன.

பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதாரத் திட்டத்தின்கீழ், திருப்பூர் நகர் மற்றும் அதன் சுற்றுப்புறச் சாலை மேம்பாட்டுப் பணிகளில் 57.80 கி.மீ. சாலைப் பணிகளும், ஓர் உயர்மட்டப் பாலமும் ரூ.15.60 கோடியில் முடிக்கப்பட்டுள்ளன.

கரும்புச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 210 கி.மீ. நீள சாலை ரூ.17.19 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

### தேசிய நெடுஞ்சாலைகள்

தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலமாக கடந்த ஆட்சியில் 118 கோடி ரூபாய்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 653.7 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலைத் துறை மூலமாக கடந்த ஆட்சியில் பாலங்கள் கட்டிட 9.54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த நான்கரை ஆண்டு காலத்தில் 120.82 கோடி ரூபாய் செலவில் 31 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

1946ஆம் ஆண்டில் தமிழகத்திலிருந்த தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 1637 கிலோ மீட்டர். 1991ஆம் ஆண்டில் 2002 கி.மீ. 1996ஆம் ஆண்டிலும் 2002 கிலோ மீட்டர் மட்டுமே. தற்போது மொத்த தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 3864 கி.மீ; கடந்த நான்கரை ஆண்டுகளில் கூடுதலாக ஆக்கப்பட்ட தேசிய நெடுஞ் சாலை 1862 கிலோ மீட்டர்.

### மாநில நெடுஞ்சாலைகள்

1991–92இல் மாநில நெடுஞ்சாலைகளின் நீளம் 1896 கி.மீ. 1995–96இல் தமிழகத்தில் இருந்த மாநில நெடுஞ்சாலைகளின் நீளம் 1934 கி.மீ.; 62 கிலோ மீட்டர் தான் அதிகம்.

1996க்குப்பின் தமிழகத்தில் அதிகரிக்கப்பட்டுள்ள மாநில நெடுஞ்சாலைகளின் நீளம் 2258 கி.மீ. ஆக மொத்தம், தற்போதுள்ள மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 4192 கி.மீ.

### கிழக்குக் கடற்கரைச் சாலை

கிழக்குக் கடற்கரைச் சாலையை உருவாக்கிடும் திட்டத்தின்கீழ் 1970 ஆம் ஆண்டில் கடலோரப் பகுதிகளில் பெரிய பாலங்களை கட்டட கலைஞர் அரசு திட்டமிட்டது.

பாலாற்றின்மீது வயலூர் தேன்பாக்கம் ஆகிய இடங்களில் பாலங்களைக் கட்ட அப்போது ஆணையிடப்பட்டது.

1990ஆம் ஆண்டில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையிலிருந்து கடலூர் வரை கிழக்குக் கடற்கரைச் சாலையின் முதற்கட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்கு ஆணையிடப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 1996இல் இந்த அரசு அமைந்த பிறகு இப்பணிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டு ஏறத்தாழ 102 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு சென்னை– கடலூர் இடையிலான கிழக்குக் கடற்கரைச் சாலை 16.1.98 அன்று போக்கு வரத்திற்கு திறந்து விடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக சிதம்பரம், நாகை வழியாக தூத்துக்குடி வரை செல்லும் 375 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அமைப்பதற்கும்,

ஆர்க்காடு முதல் போளூர், திருவண்ணாமலை, திருக்கோவிலூர், உளுந்தூர் பேட்டை, விழுப்புரம், கும்பகோணம் வழியாக திருவாரூர் வரை செல்லும் 375 கி.மீ. நீளமுள்ள சாலைகளை அமைப்பதற்கும்,

80 கி.மீ. நீளத்தில் 12 நகரங்களுக்கு புறவழிச் சாலைகளை அமைப்பதற்கும்,

2600 கி.மீ. நீளமுள்ள சாலைகளின் பராமரிப்பிற்கும் உலக வங்கியிடம் இருந்து 350 கோடி ரூபாய் கடன் உதவி பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத் துறையின்கீழ் 1996க்குப்பின் 1640 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட 21,555 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளில் இதுவரை 13,775 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் முடிவடைந் துள்ளன. எஞ்சிய பணிகளும் அடுத்தடுத்து முடியும் நிலையில் விரைவாக நடைபெற்று வருகின்றன.

### ஊரக வளர்சித்துறை மூலம் சாலை மேம்பாட்டுப் பணிகள்

புதிதாக அமைக்கப்பட்ட கிராமச் சாலைகள் நீளம் 10,000 கி.மீ.

இதுவரை 1,672 கோடி ரூபாய் செலவில் தார்ச் சாலைகளாக மாற்றப்பட்ட கிராமச் சாலைகள் நீளம் 20,900 கி.மீ.


2000–2001 முடிவுக்குள் மேலும் 7,669 கி.மீ. கிராமச் சாலைகள் ரூ.900 கோடி செலவில் தார்ச்சாலைகளாக மாற்ற திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. இதில் 1999–2000இல் 3600 கி.மீ. தார்ச்சாலை அமைக்கும் பணியும், 2800 கி.மீ. சிமெண்ட் சாலை அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. எஞ்சிய பணிகள் 2000–2001இல் முடிவடையும்.

290.50 கோடி ரூபாய் செலவில் 2,905 கி.மீ. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

1996க்குமுன் பேரூராட்சிகளில் இருந்த சிமெண்ட் சாலை நீளம் 380கி.மீ.; இது நான்கு ஆண்டுகளில் 909 கி.மீட்டராக அதிகரிப்பு.

பேரூராட்சிகளில் தார் சாலைகளின் நீளம் 733 கி.மீட்டரிலிருந்து 1996க்குப்பின் 3421 கி. மீட்டராக அதிகரிப்பு.

நபார்டு நிறுவனத்தின் மூலம் – ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியத்தின் உதவியுடன் ஊரகப் பகுதிகளில் சாலை அமைத்தல், குடிநீர் வசதி முதலியவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்பு ரூ.780.5 கோடி.



**சென்னை மாநகரில் 10 சிறு மேம்பாலங்கள்**

சென்னை மாநகரில் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த சாலைச் சந்திப்புகளில் மொத்தம் 115 கோடியே 50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 10 மேம்பாலங்களைக் கட்டுவதற்கு 31.1.99 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த மேம்பாலங்களின் கட்டுமானப் பணிகள் 15.3.99 அன்று தொடங்கி வைக்கப்பட்டன. அந்த 10 மேம்பாலங்களில், பீட்டர்ஸ் சாலை – கான்ரான்ஸ்மித் சாலை சந்திப்பிலும், சர்தார் பட்டேல் சாலை – காந்தி மண்டபம் சாலை சந்திப்பிலும், கட்டப்பட்ட இரண்டு மேம்பாலங்கள் 5.2.2000 அன்று திறந்து வைக்கப்பட்டன.

பின்னர், பீட்டர்ஸ் சாலை – வெஸ்ட்காட் சாலை சந்திப்பில் கட்டப்பட்ட மேம்பாலமும், டாக்டர் இராதா கிருஷ்ணன் சாலை – இராயப்பேட்டை நெடுஞ்சாலை சந்திப்பில் கட்டப்பட்ட மேம்பாலமும், சர்தார் பட்டேல் சாலை – டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சாலை சந்திப்பில் கட்டப்பட்ட ஒரு மேம்பாலமும், 6.5.2000 அன்று திறந்து வைக்கப்பட்டன.

பின்னர், சென்னை மியூசிக் அகாடமி அருகில் டாக்டர். இராதாகிருஷ்ணன் சாலை – டிடிகே. சாலை சந்திப்பிலும், டி.டி.கே. சாலை – சர்.சி.பி. இராமசாமி சாலை சந்திப்பிலும் கட்டப்பட்ட 2 புதிய மேம்பாலங்கள் 12.8.2000 அன்று திறந்து வைக்கப்பட்டன.

புரசைவாக்கம் டவுட்டன் பகுதியிலும், எழும்பூர் பாந்தியன் சாலையிலும் கட்டப்பட்டுள்ள 2 மேம் பாலங்கள் 2.12.2000 அன்று திறக்கப்பட்டது.

அவற்றை அடுத்து, பெரம்பூர் இரயில்வே நிலையத்தின் அருகில் திருத்திய மதிப்பீட்டின்படி 34.84 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் மேம்பாலம் விரைவில் திறக்கப்படவுள்ளது.

முந்தைய அரசு ஐந்து ஆண்டுகளில் தமிழகம் முழுவதும் கட்டிமுடித்த பாலங்களின் எண்ணிக்கை 53. செலவு 26 கோடியே 10 இலட்சம் ரூபாய்.

முந்தைய அரசு காலத்தில் 5 ஆண்டுகளில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட ரயில்வே மேம்பாலங்கள் எண்ணிக்கை 5. கடந்த நான்கு ஆண்டு கால ஆட்சியில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட ரயில்வே மேம்பாலங்களின் எண்ணிக்கை 40. 1996க்குப் பின் கட்டி முடிக்கப்பட்ட ரயில்வே மேம்பாலங்கள் 10.

பாலங்கள், சாலைகள் எனப் பல்வேறு சாதனைகளின் பட்டியல்; படித்தறிவதற்கே நேரம் போதாது!

★

# பொதுப்பணித்துறையில் குவியும் புதுப்பணிகள்!

தமிழகத்தில் அரசுத் துறைகளில் பொது "மராமத்து இலாக்கா" என ஒன்றுண்டு. அந்த இலாக்காவின் அமைச்சர் "மராமத்து மந்திரி" என அழைக்கப் படுவார். ஆங்கிலத்தில் P.W.D. எனப்படும் அந்த Public Works Department-தான் "பொதுப்பணித்துறை" என்று ஆனது. அண்ணா அமைச்சரவையில் கலைஞர் அவர்கள் முதன்முதலில் பொதுப்பணித்துறை அமைச்சரானார். அந்த பொதுப்பணித்துறையின் சார்பில் நிகழ்த்தப்படும் சாதனைகளின் பட்டியல் நேர்த்தியானது மட்டுமல்ல; மிக நீளமானதுங்கூட! அது வருமாறு :-

**காவிரிப் பிரச்சினை**


சட்டப்பேரவையில் அரசின் சார்பில் நிறை வேற்றிய தீர்மானத்திற் கிணங்க 1990 ஆம் ஆண்டு வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. ஜூன் 91இல் வழங்கப்பட்ட காவிரி நதிநீர் நடுவர்மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த இந்த அரசின் வலியுறுத்தலுக்கிணங்க பிரதமர் வாஜ்பாய் அவர்கள் 9 மணிநேரம் அமர்ந்துபேசி கர்நாடக அரசை சம்மதிக்க வைத்ததன் காரணமாக 1998இல் காவிரி நீர் பிரச்சினைக்காக பிரதமர் தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டது.

பொதுப்பணித்துறை சார்பில் கோடிக் கணக்கான ரூபாய்க்கு பணிகளைச் செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெருமளவிற்கு கோரப்படுகின்றன. எனவே இதிலே எந்தவிதமான தவறும் நேர்ந்து விடக்கூடாது என்பதற்காக இந்த அரசு பொறுப்பேற்றவுடன் சில கொள்கை முடிவுகளை எடுத்தது. அவைகளில் முக்கிய முடிவுகள் சில வருமாறு :-

கடந்த கால ஆட்சியில் துறையின் மதிப்பீட்டைக் காட்டிலும் அதிக விழுக்காட்டில் ஒரே ஒப்பந்தப்புள்ளி பெற்று பணியை ஒப்படைக்கும் முறை இருந்தது. இந்த முறையை ஒழித்து ஒப்பந்தக்காரர்களிடையே போட்டியை உருவாக்கி ஊழலை தவிர்த்துள்ளது இந்த அரசு. இதன் காரணமாக நூற்றுக்கணக்கான பணிகளுக்குத் துறை மதிப்பீட்டிற்கும் குறைவாக ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

அரசுக்கு வந்து ஒப்பந்தப் புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற வேண்டும் என்ற நிலையை மாற்றி, அதிகாரங்களைப் பரவலாக்கி, துறை பொறியாளர்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது இந்த அரசு. இதனால் காலதாமதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளி சட்டம் கொண்டு வந்துள்ளோம். இந்தச் சட்டத்தின் கீழ் எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் ஒப்பந்தப் புள்ளிகளின் தொகுப்பு வெளியிடப்படுகிறது. இந்த முயற்சிகளினால் இந்த அரசு 100 கோடி ரூபாய்க்கும் மேலாக சேமிப்பை எய்தியுள்ளது.



முந்தைய ஐந்தாண்டுகளில் சிறுபாசனத் திட்டங்கள் உட்பட தமிழகத்தில் பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்த தொகை 568 கோடியே 56 இலட்சம் ரூபாய். 1996க்குப் பின் இந்த அரசு ஒதுக்கீடு செய்த தொகை 1,902 கோடியே 51 இலட்சம் ரூபாய்.

முந்தைய ஐந்தாண்டுகளில் மேற்கொண்ட பாசனத் திட்டங்கள் மூலம் பயன் பெற்ற நிலம் 11,809 எக்டேர். 1996க்குப் பின் இந்த ஆட்சியில் பயன்பெற்ற நிலம் 40,033 எக்டேர்.

கிருஷ்ணா நீரை சென்னை மக்களின் குடிநீருக்காக வழங்கிட

ஆந்திர மாநில எல்லையிலிருந்து பூண்டி ஏரிக்கு 25 கிலோ மீட்டர் நீளமுள்ள கால்வாய்ப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.

பூண்டியிலிருந்து செங்குன்றம் ஏரி, செம்பரம் பாக்கம் இணைப்புக் கால்வாய் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.

செங்குன்றம் ஏரி, பூண்டி ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் இரண்டு அடி உயரத்திற்குக் கூடுதலாகத் தண்ணீர் சேமிக்கும் பணி முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை குறித்து இந்த அரசின் சார்பில் பல கடிதங்கள் எழுதப் பட்டதோடு திருவனந்தபுரத்திலும் டெல்லியிலும் கேரள முதல்வரோடு உச்சக்கட்ட பேச்சுவார்த்தை நடத்தியதோடு நீதிமன்றத்திலே விரைவிலே முடிவு காணக்கூடிய ஒரு சூழ்நிலையையும் உருவாக்கி யிருக்கிறது.

**காவிரி கழிமுகப் பகுதியில் தூர்வாரல்**

1997–98 முதல் 82.14 கோடி ரூபாய் செலவில் நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்டங்களில் காவிரி கழிமுகப் பகுதி வாய்க்கால்களில் தூர்வாரப்பட்டதுடன் நெய்வேலி காட்டாமணிச் செடிகளும் அகற்றப்பட்டன.


1997, 1998 ஆகிய இரண்டு ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட 400 ஏரி குளங்களில் 381 ஏரி குளங்களில் தூர்வாரும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

22.81 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ள மாநில ஏரிப்பாசன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 560 கண்மாய்களும், 475 முன்னாள் ஜமீன் கண்மாய்களும் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

111 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் வீராணம் ஏரியின் 22 கி.மீ. நீள வடவாறு வரத்துக் கால்வாயைச் சீரமைத்து, ஏரியை ஆழப்படுத்தி, கால்வாய்களைத் தூர்வாரி மேம்படுத்தும் திட்டத்தில் இதுவரை 42 கோடி ரூபாய் மதிப்புடைய பணிகள் முடிவடைந்துள்ளன.

விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் வாய்க்கால் சீரமைப்புத் திட்டம் ரூ.90 இலட்சத்தில் முடிக்கப் பட்டுள்ளது. இதனால் 650 எக்டேர் நிலம் பயன் பெறும்.

இராமநாதபுரம் மாவட்டம் நாராயண காவேரி, ரகுநாத காவேரி, சங்கரத்தேவன் பாசனக் கால்வாய்களில் ரூ.7.41 கோடி செலவில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கமுதி, கடலாடி, முதுகுளத்தூர், சாயல்குடி பகுதியில் 22,000 ஏக்கர் பாசன வசதி பெற்றுள்ளன.



தேனி மாவட்டம் கோம் பையில் 100 ஆண்டு காலக் கோரிக்கையான 18ஆம் கால் வாய்த் திட்டம் 26 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 25.5.1999 அன்று தொடங்கி வைக்கப்பட்டன.

சென்னை ஓட்டேரி நல்லாவில் ரூபாய் ஒரு கோடியே 12 இலட்சம் செலவில் தூர்வாரப்பட்டது.


**நடுத்தர - சிறுபாசனத் திட்டங்கள்**

கடந்த நான்கு ஆண்டுகளில் 396.20 கோடி ரூபாய் செலவில் நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டதில் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளிக்கும் திட்டம், இராமநாதபுரம் மாவட்டம் நாராயண காவிரி வாய்க்கால் சீரமைப்பு, லால்குடி வட்டம் ஆண்டி ஓடையின் குறுக்கே அணை கட்டும் பணி, நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் கடானா நதி நீர்த்தேக்க பாசன விரிவாக்கத் திட்டம், நிலக்கோட்டை வட்டம் சிறுமலையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் பணி. கரூர் வட்டம்

இதன் காரணமாக அதிக பரப்பளவில் சாகுபடி செய்ய முடிந்தது, விளைச்சலும் அதிகமாகக் கிடைத்தது.

31.3.2000 முடிய மொத்தம் 7523 கி.மீ. நீளம் ஆறு களிலும், வாய்க்கால்களிலும் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

39.91 கோடி ரூபாய் செலவில் தொகுதிக்கு ஒரு ஏரி வீதம் ஆண்டுக்கு 200 சட்டமன்றத் தொகுதிகளில்



குடகனாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் அமைந்துள்ள வெள்ளியணை மற்றும் 3 குளங்களுக்கு நீர்வரத்தினை அதிகரிக்கச் செய்யும் திட்டம். மதுரை வண்டியூர் குளத்தைத் தூர்வாரி, நவீனப்படுத்தி, பூங்கா அமைத்து அழகுபடுத்தும் திட்டம், சாத்தான்குளம் வட்டத்தில் கால்வாய், சடையனேரி வாய்க்கால் சீரமைத்தல். லால்குடி வட்டத்தில் உப்பாறு ஓடையின் குறுக்கே ஏரி அமைத்தல். சென்னம்பட்டி கிராமத்தில் முதலை முத்துவாரியின் குறுக்கே ஏரி அமைத்தல். தாராபுரம் வட்டத்தில் நல்லதங்காள் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல். சிவகங்கை மாவட்டத்தில் ராஜகம்பீரம் ஏரி மற்றும் பிற 15 ஏரிகளுக்கு நீர் வழங்கிட வைகை வெள்ள நீரைத் திருப்புதல். காவிரியில் மேலணையை (முக்கொம்பு) வலுப்படுத்துதல் ஆகிய 13 திட்டங்களின் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

19.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு உதவியுடன் 17 திட்டங்கள் உட்பட நிறைவேற்றப்படும் 61 சிறப்பு சிறுபாசனத் திட்டங்களில் இதுவரை 27 திட்டங்களின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் தாராபுரம் ஆயக்கட்டில் இருந்து நீக்கப்பட்ட சுமார் 23,000 ஏக்கர் நிலங்கள் கீழ்பவானி ஆயக்கட்டில் சேர்க்க உத்தரவிடப்பட்டது.

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ், தமிழகம் முழுவதும் ரூ.768 கோடி மதிப்பில் 636 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள், நெல்லை மாவட்டத்தில் – அட்விநயினார் நீர்த்தேக்கத் திட்டம், நாங்குநேரி கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம், வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டம், விருதுநகர் மாவட்டத்தில் கிருதமால் நதி அணைத் திட்டம், தேனி மாவட்டத்தில் – சோத்துப்பாறை நீர்த் தேக்கத் திட்டம் ஆகியவை முடியும் தருவாயிலும் வேலூர் மாவட்டத்தில் மோர்தானா நீர்த் தேக்கத் திட்டம், இராஜா தோப்புக்கானாறு நீர்த்தேக்கத் திட்டம் ஆகிய பணிகள் 233.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட நிலையிலும் உள்ளன. மேற்சொன்ன 9 நீர்த்தேக்கத் திட்டப் பணிகளில் மோர்தானா நீர்த்தேக்கம் 2.9.2000 அன்றும், நம்பியாறு நீர்த்தேக்கம், பொய்கையாறு நீர்த்தேக்கம் ஆகியவை 2.10.2000 அன்றும் திறக்கப் பட்டுள்ளன.

கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கியத் திட்டங்களின் பட்டியல் வருமாறு :–

1. வேலூர் மாவட்டத்தில் மோர்தானா நீர்த் தேக்கத் திட்டம். இதனால் குடியாத்தம் மற்றும் வேலூர் வட்டங்களில் 34 கிராமங்களில் மொத்தமாக சுமார் 4022 எக்டேர் நிலம் பயனடையும்.

2. திருநெல்வேலி மாவட்டத்தில் நம்பியாறு நீர்த் தேக்கத் திட்டம். இதனால் இராதாபுரம் வட்டத்தில் உள்ள கோட்டைக் கருங்குளம், உருமான்குளம், இராதாபுரம், கரைச் சிட்டிபுதூர், கஸ்தூரிரங்கபுரம், குமாரபுரம், முத்துமோதுமொழி, திசையன்விளை ஆகிய கிராமங்களில் மொத்தமாக சுமார் 706 எக்டேர் நிலம் பயனடையும்.

3. கன்னியாகுமரி மாவட்டத்தில் பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்டம். இதனால் தோவாளை வட்டத்தில், செண்பக ராமன்புதூர், ஆரல்வாய் மொழி மற்றும் இராதாபுரம் வட்டத்தில் பழவூர் ஆகிய கிராமங்களில் மொத்தமாக சுமார் 451 எக்டேர் நிலம் பயனடையும். மேலும் தோவாளை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த நான்கு கிராமங்களுக்கு 20 மில்லியன் கன அடி என்ற அளவில் குடி தண்ணீர் வழங்கவும் வகை செய்கிறது.

4. வேலூர் மாவட்டத்தில் பாலாறு பாசன அமைப்புத் திட்டம் – இதன் மதிப்பீடு 14 கோடி ரூபாய் – இதனால் வேலூர், காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 32,786 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும்.

5. வேலூர் மாவட்டத்தில் பொன்னை அணைகட்டு பாசன அமைப்புத் திட்டம் – இதன் மதிப்பீடு 5.50 கோடி ரூபாய் – இதனால் வேலூர் மாவட்டத்தில் 23,104 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

6. கடலூர் மாவட்டத்தில் தொழுதூர் மற்றும் பிலாந்துறை பாசன அமைப்புத் திட்டம் – இதன்

மதிப்பீடு 3.50 கோடி ரூபாய் – இதன் மூலம் கடலூர் மாவட்டத்தில் 36,855 ஏக்கர் நிலம் பயனடையும்.

7. தருமபுரி மாவட்டத்தில் பா்ரூர் நெடுங்கல் பாசன கால்வாய் புனரமைப்புத் திட்டம் – இதன் மதிப்பீடு 4 கோடியே 8 இலட்சம் ரூபாய் – இதனால் தருமபுரி மாவட்டத்தில் 6,400 ஏக்கர் நிலம் பயனடையும்.

8. தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி நீர்த் தேக்க வலது இடதுபுற கால்வாய்கள் புனரமைப்புத் திட்டம் – மதிப்பீடு 2 கோடியே 90 இலட்சம் ரூபாய் – இதனால் தருமபுரி மாவட்டத்தில் 8,994 ஏக்கர் நிலம் பயனடையும்.

9. தருமபுரி மாவட்டத்தில் வாணியாறு நீர்த் தேக்கக் கால்வாய் புனரமைப்புத் திட்டம் – இதன் மதிப்பீடு 2 கோடியே 20 இலட்சம் ரூபாயாகும். தருமபுரி மாவட்டத்தில் இதன் மூலம் 4,003 ஏக்கர் நிலம் பாசன வசதி உறுதி பெறும்.

10. தருமபுரி மாவட்டத்தில் பாம்பாறு நீர்த் தேக்கக் கால்வாய் புனரமைப்புத் திட்டம் – இதற்கான செலவு சுமார் ஒருகோடி ரூபாய் – இதனால் 4,003 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

11. தருமபுரி மாவட்டத்தில் சூளகிரி சின்னாறு கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் – இதற்கான செலவு ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய் – இதனால் 1754 ஏக்கர் பாசன வசதி உறுதிபெறும்.

12. தருமபுரி மாவட்டத்தில் மாறாண்டஹள்ளி, தும்பள ஹள்ளி கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம் – செலவு 3 கோடியே 40 இலட்சம் ரூபாய் – 4,645 ஏக்கர் பாசன வசதி பெறும்.

13. திருவண்ணாமலை மாவட்டத்தில் சாத்தனூர் இடது மற்றும் வலதுபுறக் கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள் புனரமைப்புத் திட்டம். இதற்கான செலவு 18 கோடி ரூபாய். 45,014 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறும்.

14. திருவண்ணாமலை மாவட்டத்தில் சாத்தனூர் அணை பாதுகாப்புத் திட்டம் – செலவு 7 கோடி ரூபாய்.

15. விழுப்புரம் மாவட்டத்தில் வீடூர் அணை கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் – செலவு சுமார் ஒரு கோடி ரூபாய் – 3212 ஏக்கர் நிலம் பயனடையும்.

16. விழுப்புரம் மாவட்டத்தில் திருக்கோவிலூர் அணைக்கட்டு மற்றும் அதன் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம் – 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீடு – 35,439 ஏக்கர் நிலம் பயனடையும்.

17. கடலூர் மாவட்டத்தில் மணிமுத்தா நதி கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் – செலவு 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் – 400 ஏக்கர் நிலம் பயனடையும்.

18. கடலூர் மாவட்டத்தில் கோமுகி நதி நீர்த் தேக்கக் கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் – செலவு 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் – 4,991 ஏக்கர் நிலம் பயனடையும்.

19. கடலூர் மாவட்டத்தில் மேமாத்தூர் அணை கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் – செலவு 1 கோடியே 20 இலட்சம் ரூபாய்.

20. திருவள்ளூர் மாவட்டத்தில் ஆரணியாறு அணைக் கட்டு மற்றும் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம் – 3 கோடி ரூபாய் செலவு – 6,079 ஏக்கர் நிலம் பயன் அடையும்.

21. திருவண்ணாமலை மாவட்டத்தில் செய்யாறு அணை மற்றும் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம் – செலவு 5 கோடியே 50 இலட்சம் ரூபாய். இதனால் 35,427 ஏக்கர் நிலம் பயனடையும்.

22 தருமபுரி மாவட்டத்தில் ஈ.ச்சம்பாடி அணை மற்றும் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம் – செலவு சுமார் 80 இலட்சம் – இதனால் 6,252 ஏக்கர் நிலம் பயனடையும்.

23. விழுப்புரம் மாவட்டத்தில் கீழ்க்கண்டாரக் கோட்டை வெள்ளப் பாதுகாப்புத் திட்டம் – செலவு சுமார் 90 இலட்சம்.

24. திருச்சி மாவட்டத்தில் கல்லகம் ஆண்டியோடைத் திட்டம் – செலவு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் – 410 ஏக்கர் நிலம் புதிய பாசன வசதி பெறும்.

25. விருதுநகர் மாவட்டத்தில் குள்ளூர் சந்தை பாசன மேம்பாட்டுத் திட்டம் – சுமார் 52 இலட்சம் ரூபாய் செலவு – 2,570 ஏக்கர் நிலம் இதனால் பாசன உறுதி பெறும்.

26. விருதுநகர் மாவட்டத்தில் வெம்பக்கோட்டை அணை பாசன மேம்பாட்டுத் திட்டம் – செலவு சுமார் 36 இலட்சம் ரூபாய் – 8105 ஏக்கர் நிலம் பயன் அடையும்.

27. விருதுநகர் மாவட்டத்தில் கோல்வார்பட்டி அணை பாசன மேம்பாட்டுத் திட்டம் – மதிப்பீடு 36 இலட்சம் ரூபாய் – இதனால் 7364 ஏக்கர் நிலம் பயன் அடையும்.

28. திருநெல்வேலி மாவட்டத்தில் சர்குனியாறு பாசன மேம்பாட்டுத் திட்டம் – செலவு சுமார் 36 இலட்சம் – இதனால் 26,736 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறும்.

29. திருநெல்வேலி மாவட்டத்தில் ராமாநதி அணை பாசன மேம்பாட்டுத் திட்டம் – மதிப்பீடு சுமார் 85 இலட்சம் ரூபாய் – இதனால் 4,942 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறும்.

30. திருநெல்வேலி மாவட்டத்தில் குண்டாறு அணை பாசன மேம்பாட்டுத் திட்டம் – இதன் மதிப்பீடு 80 இலட்சம் ரூபாய் – 4,102 ஏக்கர் நிலம் இதனால் பயன் அடையும்.

31. சிவகங்கை மாவட்டத்தில் விருசுளியாறு பாசன மேம்பாட்டுத் திட்டம் – மதிப்பீடு சுமார் 76 இலட்சம் ரூபாய் – 2,916 ஏக்கர் நிலம் இதனால் பாசன உறுதி பெறும்.

இயற்கை வளங்களான நிலம், நீர் முதலியவை களை சீரிய முறையில் பயன்படுத்தி வறட்சியின் கொடுமையைத் தணித்து சுற்றுச் சூழலுக்கு பாதிப்பின்றி வேளாண்மை சாராத பணிகளை மேற்கொண்டு வேலைவாய்ப்புகளை அதிகரித்து நீர்வடிப் பகுதிகளில் வாழும் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பணிகள் கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழகத்தில் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

பொதுப்பணித் துறை உட்பட வேறு சில துறைகளிலும் சேர்த்து மேற்கொள்ளப்பட்ட இப்பணிகளின் மூலம் 16 மாவட்டங்களில் 15 ஆயிரத்து 500 தடுப்பணைகளும், 3000 கசிவு நீர்க்குட்டைகளும் 180 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**பொதுப்பணித் துறை நவீன மயம்**

491 கணிப்பொறிகள், 140 படிப்பெருக்கிகள், 437 ஜீப்புகள் உட்பட வாகனங்கள் போன்றவை 35 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டு பொதுப்பணித் துறை நவீனமய மாக்கப்பட்டுள்ளது.

கடந்த கால ஆட்சியில் 41 இளநிலை பொறியாளர்கள் உட்பட 43 பேர் பணி நியமனம் செய்யப்பட்டதற்கு மாறாக இந்த நான்கரை ஆண்டுகளில் 512 உதவிப் பொறியாளர்கள், 150 இளநிலைப் பொறியாளர்கள் உட்பட 797 பேர் நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.


91 முதல் 96 வரை 305 தினக் கூலி பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டார்கள். 96க்குப் பின் கடந்த நான்கரை ஆண்டுகளில் தினக்கூலிகளாக விளங்கிய 1,184பணியாளர்களும், 204 தொழில்நுட்ப உதவி யாளர்களும் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

உலக வங்கி நிதியுதவிடன் 38.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலத்தடி நீர் முதலிய விவரங்களை ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நீரியல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஹட்கோவின் கடனுதவியுடன் சென்னை மாநகரில் 5 நீராதாரங்களில் 120.25 கி.மீ. நீளத்திற்கு தூர்வாருதல், நீர்நிலைகளின் சாலையோரங்களில் ஆக்கிரமித்துள்ள 28,511 குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல் ஆகிய பணிகள் 300 கோடி ரூபாய் செலவில் புத்தாயிரமாண்டில் தொடங்கப்பட்டுள்ளன.

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டப் பகுதியில் ஒரு மதகு விட்டு ஒரு மதகு மூலம் நான்கு மண்டலங்களுக்கு நீர் வழங்குவதற்காக, கால் வாய்களின் அமைப்புகள் மேம்படுத்துவதற்காக ஒரு கோடியே 2 இலட்ச ரூபாய் நிதி அனுமதி அளிக்கப்பட்டு இந்தப் பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளன.

திருவாரூரில் தியாகராஜ சுவாமி திருக்கோயில் தெப்பக்குளத்தில் தூர் எடுப்பதற்கும் பழுது பார்ப்பதற்கும் ரூ.16.56 இலட்சம் நிதி அனுமதி அளிக்கப்பட்டு இந்தப் பணிகள் முடிவடைந்து விட்டன.



18.5.2000 அன்று தமிழ்நாடு குடியானவர்கள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மை சட்ட முன்வடிவு சட்டப் பேரவையால் ஏற்கப்பட்டது. இது தற்போது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நீர்ப்பாசன அமைப்பு முறைகளின் மேலாண்மையில், குடியானவர்களைப் பங்கேற்கச் செய்வதே இச்சட்ட முன்வடிவின் தலையாய நோக்கமாகும்.

வேலூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஆறுகள், குளங்கள், வாய்க்கால்கள் ஆகியவற்றை தூர் வாருதல், கரைகளைப் பழுது பார்த்தல், கட்டுமானப் பணிகளைப் பழுது பார்த்தல் ஆகிய பணிகளுக்காக 2000–2001ஆம் ஆண்டில் ஐம்பது கோடி ரூபாய் நிதி அனுமதி அளிக்கப்பட்டு, இந்தப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் பாசனத் திட்டங்களின் செயலாக்கத்திற்காகவும், அறிவிக்கப் பட்டுள்ள திட்டப் பணிகளின் செயலாக்கத்திற்காகவும் இந்நிதியாண்டில் ரூ.430.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கட்டடப் பணிகள்**

1991–96ஆம் ஆண்டுகளில் பொதுப்பணித் துறை சார்பில் கட்டடப் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை 846 கோடியே 54 இலட்சம் ரூபாயாகும். கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் இதற்காகச் செலவிடப்பட்ட தொகை 1,371 கோடியே 92 இலட்சம் ரூபாயாகும்.

சென்னை, விழுப்புரம், திருவாரூர், திருவண்ணா மலை, திருவள்ளூர், நாமக்கல், கரூர், நாகை, தூத்துக்குடி, தேனி ஆகிய 10 மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள் 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, தேனி தவிர எஞ்சிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டடங்கள் திறக்கப்பட்டுள்ளன. தேனியிலும் திறக்கப்படவுள்ளது. 1991–1996ஆம் ஆண்டுகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம் ஒன்று கூடத் திறக்கப்படவில்லை.

ஒரு மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு, 3 மாவட்ட வருவாய் அலுவலர் குடியிருப்பு, 1 ஊரக வளர்ச்சி அலுவலர் குடியிருப்பு மற்றும் 22 இடங்களில் வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகளும், 2 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டன.

10 இடங்களில் வருவாய் கோட்டாட்சியர் அலுவல கங்கள் ரூ.4.90 கோடியிலும், 16 இடங்களில் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள் ரூ.12.21 கோடியிலும் கட்டடப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

நில அளவைத்துறைக்காக சென்னை சேப்பாக் கத்தில் மத்திய ஆவண காப்பக கட்டடம் கட்டும் பணி ரூ.3 கோடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநிலத்தில் 33 இடங்களில் மாவட்ட ஆவண காப்பக கட்டடங்கள் கட்டும் பணி ரூ.3.03 கோடியில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

காவல் துறைக்காக 150 காவல் நிலையங்கள் 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்ட ஒப்புதல் அளித்ததில், 85 காவல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மீதமுள்ள 65 இடங்களில் கட்டுமானப் பணிகள் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. 2.62 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பளிக்கப்பட்ட கோவை காவல்துறை ஆணையாளர் அலுவலகக் கட்டடம் அனைவரும் வியக்கும் வண்ணம் கட்டி முடிக்கப்பட்டது. நாகப்பட்டினம், வெளிப்பாளையத்தில் 2.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவல்துறை அலுவலகம் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

காவல்துறைக்காக கடந்த கால ஆட்சியில் ஐந்தாண்டுகளில் ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் 13 கட்டடங்கள்தான் கட்டப்பட்டுள்ளன. ஆனால் கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 31 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் 160 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

சிறைத்துறைக்காக 10.66 கோடி ரூபாய் மதிப்பில் தமிழகத்திலுள்ள சிறைச்சாலைகளை நவீனப் படுத்துதல் மற்றும் பத்[illegible]வது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி கட்ட[illegible]பாட்டுப் பணிகள் 5.47 கோடி ரூபாய் செலவில் பெருமபாலும் முடிக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். சென்னை புழலில் 1.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்திய சிறை புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் 8 கோடி ரூபாய் செலவில் இரண்டாம் கட்டமாக பணிகள் தொடங்கப்படவுள்ளன.

நீதித்துறைக்காக 6 இடங்களில் நீதிமன்றங்கள், சட்டவல்லுநர்கள் அறை மற்றும் குடியிருப்புகள் ரூ.8.53 கோடி மதிப்பில் பணிகள் தொடங்கப்பட்டு, இதில் மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய 3 இடங்களில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. சென்னையில் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு 30 வீடுகள் 13.65 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு வருகின்றன. முந்தைய ஆட்சியில் நீதித்துறைக்காக 25 கோடியே 44 இலட்சம் ரூபாய் மட்டுமே செலவிட்டதற்கு மாறாக கடந்த

நான்கரை ஆண்டுகளில் 100 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

தீயணைப்புத் துறைக்காக தாம்பரத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில பயிற்சி பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், 24 இலட்சம் ரூபாய் மதிப்பில் பத்தாவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, 9 பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

ஊரக வளர்ச்சித் துறைக்காக பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி உள்ளூர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து 1,506 பணிகள் ரூ.45 கோடியில் மேற்கொள்ளப்பட்டு, அதில் 1,154 பணிகள் ரூ.35.45 கோடியில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 352 பணிகள் ரூ.9.55 கோடியில் நடைபெற்று வருகின்றன. அவ்வாறே சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 898 பணிகள் ரூ.29.42 கோடியில் மேற்கொள்ளப்பட்டு, அதில் 605 பணிகள் ரூ.17.88 கோடியில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 293 பணிகள் ரூ.11.54 கோடியில் நடைபெற்று வருகிறது.

சட்டமன்ற துறைக்காக 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் தொகுதியில் அலுவலகம் கட்டும் பணி ரூ.10.53 கோடியில் துவங்கப்பட்டு, அதில் 40 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. 119 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன, மீதமுள்ள பணிகள் இந்த ஆண்டுக்குள் முடிக்கப்படும்.

ஆய்வு மாளிகை, சுற்றுலா மாளிகை, அமைச்சர் குடியிருப்புகள் மற்றும் அதிகாரிகள் குடியிருப்பு, அலுவலகங்கள் ஆகிய 36 பணிகளில் 25 பணிகள் ரூ.8.14 கோடியில் முடிவுற்றுள்ளன. 11 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.


போக்குவரத்துத்துறைக்காக வட்டார போக்குவரத்து அலுவலகங்கள், தேர்ச்சி மையம் மற்றும் கழிவறைகள் ஆகிய 44 பணிகளில், 27 பணிகள், ரூ.3.91 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதம் 17 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

கல்வித்துறைக்காக அரசினர் கலைக் கல்லூரிகளில் மொத்தம் 28 பணிகள் ரூ.7.38 கோடியில் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. திருநெல்வேலி அரசினர் சட்டக் கல்லூரி கட்டடங்கள் ரூ.1.78 கோடியில் கட்டப்பட்டுள்ளது. அரசினர் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் 817 இடங்களிலும், அறிவியல் ஆய்வகங்கள் 572 இடங்களிலும், கழிப்பறைகள் 733 இடங்களிலும், தொடக்கக் கல்வி அலுவலகங்கள் 20 இடங்களிலும், கணினி கல்வி மையங்கள் 666 பள்ளிகளிலும் ரூ.86 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களில் மாவட்ட தொடக்க கல்வித் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 280 இடங்களில் வகுப்பறை கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மருத்துவத் துறைக்காக மாவட்ட, வட்ட மற்றும் வட்டம் சாரா அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு 100 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 353 கட்டடப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுவரை 250 பணிகள் 63 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 103 கட்டடப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

58 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பில் 653 இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் 200 துணை சுகாதார நிலைய கட்டடப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 613 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 196 துணை சுகாதார நிலையங்கள் 52 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் 12 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், தூத்துக்குடியில் 15 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பில் மருத்துவக் கல்லூரி கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.



பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப் பட்டோர் நலத்துறைக்காக 47 மாணவ மாணவியர் விடுதிகளுக்கு 9 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டடப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 40 விடுதிகள் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 7 விடுதிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

சமூக நலத்துறைக்காக 12 அலுவலகங்கள் மற்றும் விடுதிகளுக்கு 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டடப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 7 பணிகள் 2 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 6 குழந்தைகள் காப்பகங்கள் 2 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கால்நடை பராமரிப்புத் துறைக்காக 8 இடங்களில் கால்நடை பராமரிப்பு கட்டடங்களுக்கு 3 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 5 கட்டடங்களுக்கான பணிகள் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 3 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

வேளாண்மைத்துறைக்காக சென்னையில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் வேளாண் இயக்குநர் கட்டடமும், 229 இடங்களில் 28 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பில் இணை இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் அலுவலகக் கட்டடங்களும் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**நினைவகம் மற்றும் மணிமண்டபம்**

சென்னை வள்ளுவர் கோட்டத்தின் மேம்பாட்டுப் பணிகள், பேரறிஞர் அண்ணா நினைவக மேம்பாட்டுப் பணிகள், கன்னியாகுமரியில் அமரர் ஜீவா நினைவகம், கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் தியாகிகள் மணி மண்டபம், பெரியவர் பக்தவத்சலம் நினைவு மண்டபம், மதுரை திருமங்கலத்தில் தியாகி விஸ்வநாததாஸ், திருநெல்வேலி நெல்கட்டும் செவலில் சுதந்திரப் போராட்ட வீரன் பூலித்தேவன் ஆகியோர் இல்லங்களில், நினைவகம் மற்றும் திருமண மண்டபம், நூல்கம் ஆகியவைகள் அமைக்கும் பணி, பகுத்தறிவு கவிராயர் உடுமலை நாராயணகவி மற்றும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோருக்கு நினைவகம் அமைக்கும் பணி உட்பட 44 பணிகள் ரூ. 6.23 கோடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரியில் பெருந்தலைவர் காமராசர், குன்றக்குடியில் தவத்திரு அடிகளார், சென்னையில் மாமேதை அண்ணல் அம்பேத்கர் ஆகியோருக்கு நினைவு மண்டபங்கள் கட்டும் பணிகள் ரூ. 4.52 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டு, காமராசர், அம்பேத்கர் மணிமண்டபங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் விரைவில் திறக்கப்படவுள்ளது.

மறுவாழ்வுத்துறைக்காக மத்திய அரசின் உதவி யுடன் இலங்கை அகதிகளுக்காக 5,842 தற்காலிக குடியிருப்புகள் ரூ. 3.82 கோடியில் கட்டப்பட்டுள்ளன. மண்டபம், கொட்டப்பட்டு ஆகிய அகதிகள் குடியிருப்பு முகாமில் 77 இலட்சம் ரூபாயில் சிறப்பு மராமத்து பணிகள் முடிக்கப்பட்டன. மேலும் 2,057 தற்காலிக குடியிருப்புகள் ரூ.1.93 கோடியில் கட்டும் பணி வருகின்ற நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

தமிழ் வளர்ச்சித் துறைக்கென பல மாடி கட்டடம் ரூபாய் இரண்டு கோடியில் சென்னை எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் விரைவில் கட்டப் படவுள்ளது.

சுற்றுலாத்துறைக்கென விடுதிகள் மற்றும் வரவேற்பு மையம், 5 இடங்களில் மத்திய மற்றும் மாநில அரசு உதவி திட்டத்தின்கீழ் ரூ.1.46 கோடியில் கட்டி முடிக்கப்பட்டன. மேலும் 5 இடங்களில் ரூ. 1.76 கோடியில் பணிகள் நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றன. சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசினர் தோட்ட வளாகத்தில் மைய மற்றும் மாநில அரசின் உதவி திட்டத்தின்கீழ் சுற்றுலா அலுவலக வளாகம் கட்டும் பணி ரூ. 2.50 கோடியில் துவக்கப்பட்டுள்ளது.

தோட்டக்கலைத் துறைக்காக சென்னை மாதவரத்தில் தோட்டக்கலை பயிற்சி மையம் மற்றும் தங்கும் விடுதி ரூ. 1.42 கோடியில் கட்டப்பட்டுள்ளது.

நான்கரை ஆண்டுகளில் மொத்தம் 9,651 கட்டடங்கள் 962 கோடி ரூபாய் செலவில் பொதுப்பணித்துறை மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், பல்வேறு துறைகளுக்கும் 1,110 கட்டடங்கள் 236 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

பொதுப்பணி என்றாலே அது மக்களுக்காக ஆற்றும் பணிதான். மக்களுக்காக இயங்குகின்ற அரசின் எல்லாத் துறைகளிலும் பொதுப்பணித் துறை இழையோடிக் கொண்டிருக்கிறது. எனவே அத்துறையின் அளப்பரிய சாதனைகள் இங்கு பட்டியலிட்டுள்ளது. படித்தோர் முதல் பாமரர் வரையில் பாராட்டும் இத்துறையின் செயல்பாடுகள் போற்றுதற் குரியது.

• • •


அறநிலையத்துறையின் திருக்கோவில் பணிகள் பக்திவழி ஒழுகிடும் பெருமக்களும் பாராட்டிப் போற்றும் வகையில் தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகின்றன.

### திருப்பணிகள்

முந்தைய ஆட்சியில் ஐந்தாண்டுகளில் 828 கோவில்களுக்கு குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றன. ஆனால் 1996க்குப்பின் நான்கரை ஆண்டுகளில் 2,459 கோயில்களுக்கு திருப்பணி நடைபெற்று குடமுழுக்கு விழாக்கள் நிறைவுற்றுள்ளன.

407 திருக்கோவில்களில் 590 திருப்பணிகள் 31 கோடியே 37 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவிலும், 435 திருக்கோவில்களில் 786 இதர பணிகள் 28 கோடியே 80 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் செலவிலும் ஆக மொத்தம் 842 திருக்கோவில்களில் 1376 பணிகள், 60 கோடியே 17 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் செலவில் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

6.6.1996 அன்று மயிலை கபாலீசுவரர் திருக்கோவில், 5.7.1996 அன்று திருப்பெரும்புதூர் ஆதி கேசவப் பெருமாள் திருக்கோவில், 23-3-1997 அன்று திருநீர் மலை ரெங்கநாத சுவாமி திருக்கோவில், 26-3-1997 அன்று திருப்பாபுலியூர் பாடலீஸ்வரர் திருக்கோயில், திருக்கடவூர் அமிர்தகடேஸ்வரர் திருக் கோயில், 27.3.1997 அன்று கடலூர் திருவேந்திரபுரம் தேவநாதசாமி திருக்கோவில், 8.6.1997 அன்று தஞ்சைப் பெரிய கோவில், 16-6-1997 அன்று சென்னை மல்லீஸ்வரர் திருக்கோவில், 12.7.1997 அன்று வேலூர் ஜலகண்டேசுவரர் திருக்கோவில், 29-4-1998 அன்று சோளிங்கர் லெட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், 7.6.1998 அன்று சீர்காழிக்கு அருகில் திருவெண்காடு சுவேதாரண்யேசுவரர் திருக்கோவில், திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் பவானியம்மன் திருக் கோவில், 1.7.1998 அன்று தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரில் அரவிந்தலோசனர் திருக்கோவில், 29-1-1999 அன்று சென்னை சென்னகேசவப் பெருமாள் திருக்கோயில், 26.3.1999 அன்று திருப்பெரும்புதூர் அருகே வல்லக்கோட்டை சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், திருவேற்காடு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், 30.6.1999 அன்று கும்பகோணம் சாரங்கபாணிசுவாமி திருக்கோவில், 12.12.1999 அன்று கும்பகோணம் ஆதி கும்பேசுவரர் திருக்கோவில், 16.9.1999 அன்று இராமநாதபுரம்



# அனைவரும் அகம் மகிழும் வண்ணம் அறநிலையப் பணிகள்!



மாவட்டம் அரியக்குடி திருவேங்கடமுடையான் திருக்கோவில், 10.2.2000 அன்று ஆழ்வார் திருநகரி ஆதிநாதாழ்வார் திருக்கோவில், 11-2-2000 அன்று சென்னை குறுங்காலீஸ்வரர் திருக்கோயில், 16.3.2000 அன்று மதுரை சக்கரத்தாழ்வார் சன்னதி காளமேகப் பெருமாள் திருக்கோவில், 16-4-2000 அன்று சென்னை அகஸ்தீஸ்வரர் திருக்கோயில், 14.7.2000 அன்று திருவாரூர் மாவட்டம் வேதாரண்யம், வேதாரண்யேசுவரர் திருக்கோவில், 7.7.2000 அன்று திருச்சி மாவட்டம் தொட்டியம் அருகில் உள்ள திருநாராயணபுரம் வேதநாராயணப் பெருமாள் திருக்கோவில், 12.7.2000 அன்று திருவானைக்காவல் ஜம்புகேசுவரர் அகிலாண்டேசுவரி திருக்கோவில், 5.7.2000 அன்று பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில், 11.6.2000 அன்று திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி திருக்கோவில், 10-9-2000 அன்று பவானி சங்கமேஸ்வரர் திருக்கோயில், காங்கேயம் சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், தாந்தோன்றி மலை கல்யாண வெங்கடரமண சுவாமி திருக்கோயில், 11.9.2000 அன்று திருச்சி மலைக்கோட்டை தாயுமானவர் சுவாமி திருக்கோவில், 15-9-2000 அன்று திருமுட்டம் பூவராகஸ்வாமி திருக்கோயில், சிவாயம் ரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில், 10.11.2000 அன்று கும்பகோணம் சுவாமிமலை சுவாமிநாதசுவாமி திருக்கோவில் போன்ற பல்வேறு குறிப்பிட்ட திருக்கோவில்களில் 1996-க்குப்பின் திருப்பணிகள் முடித்து திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

**உயர்ந்துவரும் கோவில் வருவாய்**

கோவில் சொத்துக்கள் முறையாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஆவலுடன் நடவடிக்கைகளை எடுத்து, இந்த அரசு அதிரடியாகப் பல நிலங்களையும், வீட்டு மனைகளையும் மீட்டிருக்கிறது. நியாய வாடகை நிர்ணயம் செய்தும், நிலுவைகளை வேகமாக வசூலித்தும், கோயில் வருமானத்தை உயர்த்தி இருக்கிறது இந்த அரசு. எந்த ஒரு தனியாருக்கும் கோவில் நிலங்களை விற்பனை செய்வதில்லை எனும் உறுதியான கொள்கை முடிவையும் மேற்கொண்டுள்ளது.

**திருக்கோவில் ஆலோசனைக்குழு**

திருக்கோவில்களின் நிர்வாகத்தைச் செம்மைப் படுத்த 1996-ஆம் ஆண்டில் இந்த அரசு நடவடிக்கை எடுத்து இந்து சமய அறநிலையச் சட்டம் திருத்தப்பட்டது. அச்சட்டத்தின்கீழ் முதலமைச்சர் தலைமையில் அறநிலையத்துறை அமைச்சரைத் துணைத் தலைவராகக் கொண்டு அறநிலையத் துறை செயலாளர், அறநிலையத் துறை ஆணையர், குன்றக்குடி ஆதீனகர்த்தர், திருப்பனந்தாள் மடாதிபதி, திருவாவடுதுறை ஆதீனகர்த்தர், திருவரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், பேரூர் சாந்தலிங்க ராமசாமி அடிகள், திருமதி சௌந்தரம் கைலாசம், நெல்லை மேயர் திருமதி உமாமகேஸ்வரி, கருமுத்து கண்ணன் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழுவின் மூலம் திருக்கோவிலின் நிர்வாகத்தை மேம்படுத்துதல், அவற்றின் வருவாயைப் பெருக்குதல் தொடர்பான முக்கிய ஆலோசனைகள் பெறப்பட்டு, அவற்றின் அடிப்படையில் சிறப்பான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சொத்துப் பதிவேடுகள்**

1991 முதல் 1996வரை முந்தைய அரசில் திருக்கோவில்களில் உருவாக்கப்பட்ட சொத்துப் பதிவேடுகளின் எண்ணிக்கை 1,628. 1996க்குப்பின்

திருக்கோயில்களில் நான்கரை ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய சொத்துப் பதிவேடுகள் 8,325.

**மீட்கப்பட்ட கோவில் சொத்துக்கள்**

ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருந்த கோவில் சொத்துக்களில் 1991 முதல் 1996 வரை 126.59 ஏக்கர் நிலங்களும், 4 கிரவுண்ட் மனைகளும் மீட்கப்பட்டதற்கு மாறாக, 1996க்குப்பின் மீட்கப்பட்ட கோவில் சொத்துக்கள் 1859.15 ஏக்கர் நிலமும், 381 கிரவுண்டு மனைகளும் ஆகும்.

**கோவில் சொத்துக்கள் மூலம் வருவாய்:**

முந்தைய ஆட்சியில் திருக்கோவில் சொத்துக்களிலிருந்து கிடைத்த வருவாய் 365.20 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால், 1996க்குப்பின் அக்டோபர் 2000 வரை திருக்கோவில் சொத்துக்களிலிருந்து கிடைத்த வருவாய் 648.71 கோடி ரூபாய்.

**கிராமப்புற பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்**

தமிழ்நாட்டில் அறநிலையத் துறையின் ஆளுகையில் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து அறுபது வயதினை அடைந்து, ஓய்வுபெற்ற பூசாரிகளுக்கு நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் ஒய்வூதியம் வழங்க 22.11.1997 அன்று ஆணையிடப்பட்டு, இதுவரை 1,146 தகுதியுடைய பூசாரிகளுக்கு ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**கருணை இல்லங்களுக்கு அரசு மானியம்**


ஆதரவற்ற இளம் சிறார்களுக்கு அரசே தாயாக இருந்து காப்பாற்றும் அரிய திட்டமாக திருக்கோவில்களில் கருணை இல்லங்களை உருவாக்கும் சீரிய திட்டம் 3.6.1975 அன்று அன்றைய கலைஞர் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 38 திருக்கோயில்கள் மூலம் 43 கருணை இல்லங்கள் இயங்கி வருகின்றன. அங்கே 966 சிறுவர்களும், 433 சிறுமியர்களும் பயனடைந்து வருகின்றனர். இந்தக் கருணை இல்லங்களில் 23 இல்லங்கள் சிறுவர்களுக்கு எனவும், 20 கருணை இல்லங்கள் சிறுமியர்களுக்கு எனவும் செயல்படுகின்றன. கருணை இல்லத்தின் சிறுவர், சிறுமியர் அனைவருக்கும் உணவு, உறைவிடம், உடை, மருத்துவம், கல்வி போன்ற அனைத்து வசதிகளும் திருக்கோயில் நிதியிலிருந்து செய்து கொடுக்கப்படுகின்றன. இவ்வகையில் ஏற்படும் செலவினத்தில் 50 விழுக்காடு அரசு மானியமாக ஒதுக்கீடு செய்ய 15.6.1998 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டு, 1998-99ஆம் ஆண்டிற்கு ரூ.90.54 இலட்சம் அரசு மானியமாக வழங்கப்பட்டது.


**தமிழில் ஆகம நூல்கள்**

திருக்கோயில் தொடர்பான ஆகம விதிகள் வடமொழியில் உள்ளதை தமிழில் மொழி பெயர்த்து வெளியிடக் கருதி முதற்கட்டமாக உத்ரகாமிக ஆகமம் என்ற நூல் 30.7.1999 அன்று தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

**"தமிழ் போற்றி" புத்தகங்கள் வெளியீடு**

தமிழில் அர்ச்சனை செய்வது தொடர்பாக 18-11-1997 அன்று உயர்மட்டக் குழு ஏற்படுத்தப்பட்டு அதில் அறிஞர் பெருமக்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், அருள்மிகு விநாயகர் போற்றி, அருள்மிகு முருகன் போற்றி, அருள்மிகு சிவன்





போற்றி, அருள்மிகு திருமால் போற்றி, அருள்மிகு நடராசர் போற்றி, அருள்மிகு கோதண்டராமர் போற்றி, அருள்மிகு துர்க்கையம்மன் போற்றி, அருள்மிகு அனுமன் போற்றி, அருள்மிகு நவகோள்கள் போற்றி முதலிய தமிழ் அர்ச்சனை நூல்கள் வெளியிடப்பட்டு இவை திருக்கோவில்களுக்கும், திருக்கோவில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இந்தப் "போற்றி" புத்தகங்களைப் பொதுமக்கள் குறைந்த விலைக்கு வாங்கிப் பயன்பெறவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், அருள்மிகு விநாயகர், அருள்மிகு சிவன், அருள்மிகு உமையம்மன் பெயர்களில் 1008 போற்றிகள் வெளியிடப்படவுள்ளன. வடபழனி திருக்கோவில் ஓதுவார் மரபினர் பற்றிய சீராய்வு என்ற நூல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் 1000 பிரதிகள் அச்சிடப்பட்டு 992 பிரதிகள் விற்கப்பட்டுள்ளன.

**தமிழில் வழிபாடு**

தமிழில் வழிபாடு என்பதை நாடெங்கிலும் தெளிவுபடுத்தி அறிஞர் குழு மற்றும் உயர்மட்டக் குழுவினரின் இசைவினைப் பெற்று, சிவாச்சாரியார், பட்டாச்சாரியார், ஓதுவார்கள் முன்னிலையில் அரங்கேற்றி, ஆதீனகர்த்தர்கள் வழங்கிய திருத்தங்களை ஏற்று சிவபெருமான், நடராசர், தென்முகக்கடவுள், உமையம்மை, விநாயகர், முருகவேள், திருமால், தாயார், கோதண்டராமர், மாரியம்மன், காளியம்மன், துர்க்கையம்மன் போற்றிகள் வெளியிடப்பட்டுள்ளன.

**தமிழில் வேள்வி**

ஆகம விதிகளுக்கு மாறுபடாமல் தமிழில் சிவ வேள்வியை நடத்திட முடியும் என்றும், அதனைக் கோவை மாவட்டத்தில் சாந்தலிங்க அடிகளார் போன்றவர்கள் நடத்திக் காட்டியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி, மயிலை–கபாலீசுவரர் கோயிலில் 21.6.98 அன்று சிவ வேள்வி நடைபெற்றது. பலரும் வரவேற்றனர். இதனைச் சிவாச்சாரியார்களே முன்னின்று செய்தனர்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோவில் திருப்பணி:

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள, அறநிலையத்துறை ஆளுகையின்கீழ் இல்லாத, 25 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான திருக்கோவில்களின் திருப்பணிகளுக்கு ரூ. 25,000/– வீதம் இதுவரை 350 திருக்கோயில்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**சைவத்திருமுறை ஆகமங்கள், வைணவ திவ்வியப் பிரபந்த பயிற்சி மையங்கள்**

1998–99ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்தபடி திருக்கோவில்களில் பணிபுரிந்துவரும் அர்ச்சகர்கள், பூசாரிகள், பட்டாச்சாரியார்கள் ஆகியோர்களுக்கு ஓராண்டு காலப் புத்தொளிப்

பயிற்சி அளிக்க 20 சைவத் திருமுறை ஆகம பயிற்சி மையங்களும், 7 வைணவ திவ்ய பிரபந்த பயிற்சி மையங்களும் 10.6.99 முதல் தொடங்கி நடைபெற்று வருகின்றன. பயிற்சி மையம் ஒவ்வொன்றிலும் ஏறத்தாழ 30 முதல் 35 பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சியாளர் ஒவ்வொருவருக்கும் ஊக்கத்தொகையாக சம்பந்தப்பட்ட திருக்கோவில் நிதியில் இருந்து நாள் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு மாதம் 500 ரூபாய் முதல் 2500 ரூபாய் வரை சம்பந்தப்பட்ட திருக்கோயில் நிதியில் இருந்து அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. துறை மற்றும் திருக்கோவில் அலுவலர்கள், பணியாளர்கள் தவிர பொதுமக்களும் பயன்பெறும் வகையில் தக்க சான்றோர்கள், அறிஞர்கள், சமய வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்டு குறுகிய கால சமயப் பயிற்சி வகுப்பு 1998, 1999 ஆகிய ஆண்டுகளில் 66 மையங்களில் நடத்தப்பட்டன. 4426 பேர் பயனடைந்துள்ளனர்.

### தமிழ் இசைப் பள்ளிகள்

தற்பொழுது 5 சைவத் திருக்கோவில்களில் தேவார இசைப் பள்ளிகளும், 4 வைணவத் திருக்கோவில்களில் திவ்விய பிரபந்த இசைப் பள்ளிகளும், 8 திருக்கோவில்களில் நாதசுரம், தவில் பயிற்சிப் பள்ளிகளும் நடைபெற்று வருகின்றன. தேவார இசைப் பள்ளிகளில் 80 மாணவர்களும், திவ்விய பிரபந்த இசைப் பள்ளிகளில் 55 மாணவர்களும், நாதசுரம், தவில் பயிற்சிப் பள்ளிகளில் நாதசுரப் பயிற்சியில் 80 மாணவர்களும், தவில் பயிற்சியில் 40 மாணவர்களும் சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர். தேவாரம், திவ்வியப் பிரபந்தம், நாதசுரம், தவில் இசைப் பள்ளிகளில் பயிலும் உள்ளூர் மாணவர்களுக்கு மாதம் 300 ரூபாய் வீதமும், வெளியூர் மாணவர்களுக்கு 600 ரூபாய் வீதமும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இந்த அரசு 1996இல் பதவியேற்ற பின்னர்தான் தமிழ் இசைப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### திருக்குறள் வகுப்புகள்

75 திருக்கோவில்களில் திருக்குறள் வகுப்புகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

### நியாய வாடகை நிர்ணயத்தின் மூலம் கூடுதல் வருவாய்

திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள், காலி மனைகள், கட்டடங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்து வருவாயைப் பெருக்கும் நோக்குடன், குழுக்கள் அமைக்கப்பட்டு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டதின் மூலம், 66 இலட்சம் ரூபாய் மட்டுமே வாடகை வந்து கொண்டிருந்ததை மாற்றி 1 கோடியே 96 இலட்சம் ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டது.

### [illegible]

திருக்கோவில்களுக்குச் சொந்தமான காலி இடங்களைப் பாதுகாக்க திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய இடங்களில் வணிக வளாகங்கள் கட்டிக் கொள்ள அரசால் அனுமதிக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### கிராமப்புறத் திருக்கோவில்கள்

துறையின் ஆளுகையில் உள்ள கிராமப்புறத் திருக்கோவில்களின் திருப்பணிகளுக்கு கோவில் ஒன்றுக்கு 25,000 ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. முந்தைய அரசினால் 5 ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் 99 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 13.6.1996க்குப்பின் இதுவரை 1 கோடியே 12 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் நிதியுதவியாக கிராமப்புறத் திருக்கோவில்களின் திருப்பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

### இலவச மின் விளக்கு

நிதி வசதி இல்லாத திருக்கோயில்களுக்கு அரசின் சார்பில் இலவச மின் விளக்கு அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு அதன்படி சுமார் 1000க்கு மேற்பட்ட கோவில்களில் அப்பணி நடைபெற்று வருகின்றது.

### இலவசத் திருமணம்

முந்தைய அரசு காலத்தில் – 5 ஆண்டுகளில் திருக்கோவில்களில் நடைபெற்றுள்ள நலிவுற்ற பிரிவினருக்கான இலவசத் திருமணங்களின் எண்ணிக்கை 327. இத்திருமணங்களுக்கு ஒன்றுக்கு 1,500 ரூபாய் வீதம் மொத்தம் 4,90,500 ரூபாய் முந்தைய அரசினால் செலவிடப்பட்டது. 1996க்குப்பின் இதுவரை திருக்கோவில்களில் நடைபெற்றுள்ள நலிவுற்ற பிரிவினருக்கான இலவசத் திருமணங்களின் எண்ணிக்கை 2,166. இலவசத் திருமணங்களுக்கு திருக்கோவில் நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்ட 1,500 ரூபாய் செலவினத்தினை 18.9.1996 முதல் 3,000 ரூபாயாக உயர்த்தியது இந்த அரசு. இதன்படி, 2,166 இலவசத் திருமணங்களுக்கு 3,000 ரூபாய் வீதம் 64 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் இந்த அரசினால் செலவிடப்பட்டுள்ளது.

#### சுசீந்திரம் திருக்கோவில்களுக்கு நிதியுதவி

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோவில்களின் நிர்வாகச் செலவுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 13 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு வந்தது. 1999–2000 முதல் கூடுதலாக 6 இலட்ச ரூபாய் வழங்கப்படுகிறது. மேலும் திருக்கோவில் திருப்பணி மற்றும் அறப்பணி வட்டித் தொகையிலிருந்து மேற்படி திருக்கோவில் களின் நிர்வாகச் செலவினங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு 14 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

#### புதுக்கோட்டை மாவட்ட திருக்கோவில்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருக் கோவில்களை ஒருங்கிணைத்து நிர்வகிப்பதற்கு அரசு மானியமாக 9 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. 28.8.2000 தேதியிட்ட அரசின் ஆணையின்படி இந்த மானியம் 15 இலட்ச ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

#### தமிழ்ப் புலவர்கள் நியமனம்

நிதிவசதி மிக்க திருக்கோவில்களில், வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ப் புலவர்கள் 150 பேர்களை நியமனம் செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.1,500 வீதம் திருக்கோயில் நிதியிலிருந்து தொகுப்பு ஊதியம் வழங்க அரசு 6.6.1997 அன்று உத்தரவிட்டது. இதுவரை 150 தமிழ்ப் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

#### புதிய செயல் அலுவலர் பணியிடங்கள் தோற்றுவித்தல்

3.9.1998 அன்று வெளியிடப்பட்ட அரசாணைப்படி, செயல் அலுவலர் நிலை 3–இல் 100 பணியிடங்களும், செயல் அலுவலர் நிலை 4–இல் 100 பணியிடங் களும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

#### நாதசுர இசைக் கலைஞர்களைப் புதிதாகப் பணியில் அமர்த்தல்

பாடல்பெற்ற, மங்களாசாசனம் செய்யப் பட்ட, சரித்திரப் புகழ் வாய்ந்த, பழமையான நிதி வசதியில்லாத திருக்கோவில்களில் நாதசுரம், தவில், தாளம் ஆகிய இசைக் கலைஞர்களை நியமனம் செய்து, நாதசுரக் கலைஞருக்கு மாதம் 1,000 ரூபாய்; தவில் இசைக் கலைஞருக்கு மாதம் 750 ரூபாய்; தாள இசைக் கலைஞருக்கு மாதம் 500 ரூபாய் வீதம் ஊதியம் வழங்கிட 1 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து இக்கலைஞர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 30 நாதசுரக் கலைஞர்கள், 14 தவில் கலைஞர்கள், 4 தாள இசைக் கலைஞர்கள் என மொத்தம் 48 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

#### திருக்கோவில்களில் ஓதுவார் நியமனம்

திருக்கோவில்களில் தேவாரம், திருவாசகம் போன்ற சைவத் திருமுறைகளைப் பாடுவதற்கு ஓதுவார்கள் இல்லாத திருக்கோவில்களில் பணி



நியமனம் செய்யவும், அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 1,500 ரூபாய் வீதம் தொகுப்பு ஊதியம் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, 43 திருக்கோவில் களுக்கு ஓதுவார்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**திருக்கோவில் பணியாளர்களுக்கான நலத் திட்டங்கள்- குடும்பப் பாதுகாப்பு நிதி**

பணியிலிருக்கும்போது இறக்கும் திருக்கோவில் பணியாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்பப் பாதுகாப்பு நிதி ரூ.30,000 என்பது ரூ.60,000 ஆக 5.3.1999 அன்று உயர்த்தப்பட்டது.

**சிறப்பு வருங்கால வைப்புநிதி**

ஆண்டு ஒன்றுக்கு ரூ.1 இலட்சமும், அதற்கு மேலும் வருமானம் தரக்கூடிய திருக்கோவில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 7 இலட்ச ரூபாய் வைப்பீட்டு நிதியுடன் சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப்படி, மாதம் தோறும் 20 ரூபாய் உறுப்பினர் கட்டணத்தொகை செலுத்தும் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது, அவர்கள் செலுத்திய உறுப்பினர் கட்டணத் தொகை, வட்டியுடன் அவருக்கு திரும்பத் தரப்படும்போது ஆணையர் பங்குத் தொகை 500 ரூபாய் என்பது 1,000 ரூபாயாக 12.2.1999 அன்று உயர்த்தி வழங்கப்படுகிறது.

**பணியாளர்கள் சேமநல நிதி**

10 ஆயிரம் ரூபாய்க்குமேல் உதவித்தொகை நிர்ணய வருமானம் உள்ள திருக்கோவில்களில் பணிபுரியும் திருக்கோவில் பணியாளர்களுக்கு பணியாளரின் சம்பளத்தில் 10 சதவிகிதம் பிடித்தம் செய்து, பிடித்தம் செய்த தொகைக்கு இணையான தொகையினைத் திருக்கோவில் நிதியிலிருந்து இத்திட்டத்திற்கெனத் தொடங்கப்பட்ட வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு, பணியாளர் ஓய்வுபெறும் தேதியில் மேற்படித் தொகை வட்டியுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1.10.1997 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**ஓய்வூதிய நல நிதி**

திருக்கோவில்களில் 20 ஆண்டுகாலம் பணியாற்றி 60 வயதில் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் 300 ரூபாய் என்பது 9.9.1996 முதல் 500 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. இத்திட்டப்படி, சைவத் திருக்கோவில் களில் பணியாற்றும் 468 அர்ச்சகர்களும், வைணவத் திருக்கோவில்களில் பணியாற்றும் 175 அர்ச்சகர் களும், வேதபாராயண திவ்விய பிரபந்தம் மற்றும் அரையர் சேவை செய்யும் 43 பணியாளர்களும், 85 இசைக் கலைஞர்களும், 117 ஓதுவார்களும் ஆக 888 பேர் பயன்பெற்று வருகின்றனர்.

**திருக்கோவில் பணியாளர்களுக்கான வேறுபல நலத்திட்டங்கள்**

பணியாற்றும் காலத்தில் இயற்கை எய்தும் திருக்கோவில் பணியாளர்களின் இறுதிச் சடங்கு களுக்காக 17.9.1997 முதல் 2000 ரூபாய் முன்பணமாக வழங்கப்படுகிறது. அறநிலையங்களில் பணியாற்றி வருகின்ற பணியாளர்களுக்குத் திருமண முன்பணமாக பணியாளரின் மகன் திருமணத்திற்கு ஆறாயிரம் ரூபாயும், மகள் திருமணத்திற்கு பத்தாயிரம் ரூபாயும், திருக்கோவில்களின் நிதிவசதி களுக்கேற்ப 17.9.1997 முதல் வழங்கப்படுகிறது. திருக்கோவில் பணியாளர்களுக்கும் பண்டிகை முன்பணமாக ஆயிரம் ரூபாய் 9.10.1997 முதல் வழங்கப்படுகிறது. மருத்துவப்படியாக மாதம்தோறும் 50 ரூபாய் 17.9.1997 முதல் வழங்கப்படுகிறது. சீருடை சலவைப் படியாக 17.9.1997 முதல் மாதம் தோறும் 10 ரூபாய் வழங்கப்படுகிறது. இரு சக்கர வாகனம் வாங்க 17.9.1997 முதல் 20,000 ரூபாய் வரை கடனாக வழங்கப்படுகிறது. ஒரு இலட்சத்திற்கு மேல் உதவித் தொகை நிர்ணய வருமானம் பெறக்கூடிய திருக்கோவில்களில் 10 ஆண்டுகளுக்குமேல் ஒரே நிலையில் பணிபுரியும் திருக்கோவில் பணியாளர் களுக்குத் தேர்வு நிலையும், 20 ஆண்டுகளுக்குமேல் ஒரே நிலையில் பணிபுரியும் பணியாளர்களுக்குச் சிறப்பு நிலையும் 1.10.1997 முதல் வழங்கப்படுகின்றன. 1.1.1998 வரை முதுநிலை திருக்கோவில் பணியாளர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த அகவிலைப்படி, 1.1.1998 முதல் ரூபாய் 1 - இலட்சத்திற்குமேல் வருமானம் பெறும் திருக்கோவில்களைச் சார்ந்த அனைத்துப் பணியாளர் களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வழங்கப்படுகிறது. 1990இல் திருக்கோவில் பணியாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட வீட்டுவாடகைப் படி 1.6.1998 முதல் 100 விழுக்காடு உயர்த்தி வழங்கப்படுகிறது. நகர ஈட்டுப் படியும் 1.6.1998 முதல் அனைத்து திருக்கோவில் பணியாளர்களுக்கும் 100 விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

• • •

# மின்துறையின் சாதனைகள்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி ஆகியவைகள் அந்த நாட்டிலே மின்சாரம் எந்த அளவிற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பதைப் பொறுத்தே அமையும். 1996ஆம் ஆண்டில் மீண்டும் கலைஞர் அரசு பொறுப்புக்கு வந்த பிறகு மின்துறை வாயிலாக மேற்கொள்ளப்பட்ட சாதனைகள் ஈண்டு தொகுத்தளிக்கப்படுகிறது.

இந்தியாவிலேயே முதலாவதாக தமிழ்நாடு விவசாயிகள் அனைவருக்கும் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படும் பம்பு செட்டுக்கான மின்சாரத்தை முன் தேதியிட்டு அதாவது 1-9-1990 முதல் இலவசமாக வழங்குவதென்று 17-11-1990 அன்று ஆணையிடப்பட்டது. இதனால் தமிழகத்தில் சுமார் 16 இலட்சம் விவசாயிகள் பயனடைகிறார்கள். மொத்த மின் நுகர்வில் விவசாயத்திற்காக வழங்கப்படும் இலவச மின்சார அளவு அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு மொத்த நுகர்வில் இது 25 விழுக்காடிலிருந்து 27 விழுக்காடாக உயருமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக மின் வாரியத்திற்கு ஆகும் செலவு 2000 கோடி ரூபாயைத் தாண்டுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

கரும்பு விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்த கரும்பை வெட்டி அரவை செய்ய தனியாக மின் கட்டணம் வசூலிக்காமல் இலவசமாக வழங்கிட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இந்திய அரசு அனல் மின் உற்பத்தி நிலையங் களுக்கு அவற்றின் சீரிய செயல்பாட்டின் அளவீடுகளுக்கு ஏற்ப விருதுகள் வழங்க திட்டங்கள் வகுத்துள்ளது. தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்கள் 97-98ஆம் ஆண்டில் சிறப்பான செயல்பாட்டிற்காகவும், குறைந்த அளவிலான எரி எண்ணெய் உபயோகம் மற்றும் அனல் மின் நிலைய துணை உபகரணங்களில் குறைவான மின்சக்தி உபயோகத்திற்காகவும் விருதுகள் வென்றுள்ளன. எண்ணூர் அனல் மின் நிலையம் குறைந்த அளவு எரி எண்ணெய் உபயோகத்திற்கான விருதினை வென்றுள்ளது. இந்திய அரசு 39.35 இலட்சம் ரூபாய் இம்மூன்று அனல் மின் நிலையங்களுக்கும் பரிசுத் தொகையாக வழங்கியுள்ளது.

1998-1999 மற்றும 1999-2000ஆம் ஆண்டு களிலும் அனல் மின் நிலையங்களின் செயல்பாடு தொடர்ந்து பரிசு பெறும் அளவிற்கு நடை பெற்றுள்ளன. அதற்கான செயற்குறிப்பு மத்திய மின்சார ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

மின்வாரியத்திற்குத் தேவையான உதிரி பாகங்களை தரம் பார்த்து குறைந்த விலையில் வழங்க பாரத கனரக நிறுவனமும் மற்றும் பிற உற்பத்தி யாளர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

தமிழ்நாடு மின்வாரியத்தின் கட்டுப்பாட்டில் தற்போது 19.355 மெகாவாட் நிறுவுத்திறன் கொண்ட காற்றாலைகள் இயங்கி வருகின்றன. 30-9-2000 நிலவரப்படி தனியார் காற்றாலைகளின் மொத்த நிறுவுத்திறன் ஆண்டு ஒன்றுக்கு 765.190 மெகாவாட் ஆகும். தனியார் துறை காற்றாலை மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை தமிழ்நாடு மின் வாரிய கட்டமைப்பில் செலுத்தலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

**நமது மின் உற்பத்தியின் அளவு :**

தற்போதைய இணைமின் உற்பத்தியின் மொத்த நிறுவுத் திறன் 142.1 மெகாவாட்டாகும். 19 மெகாவாட் நிறுவுத் திறன் கொண்ட இணை மின் உற்பத்தித் திட்டம் ஒன்று திருவண்ணாமலையில் உள்ள அருணாசலம் சர்க்கரை ஆலையில் விரைவில் இயக்கி வைக்கப்படவுள்ளது. தமிழ்நாடு மின் வாரியம் மேலும் 7 சர்க்கரை ஆலைகளில் 162 மெகாவாட் திறன் கொண்ட இணை மின் உற்பத்தி திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இணை மின் திட்ட வளர்ச்சி யில் தனியாரை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கரும்பு சக்கை மூலம் தயாரிக்கப்படும் இணை


மின்சாரத்திற்கு 1-4-2000 முதல் யூனிட் ஒன்றுக்கு ரூ. 2.73 விதம் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்டு இந்த விலை ஆண்டுதோறும் 5 விழுக்காடு என்ற விகிதத்தில் 9 ஆண்டுகளுக்கு உயர்த்தப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

தமிழக அரசு தன்பயன் மின்னாக்கி கொள்கையை 22-4-1998 அன்று வெளியிட்டுள்ளது. தன்பயன் மின்னாக்கி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியை உற்பத்தியாளர்களே பயன்படுத்தலாம். மின்னாக்கி நிறுவனத்தின் மற்றொரு சகோதர நிறுவனமும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

தாவர மற்றும் விவசாயக் கழிவுகளைப் பயன்படுத்தி 12 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் ஒன்று காஞ்சிபுரம் மாவட்டம் பழையசீவரம் கிராமத்தில் இயங்கி வருகிறது. மேலும் 10 மெகாவாட் திட்டம் ஈ.ரோடு மாவட்டத்தில் உள்ள வேலம்பாளையம் கிராமத்தில் அமைத்திட மின் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் சூரிய வெப்பத்தை பயன்படுத்தி 165 கிலோ வாட் திறன் கொண்ட நான்கு சூரிய மின்சக்தி உற்பத்தி திட்டங்கள் இயங்கி வருகின்றன. சூரிய மின்சக்தி உற்பத்தியில் தனியார் நிறுவனங்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்நாடு மின்சார வாரியம் சூரிய வெப்ப மின்கலப் பெட்டிகளின் மூலமாக உற்பத்தி செய்யும் மின்சாரத்தை யூனிட் ஒன்றுக்கு ரூ. 2.25 என்ற விலையில் வாங்குகிறது. இந்த விலை 1-1-2001 முதல் மறு பரிசீலனை செய்யப்பட உள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பிப்ரவரி 98இல் 8 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திறன் கொண்ட கீழ்பவானி புனல் மின் திட்டமும், பிப்ரவரி 99இல் 196 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திறன் கொண்ட பேசின் பாலம் டீசல் எஞ்சின் மின் திட்டமும், மார்ச் 99இல் 7.5 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய சாத்தனூர் புனல் மின் திட்டமும், மார்ச் 2000இல் 30 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய பார்சன்ஸ் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டமும், மார்ச் 2000இல் 1.95 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய திருமூர்த்தி சிறுபுனல் மின் திட்டமும், ஆகஸ்ட் 2000இல் 0.70 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய முக்குருத்தி சிறுபுனல் மின் திட்டமும் என மொத்தம் ரூபாய் 942 கோடி செலவில் 244 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட 6 மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.



வருடத்திற்கு புதியதாக 60 துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டும் என்று முடிவு செய்து இதுவரை 233 துணை மின் நிலையங்கள் 3245 எம்.வி.ஏ திறனில் ரூபாய் 1720 கோடி செலவில் இந்த அரசினால் நிறுவப்பட்டுள்ளன.

முந்தைய அரசு பொறுப்பில் இருந்தபோது நுகர்வோரின் தேவையை ஈ.டு செய்த உச்ச மின் அளவு 4424 மெகாவாட்டாக இருந்தது. அது இப்போது 5932 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. இந்த அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் இந்த உச்ச மின் அளவை எய்த முடிந்தது.

நமது அனல் மின் நிலையங்களின் உற்பத்தி அளவு கடந்த கால ஆட்சியில் 66.7 சதவிகிதம் என்றிருந்தது தற்போது சராசரியாக 80.24 சதவிகிதம் என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்குவது குறைக்கப்பட்டதால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு சுமார் ரூ. 174 கோடி மிச்சப்படுத்தப்பட்டது.

இந்த அரசு பொறுப்பேற்றபிறகு வரையறுக்கப் பட்ட ஒப்பந்தப்புள்ளி (Limited Tender) முறையை வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி (Open Tender) முறையாக மாற்றியதன் மூலம் மின்வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.108 கோடி மீதப்பட்டுள்ளது.

நிலக்கரியை துறைமுகங்களிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்காக புதிய ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டதின் மூலமாக மட்டும் மின் வாரியத்திற்கு 1-12-1997 முதல் ஆண்டு ஒன்றுக்கு 128 கோடியே 64 இலட்சம் ரூபாய் சேமிப்பு கிடைத்து வருகிறது.

ஜி.எம்.ஆர். வாசவி என்ற தனியார் மின் உற்பத்தி நிறுவனத்திடமிருந்து வாங்குகின்ற மின்சாரத்தின் விலை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அதிலே சில மாற்றங்களைச் செய்து உச்சத்தேவை நேரத்தில் மட்டும் 196 மெகாவாட் மின்சாரம் வாங்கப்பட்டு, இரவில் வாங்கப்படும் மின்சாரத்தை 100 மெகாவாட்

அளவிற்கு குறைத்ததினால் மாதத்திற்கு சுமார் ரூ.6 கோடி மிச்சப்படுத்தப்படுகிறது.

முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் 1,43,706 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்புக் கொடுத்ததற்கு மாறாக கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் 30–11–2000 வரை 2,73,973 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது.

முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் 15,90,276 வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுத்ததற்கு மாறாக கடந்த நான்கரை ஆண்டுகளில் 23,69,459 வீடுகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது.

முந்தைய அரசு 2,29,834 வணிக நிறுவனங்களுக்கு மின் இணைப்பு தரப்பட்டதற்கு மாறாக இந்த நான்கரை ஆண்டுகளில் 3,77,245 வணிக நிறுவனங்களுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது.

1991 முதல் 1996 வரையில் 10,694 உயர் மட்ட, தரை மட்ட நீர்த்தேக்க தொட்டிகளுக்கான மின் இணைப்புகள் தரப்பட்டதற்கு மாறாக கடந்த நான்கரை ஆண்டுகளில் 24,721 மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளன.


முந்தைய ஆட்சியிலே 179 துணை மின் நிலையங்கள் மட்டுமே தொடங்கப்பட்டது. ஆனால் இந்த ஆட்சியில் 233 துணை மின் நிலையங்கள் இதுவரை தொடங்கப்பட்டுள்ளன.

1991 முதல் 1996 வரை நடைபெற்ற ஆட்சியில் நிறுவப்பட்ட மின் தேக்கிகள் (M.V.A.R.Capacitors) 216 கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் நிறுவப்பட்ட மின் தேக்கிகள் 1645.

முந்தைய ஐந்தாண்டு கால ஆட்சியில் தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு தரப்பட்ட மின் இணைப்புகள் 48,237. இந்த நான்கரை ஆண்டு கால ஆட்சியில் 73,311 மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளன.

"ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு" என்ற திட்டத்தின்கீழ் கடந்த நான்கரை ஆண்டுகளில் 2,07,597 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சை மலையில் 1999–2000 ஆண்டில் இரண்டு மலை வாழ் குக்கிராமங்களுக்கும் 2000–2001 ஆண்டில் 30–9–2000 வரை நான்கு மலைவாழ் குக்கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து தரப்பட்டுள்ளது.

கடந்த நான்கரை ஆண்டுகளில் 1,64,290 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளன.



மின் பயனீட்டு அளவு கடந்த கால ஆட்சியில் 1991ஆம் ஆண்டிலே இருந்ததை விட எந்த மாற்றமும் இல்லை. 24,610 மில்லியன் யூனிட் என்ற அளவிலேயே இருந்தது. ஆனால் கடந்த நான்கரை ஆண்டுகளில் இந்த அளவு படிப்படியாக உயர்ந்து 31–3–2000இல் 30,434 மில்லியன் யூனிட் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.

இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளின் காரணமாக 106 மெகாவாட் திறன் கொண்ட சாமல்பட்டி மின் திட்டம் 2001 பிப்ரவரியிலும், 330 மெகாவாட் திறன் கொண்ட பிள்ளைப்பெருமாள் நல்லூர் மின் திட்டம் 2001 ஏப்ரலிலும், 106 மெகாவாட் திறன் கொண்ட சமயநல்லூர் மின் திட்டம் 2001 மே மாதத்திலும், 107 மெகாவாட் திறன் கொண்ட திருவாரூர் மின் திட்டம் 2001 பிப்ரவரி மாதத்திலும், 330 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் நிலையத்தில் கூடுதல் திட்டம் 2001 பிப்ரவரி மாதத்திலும் முடிவடைய உள்ளன. இத்திட்டங்கள் முடிவடைந்த பின்னர் தமிழகத்திலே கோடையிலும் மின்வெட்டு இருக்காது. விவசாயிகளுக்கு பகலிலும் ஆறு மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படும்.

250 மெகாவாட் திறனுள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி மின் திட்டத்திற்கு 14–8–98 அன்று மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேலும் 500 மெகாவாட் திறன் கொண்ட ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டத்திற்கு மும்பையைச் சேர்ந்த ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தார் முகவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 1885 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் எண்ணூர் எல்.என்.ஜி. எரி வாயு மின் திட்டத்திற்கு மும்பையைச் சேர்ந்த தட்சிண் பாரத் எனர்ஜி கன்சார்ட்டியம் முகவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தன்பயன் மின்னாக்கிகள் மூலம் மின் உற்பத்தி செய்து கொள்ளும் நூற்பு ஆலை, காகித ஆலை,

இரசாயன ஆலை, சர்க்கரை ஆலை போன்ற நிறுவனங்களுக்கு முற்றிலும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

காற்று, சூரிய சக்தி மற்றும் கரும்பு சக்கை மூலம் இணை உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு நிரந்தரமாக மின் உற்பத்தி வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**மின் பகிர்மானத்தில் சாதனைகள்**

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இந்த நிதியாண்டில் வீடுகளுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் "ஒரே நாளில் மின் இணைப்பு" என்ற புதிய திட்டத்தை பயனீட்டாளர்களின் நலன் கருதி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 1,50,000 மின் இணைப்புகள் ஒரே நாளில் வழங்கப்பட்டுள்ளன.

**தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பை துரிதப்படுத்த நடவடிக்கை**

உயர்மின் அழுத்த தொழிற்சாலைகள் மற்றும் தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு வழங்குவதை துரிதப்படுத்துவதற்காக இந்த அரசு எளிய வழிமுறைகளை வகுத்துள்ளது. புதிய விதிமுறைகளின் படி 500 கே.வி.ஏ வரையிலான உயர் மின்னழுத்த தொழிற்சாலைகளுக்கான புதிய மின் இணைப்பிற்கோ அல்லது கூடுதல் மின்பளுவிற்கோ விண்ணப்பிப்பவருக்கு, அவர் கேட்கும் மின் பளுவை இணைக்க தற்பொழுதுள்ள உயர்சக்தி மின்மாற்றியின் கொள்ளளவு போதுமானதா என்பதை மட்டும் உறுதி செய்து, மின் இணைப்பு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் இந்த விதிமுறையை விரைவாக செயல்படுத்த, தயார் நிலையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளித்து இணைப்புக் கொடுக்க மண்டல தலைமைப் பொறியாளரிடமிருந்த அதிகாரம் அந்தந்த வட்ட மேற் பார்வை பொறியாளர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

இதைப்போலவே தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு ஐந்து (5) குதிரைத்திறனுக்கு குறைவாக இருந்து எந்தவித மின்கம்பித்தொடர் நீட்டிப்பும் தேவை இல்லாமல் இருந்தால் அனைத்து கட்டணமும் செலுத்திய உடனே மின் இணைப்பு வழங்கப்படும். மின்கம்பித் தொடர் நீட்டிப்பு தேவையெனில் 15 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்படும். ஐந்து (5) குதிரைத் திறனுக்கு மேல் 150 குதிரைத்திறனுக்குள் உள்ள புதிய தொழிற்சாலைகளுக்கு மின்கம்பித் தொடர் நீட்டிப்பு தேவை இல்லையெனில் 15 நாட்களுக்குள்ளும், மின்கம்பித் தொடர் தேவையெனில் 30 நாட்களுக்குள்ளும் மின் இணைப்பு வழங்கப்படும். புதியதாக மின்மாற்றி அமைப்பது, மின்கம்பித் தொடர் நீட்டிப்பு பணி மற்றும் இதர பணிகள் தேவைப்படும் மற்ற எல்லா குறைவழுத்த தொழிற்சாலைகளுக்கும் பணம் பெறப்பட்ட 90 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

**இன்டர்நெட் மூலம் மின்தடை புகார் பதிவு செய்தல்**

பொதுமக்கள் மின்விநியோகம் சம்பந்தமான தங்களது குறைகளைக் களைவதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைமையகத்தில் ஒரு புகார் அலுவலகம் (கம்ப்ளெயின்ட் செல்) நிறுவப்பட்டுள்ளது. இந்தப் புகார் அலுவலகத்தில் இதுவரை 900 புகார்கள் பெறப்பட்டு அவற்றின் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், புகார்களை இன்டர்நெட் மூலம் அனுப்புவதற்கு ஏதுவாக ஒரு வெப்சைட் அடிப்படையிலான ஒரு புகார் அலுவலகமும் நிறுவப்பட்டுள்ளது. தமிழகத்தில் எங்கிருந்து வேண்டுமானாலும் புகார்களை பொதுமக்கள் தலைமையகத்திற்கு இன்டர்நெட் மூலம் அனுப்பலாம். இவற்றின் மீது மின்வாரியம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கும். இந்த மாதிரியான திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில்தான் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**இருவழி தகவல் தொடர்பு சாதனம் மூலம் புகார்களைப் பதிவு செய்தல்**

மின்தடை ஏற்பட்டால், புகார் செய்வதற்கு தனியாக ஒரு புகார் அலுவலகம் (Cell) நிறுவப்பட்டு கடந்த ஓராண்டு காலமாக செயல்பட்டு வருகிறது. இதன் காரணமாகவும் சென்னையில் மின்வாரியம் பல நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாகவும் புகார்கள் வெகுவாகக் குறைந்துள்ளன. மின்தடை சம்பந்தப்பட்ட புகார்கள் அலுவலகத்தின் தொலைபேசி (ப்யூஸ் ஆஃப் கால் அலுவலகம்) தொடர்பு கிடைப்பதில்லையென்ற குற்றச்சாட்டு இருந்து வந்ததைக் கருத்திற்கொண்டு 50 இலட்ச ரூபாய் செலவில் ஐ.வி.ஆர்.எஸ் என்னும் நவீன புகார் பிரிவு ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. பொது மக்களுடைய புகார்கள் கணிப்பொறியில் பதிவு செய்து சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு அந்தப் புகார்கள் ஃபேக்ஸ் மூலம் அனுப்பப்பட்டு, குறைகள் களையப்பட துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்ற திருப்தி தற்போது மின்பயனீட்டாளர்களுக்கு கிடைத்துள்ளது.

## SCADA திட்டம்

SCADA (Supervisory Control and Data Acquisition System) என்ற புதிய திட்டத்தை 19 கோடி ரூபாய் செலவில் சென்னையில் முதன்முதலில் தொடங்கி வைக்கப்பட்டு வெற்றி கரமாக செயல்படுகிறது. இது சென்னையிலுள்ள 96 துணை மின் நிலையங்களையும் ஒன்றாக இணைத்து எங்கெங்கு கூடுதல் மின்சாரம் இருக்கிறதோ அங்கிருக்கும் மின்மாற்றி மூலமாக மின்சாரம் தேவைப்படும் இடத்திற்கு மாற்றி மின்னோட்டத்தை சீராக்குகிறது. இத்திட்டம் விரைவில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து துணை மின் நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

தேசிய சராசரி மின் இழப்பு 21 விழுக்காடாகும். தமிழக அரசும் தமிழக மின்சார வாரியமும் எடுத்த நடவடிக்கைகளினால் இம்மாநிலத்தின் மின் இழப்பு 16.75 விழுக்காடாகும். இந்த ஆண்டு மிக உயர்வழுத்த மின் தேக்கிகளை வாங்கி நிறுவப்பட்டிருப்பதால் மின் இழப்பு சுமார் ஒரு சதவிகித அளவிற்கு குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தரமான மின் அளவிகளை தற்போது பயன்படுத்துவதால் மின் இழப்பு மேலும் குறையவும் வாய்ப்புள்ளது.

### மின் தணிக்கை


தமிழ்நாடு மின்வாரியம் 5–3–1997இல் பிறப்பித்த தொழிலகங்களில் மின் தணிக்கை செய்யும் திட்டம் காரணமாக மின் செலவு மிச்சப்படுத்தப்படுகிறது.

### மின் கட்டண விகிதம்

தமிழகத்திலே 7–1–2000 முதல் வீடுகளுக்கான மின் இணைப்புக் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 134 பைசா. ஆந்திராவில் 4.6.2000 முதல் யூனிட் ஒன்றுக்கு 350 பைசா. கர்நாடகத்தில் 15–7–1998 முதலே 183 பைசா. மகாராஷ்டிரத்தில் 1–5–2000 முதல் 215 பைசா. உயர் அழுத்த தொழிற்சாலை களுக்கு தமிழ்நாட்டில் யூனிட் ஒன்றுக்கு 388 பைசா, ஆந்திராவில் 450 பைசா, கர்நாடகத்தில் 428 பைசா, மகாராஷ்டிரத்தில் 453 பைசா. உயர் அழுத்த வணிக நிறுவனங்களுக்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு தமிழகத்தில் 460 பைசா, ஆந்திராவில் 518 பைசா, கர்நாடகத்தில் 527 பைசா, மகாராஷ்டிரத்தில் 444 பைசா. தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாட்டில் 340 பைசா, ஆந்திராவில் 407 பைசா, கர்நாடகத்தில் 505 பைசா, மகாராஷ்டிரத்தில் 425 பைசா. தாழ்வழுத்த வணிக நிறுவனங்களுக்கு தமிழ்நாட்டில் 383 பைசா, ஆந்திராவில் 502 பைசா, கர்நாடகாவில் 460 பைசா, மகாராஷ்டிரத்தில் 440 பைசா. தமிழகத்தில் அதிக அளவில் அனல் மின்சாரம்தான் தயாரிக்கப்படுகிறது. புனல் மின் தயாரிப்பு குறைவாகத்தான் உள்ளது. இந்தச் சூழ்நிலையிலும் தமிழகத்தில் மின் கட்டணம் குறை வென்பது இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்.

### தொழிலாளர் நலன்

நான்கு அனல் மின் நிலையங்களில் பணி புரிந்த 7704 ஒப்பந்தத் தொழிலாளர்களையும், இரண்டு எரிவாயு சுழலி மின் நிலையங்களில் பணி புரிந்த 151 ஒப்பந்தத் தொழிலாளர்களையும் களப்பணி உதவி யாளர்களாக பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு 40 விழுக்காடு அளவு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இப்போது மீண்டும் ஊதிய மாற்றம் செய்ய குழு நியமிக்கப்பட்டு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.



சாதனைகளைக் குவித்துள்ள இந்த அரசு தொடர்ந்து தமிழகத்தில் மின்சார உற்பத்தி யிலும், அதனை சீராக விநியோ கிப்பதிலும், நுகர்வோருக்கு மின்வெட்டு இல்லாத நிலை மையை ஏற்படுத்தியிருப்பதிலும், இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் மின் பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழகம் இந்த ஆண்டு தன்னிறைவு கண்டு கோடை யிலும் மின் வெட்டே இல்லை என்ற ஒரு நிலையை சுதந்திரத் திற்குப் பிறகு இப்போதுதான் எய்தியுள்ளது என்பது ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

• • •

# உதவும் கரங்களாய் விளங்கும் உணவு கூட்டுறவுத் துறை!

உண்டி முதற்றே உலகு என்பதால், மாறி மாறி வரும் இயற்கை விளைவுகளாலும், சமூக விரோதிகளால் செயற்கையாக உருவாக்கப்படும் நிலைமைகளாலும், சமுதாயம் எவ்விதப் பாதிப்புக்கும் உள்ளாகிடாமல் காத்து, அத்தியாவசியப் உணவுப் பொருள்களைச் சேமித்து, அவற்றைச் சிந்தாமல் சிதறாமல் உரியவர்களுக்கு, தேவையான நேரத்தில், தகுதியான அளவில் விநியோகிப்பதில் மிகுந்த கவனத்துடனும், எச்சரிக்கையுடனும், கலைஞர் ஆட்சியில் தமிழகத்தில் உணவுப் பொருள்கள் விநியோகம் சீராகவும், செம்மையாகவும நடந்தேறி வருகிறது.

தமிழகத்தில் உள்ள அனைத்து பிரிவு மக்களுக்கும் போதுமான அளவிற்கு நியாயமான விலையில் அத்தியாவசிய பண்டங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டு பொதுவிநியோகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அது குறித்த விளக்கங்களையும் பொது விநியோகத் திட்டத் துறையின் மூலம் இந்த அரசு கடந்த நான்காண்டு காலமாக ஆற்றி வரும் பணிகளையும், பொது விநியோகத் திட்டம் பெருமளவிற்கு கூட்டுறவுத் துறையின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருவதால் அத்துறை நிகழ்த்தியுள்ள சாதனைகளையும் இங்கு விவரமாகத் தரப்பட்டுள்ளது.

- கூட்டுறவு அமைப்புகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், மகளிர் குழுக்களும் சேர்ந்து தமிழகத்தில் 27,306 நியாயவிலைக் கடைகள் மூலமாக 1 கோடியே 58 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு தேவையான அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருட்களை வழங்கி வருகிறது.

- இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் இந்தியாவிலே முதன் முதலாக கணினி மூலம் குடும்பங்களின் விவரங்களையும், குடும்பத் தலைவரின் புகைப்படத்தையும் பதிவு செய்து குடும்ப அட்டை வழங்கி இருக்கிறது.

- முந்தைய ஆட்சிக் காலத்தில் 31–12–1995 வரை ஒரு குடும்ப அட்டைக்கு மாதமொன்றுக்கு அதிகபட்சமாக வழங்கப்பட்ட அரிசி 12 கிலோ ஆகும். தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு அதாவது 1–1–96 முதல் தற்காலிக ஏற்பாடாக குடும்ப அட்டைக்கு 20 கிலோ என்று ஆணை வெளியிடப்பட்டது. ஆனால் இந்த ஆட்சியில் நிரந்தர ஏற்பாடாக குடும்ப அட்டைக்கு மாதமொன்றுக்கு 20 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

- முந்தைய ஆட்சிக் காலத்தில் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.3.75 என்று வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசில் ரூ.3.75 லிருந்து ரூ.3.50 ஆக குறைத்து வழங்கப்பட்டு வருகிறது.


- மைய அரசு தமது தொகுப்பிலிருந்து தமிழகத் திற்கு வழங்கும் அரிசியை வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு 1–4–2000லிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.5.90 வீதம் என்றும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.11.80 என்றும் நிர்ணயித்து வழங்கியது. 26–7–2000 லிருந்து வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு ரூ5.65 என்றும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு ரூ.11.30 என்றும் நிர்ணயித்து வழங்கி வருகிறது. ஆனால் நமது தமிழக அரசு இந்த விலை உயர்வை மக்கள் மீது சுமத்தாமல் ஏற்கனவே வழங்கி வந்த கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3.50 என்ற விலைக்கே தொடர்ந்து வழங்கி வருகிறது.

- முந்தைய ஆட்சிக் காலத்தில் 1,60,000 டன் வரை சாதாரண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.5.37 என்றும், சன்ன ரக அரிசி ரூ.6.17 என்றும் மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கியது. ஆனால் மத்திய அரசு தற்போது தனது தொகுப்பிலிருந்து வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கென 91,580 மெட்ரிக் டன் அளவிற்குதான் கிலோ அரிசி ரூ. 5.65 விலைக்கு வழங்கி வருகிறது. இதற்கு மேல் மத்திய அரசிடமிருந்து நாம் அரிசி வாங்கினால் அதன் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 11.30 ஆகும்.

- முந்தைய ஆட்சிக் காலத்தில் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கிய அரிசியினுடைய அளவு குடும்ப அட்டைக்கு 12 கிலோ என்ற

காரணத்தினால், சராசரியாக வழங்கப்பட்டு வந்த அரிசியினுடைய அளவு 1,30,000 டன்னிலிருந்து 1,60,000 டன் வரை இருந்தது. தற்போது குடும்ப அட்டைக்கு 20 கிலோ அரிசி வழங்கப்படுகின்ற காரணத்தினால், பொதுவிநியோகத் திட்டத்தில் 1,90,000 டன் சராசரியாக மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக வழங்கப்படும் அரிசியின் தேவையும் அதிகமாகிறது. அதனால் 1995–96–ல் உணவுப் பொருட்களுக்காக வழங்கப்பட்ட மான்யம் 615 கோடி ரூபாயிலிருந்து தற்போது இந்த ஆண்டு 1700 கோடி ரூபாய் வரை உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

- விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் நெல்லுக்கு முந்தைய ஆட்சியில் 1995–96இல் பொது ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு 360 ரூபாய் என்றும், சன்ன ரகத்திற்கு 375 ரூபாய் என்றும் விலை தரப்பட்டதற்கு மாறாக தற்போது இந்த ஆட்சியில் இந்த ஆண்டு பொது ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு 510 ரூபாயும், சன்ன ரகத்திற்கு 540 ரூபாயும் என்று விலை தரப்படுகின்றது.
- மேலும் மத்திய அரசு நிர்ணயித்த இந்த விலையை வழங்குவதுடன் இணைக் கொள்முதல் செய்கின்ற காலத்தில் 35 ரூபாயும், ஏக போகக் கொள்முதல் செய்யும்போது 50 ரூபாயும் குவிண்டால் ஒன்றுக்கு இடைநிகழ் செலவாக இந்த அரசு வழங்கி வருகிறது. ஆனால் முந்தைய ஆட்சிக் காலத்தில் இது போன்று இடைநிகழ் செலவாக தரப்படவில்லை. இந்த நான்கரை ஆண்டு காலத்தில் இடைநிகழ் செலவாக விவசாயிகளுக்கு 228 கோடியே 30 இலட்ச ரூபாய் மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட கூடுதலாக வழங்கியுள்ளது.
- இந்த ஆட்சிக் காலத்தில்தான் அதிக அளவில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 1995ஆம் ஆண்டு 3 இலட்சத்து 38 ஆயிரம் டன் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டதற்கு மாறாக இந்த ஆண்டு அதாவது நவம்பர் 30ஆம் தேதி வுரை 17 இலட்சத்து 57 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதனால் விவசாயிகளும் பயனடைந்துள்ளார்கள்.
- விவசாயிகளிடமிருந்து இவ்வாறு அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்து பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் அடக்க விலை கிலோ ஒன்றுக்கு ரூ.11.80–க்கு மேலாகும். விவசாயிகளின் நலன் கருதியும், நுகர்வோரின் நலன் கருதியும் இந்த அரசு நெல்லை விவசாயிகளிடமிருந்து அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்து வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்கள், மேலுள்ளவர்கள் என்று வித்தியாசம் பாராமல் அனைவருக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.3.50–க்கு வழங்குகிறது.
- கேரள மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ. 6.20 என்றும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு ரூ. 10 என்றும்; ஆந்திரப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு ரூ. 5.25 என்றும், வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு ரூ.12 என்றும்; கர்நாடகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு ரூ. 6.15 என்றும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு ரூ. 12.25 என்றும், மேற்கு வங்கத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு ரூ. 6.40 என்றும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு ரூ. 12.60 என்றும் வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கும்



எந்த விதமான பாகுபாடும் இன்றி ஒரு கிலோ அரிசி ரூ. 3.50 வீதம் 20 கிலோ வீதம் வழங்கப்படுகிறது.

- மைய அரசு 1–4–2000லிருந்து வருமான வரி செலுத்தக் கூடிய குடும்ப அட்டைதாரர்களுக்கு சர்க்கரை ஒதுக்கீடு செய்வதில்லை. எனினும் மாநில அரசு பாகுபாடின்றி அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் சர்க்கரை வழங்கி வருகிறது. லெவி இல்லாத சர்க்கரையை வெளிச் சந்தையிலே வாங்கி கிலோ ஒன்றுக்கு ரூ.13 என்று நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்து வருகிறது. இதன் காரணமாக 4 கோடியே 75 இலட்சம் கூடுதல் செலவு ஏற்படுகின்றது.

- ஏழையெளிய மக்களுக்கு சரியான அளவிலும் விரைந்தும் மண்ணெண்ணெய் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் 1997ஆம் ஆண்டில் ஒரு புதிய திட்டமாக மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் **(Kerosene Bunks)** அமைக்கப்பட்டு உள்ளன. இன்றைய நிலையில் 214 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும், 300 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கப்பட திட்டமிடப்பட்டு பல்வேறு நிலைகளில் பணி நடைபெற்று வருகிறது.

- முந்தைய ஆட்சிக் காலத்தின் இறுதியில் 20,266 முழுநேரக் கடைகளும் 1,749 பகுதி நேரக் கடைகளும் ஆக மொத்தம் 22,015 நியாயவிலைக் கடைகள் இருந்தன. தற்போது 23,082 முழுநேரக் கடைகளும், 4,224 பகுதிநேரக் கடைகளுமாக மொத்தம் 27,306 கடைகள் நடைபெற்று வருகின்றன.

- இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு மகளிரே நடத்தும் நியாய விலைக் கடைகள் என்ற வகையில் புதிதாகத் திட்டம் வகுக்கப்பட்டு அதையொட்டி இதுவரையில் 210 கடைகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

- மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொது விநியோகத் திட்டத்தினை வாரம்தோறும் ஆய்வு செய்திட அரசு ஆணையிட்டுள்ளது. கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு எந்தெந்த தேதிகளில் எந்தெந்த பொருட்கள் அனுப்பப்படுகின்றன என்ற விவரங்களை பொதுமக்களுக்கு தெரிவிக்கின்ற வகையில் நிலையான மாத அட்டவணை **(Fixed Calender System)** தயாரிக்கப்பட்டு மக்களுக்கு ஒளிவு மறைவின்றி எதுவும் வெளிப்படையாகத் தெரியக் கூடிய திட்டமாக செயல்படுத்திடவும் மாதந்தோறும் 100 சதவீதம் அளவில் நியாயவிலைக் கடைகளில் அரிசி ஒதுக்கீடு செய்யவும் ஆணையிட்டு நடைமுறைப்படுத்தப் படுகிறது.

- மாவட்ட அளவில் மற்றும் கோட்ட அளவில் பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களில் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள் பிரதிநிதிகளும் தன்னார்வ நுகர்வோர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக உள்ளனர். குடிமைப் பொருட்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினை சீரமைத்து அதனை ஒரு கூடுதல் காவல்துறை இயக்குநரின் (சிறப்பு நடவடிக்கை) கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, அப்பிரிவிற்கு ஒரு காவல் துறைத் தலைவர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் பணியிடங்கள் கூடுதலாக தோற்றுவிக்கப்பட்டு பொது விநியோகப் பொருட்கள் கடத்தப்படுவதும், பதுக்குவதும் தடுக்கப்படுகிறது. இதில் குற்றம் புரிபவர்கள் மீது இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின்கீழும் மற்றும் கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் விநியோகத்தை பராமரிக்கும் சட்டத்தின் கீழும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

- நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் தத்தம் அதிகார வரம்பிற்குட்பட்ட நியாயவிலைக் கடைகளைப் பார்வையிடுவதற்கும், அவர்கள் கண்டுபிடிக்கும் குறைபாடுகளை மாவட்ட மற்றும் வருவாய் கோட்ட அளவிலான பொது விநியோகத் திட்ட ஆலோசனைக் குழுக்களின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்தினை குடும்ப அட்டைதாரர்கள் அறிந்து கொள்ளும் வகையில் மக்கள் சாசனம் (Citizen's Charter) தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது.

- கிராம அளவில் பொது விநியோகத் திட்டத்தினை கண்காணிக்க கிராமப் பஞ்சாயத்துக்களின் பொது விநியோக ஆலோசனைக் குழுக்கள் அமைக்க ஊரக வளர்ச்சித் துறையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

- கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் குடிமைப் பொருள்




குற்றப் புலனாய்வுத் துறை, கூடுதல் காவல்துறை இயக்குநர் ஆகியோருடன் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சிறப்பு ஆணையாளர், இரு வாரங்களுக்கு ஒரு முறை பொது விநியோகத் திட்ட செயல்பாட்டினை ஆய்வு செய்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

- தற்போது அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றின் மொத்த எண்ணிக்கை 30 ஆகும். நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்திடும் வகையில் 2000–2001ஆம் ஆண்டில் ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சொந்தக் கட்டிடங்கள் இல்லாத நியாயவிலைக் கடைகளுக்கு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் உள்ளிட்ட பல அரசு திட்டங்கள் மூலம் 8,109 கடைகள் கட்டப்பட்டு நியாய விலைக்கடைகள் அவற்றில் இயங்கி வருகின்றன.

- **1996** ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரிசியின் கையிருப்பு **3.79** இலட்சம் டன்களாக இருந்தது, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி தட்டுப்பாடின்றி வழங்க வேண்டுமென்ப தற்காகவும், விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டும் நெல் கொள்முதல் செய்ததன் காரணமாக **2000** ஆம் ஆண்டில் அரிசியின் கையிருப்பு **10.57** இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது.

- **1995–96**ஆம் ஆண்டில் நவீன அரிசி ஆலைகள் மூல மாகவும், அரைவை முகவர்கள் மூலமாகவும் அரைக்கப்பட்ட நெல்லின் அளவு **3,26,754** டன்களாகும். இந்த ஆண்டு இதுவரை **13,51,819** டன்கள் அரைவை செய்யப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் தலைமைச் செயலாளர் தலைமையில் விலைவாசி கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடைபெறுகிறது. உன்னிப்பாகக் கண்காணித்து தேவைப்படும் நேரங்களில் வெளிச்சந்தையில் விலைவாசி ஏறும்போது கூட்டுறவு அமைப்புகளின் மூலமாகவும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும் பொருட்களை வாங்கி விநியோகித்து விலைவாசி ஏற்றத்தை குறைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

- பொருளாதார வளர்ச்சியில் அனைத்துப் பொருட் களும் அன்றாடம் விலையேறி வந்தபோதிலும் பொதுவாக விலைவாசிகள் கட்டுக்குள் இருக்கின்றன. உதாரணமாக துவரம் பருப்பு **1995** நவம்பர் மாதம் ரூ.**31.61** ஆக இருந்தது, இந்த ஆண்டு நவம்பர் மாதம் ரூ.**25.50** என்றும், கடலெண்ணெய் ரூ.**38.85** ஆக இருந்தது ரூ.**37.34** என்றும், நல்லெண்ணெய் ரூ.**42.70** ஆக இருந்தது ரூ.**37.05** என்றும், தேங்காய் எண்ணெய் ரூ.**48.55** ஆக இருந்தது ரூ.**40.96** என்றும், காய்ந்த மிளகாய் ரூ.**47.87** ஆக இருந்தது ரூ.**29.53** என்றும், புளி ரூ. **22.36** ஆக இருந்தது ரூ.**22.20** என்றும் இந்த ஆண்டு நவம்பர் திங்களில் விலை குறைந்துள்ளது.

- நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான நவீன அரிசி ஆலையில் உமி எரிபொருளாக பயன்படுத்தப்பட்டு வந்ததால் மாசு ஏற்பட்டு சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டது. மாசுக்கட்டுப்பாடு செய்யும் நோக்கத்தில் உமி எரிவாயுவைப் **(Gasifier)** பயன்படுத்தி இயக்குவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு நாகப்பட்டினம் மாவட்டத்தில் இயந்திர நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருவாரூர் நவீன அரிசி ஆலையில் இயற்கை வாயுவை பயன்படுத்தி இயக்கச் செய்ய இயந்திரங்கள் பொருத்தி சோதனை ஓட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

இயற்கை வாயு பயன்படுத்தியதால் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு இந்த ஒரு ஆலையில் மட்டும் மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் சேமிப்பு ஏற்படும்.

- உமிக் கரியைப் பயன்படுத்தி உயிர் உரம் **(Bio- fertilizer)** தயாரிக்க முடியும் என்பதை அறிந்து வேளாண்மை பல்கலைக் கழகத்தின் தொழிற்நுட்ப உதவியுடன் இந்த ஆண்டு ஏப்ரல் முதல் கடைச்சநேந்தல், எருக்கூர், திருவாரூர், பட்டுக்கோட்டை, சிதம்பரம் மற்றும் திம்மாவரம் ஆகிய ஆறு நவீன அரிசி ஆலைகளிலும் கிடைக்கும் உமிக் கரியைப் பயன்படுத்தி உயிர் உரம் தயாரிக்கப்பட்டு விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த ஆண்டு நவம்பர் முடிய நாற்பது இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள உயிர் உரம் விற்பனை யாகியுள்ளது. இத்திட்டம் முழு அளவில் செயல் படுத்தப்படும்போது ஆண்டு ஒன்றுக்கு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சுமார் ரூ.40 கோடி வரை வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

- தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்காலிகமாக பணிபுரிந்து வந்த 2,699 சுமை தூக்கும் தொழிலாளர்கள் இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

**கூட்டுறவு**

கூட்டுறவு அமைப்புகள் பொருளாதார வளர்ச்சிக்கான செயலாக்க மிக்கதும் ஆற்றல் வாய்ந்ததுமான கருவியாக விளங்குகின்றன. பொருளாதாரத்தின் பல்வேறுபட்ட நிலைகளில் போதுமான வளர்ச்சியை தமிழகக் கூட்டுறவு இயக்கம் கண்டுள்ளது. வேளாண் கடன், சந்தைத் தலையீடு, வேளாண்மைப் பொருட்களுக்கான ஆதரவு விலை மற்றும் பொதுவிநியோகம் போன்ற பல முக்கியக் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கான கருவி யாகக் கூட்டுறவுகள் அமைந்துள்ளன.

- தற்போது 23,000 கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்கள் உள்ளன. மேற்படி சங்கங்களில் உள்ள நிர்வாகக் குழுக்களில் சுமார் 40,000 மகளிர் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகவும், சுமார் 20,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் உள்ளனர். கூட்டுறவு நிறுவனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- 20 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்திலுள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபைகள் இல்லாத நிலைமையை மாற்றி ஜனநாயக முறையில் தேர்தல்கள் நடத்தப்பட்டு சிறப்பாக இயக்கி வருவதைப் பாராட்டும் முகத்தான் உலகின் மிகப் பெரிய உர நிறுவனங்களில் ஒன்றாகிய "இப்கோ" என்னும் உழவர் உரக் கூட்டுறவு நிறுவனம், 1998–99 ஆம் ஆண்டிற்குரிய "சக ஹாரித்தா பந்து" என்னும் விருதினை 51 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுடன் தமிழக கூட்டுறவுத் துறைக்கு 19–11–1999 அன்று புதுடெல்லியில் வழங்கியது.

- பொதுவிநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தும் சங்கங்களுக்கு அரிசிக்கு வழங்கப்படும் விளிம்புத் தொகை (Margin Money) குறைவாக இருந்த காரணத்தினால் பல சங்கங்கள் நிதிநெருக்கடியை சந்தித்த நிலையில், அரசு பரிசீலனை செய்து, அரசுக்கு ஏற்படும் கூடுதல் நிதிச் சுமையைக் கூட பொருட்படுத்தாது, 19–7–2000 முதல் விளிம்புத் தொகையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.28லிருந்து ரூ.45 ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. அதே போன்று மண்ணெண்ணெய்க்கு 26–3–2000 முதல் பேரல் ஒன்றுக்கு ரூ.61.92 என்று இருந்ததை பேரல் ஒன்றுக்கு ரூ.72 ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளது. மேலும், கோதுமைக்கு 21–1–2000 முதல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.17 என்றிருந்ததை ரூ.30 ஆக உயர்த்தி ஆணையிடப் பட்டுள்ளது.

- நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்களின் ஊதிய விகித முறை ரூ.430–10–450–15–525 இல் இருந்து ரூ.1250–25–1325–45–1640 என 1–4–2000 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. தொகுப்பூதியம் பெறும் விற்பனையாளர்களுக்கு ரூ.900 என்பது ரூ.1300 ஆக உயர்த்தப்பட்டது. கட்டுனர்களின் தொகுப்பூதியம் ரூ.800 என்பது ரூ.1150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 3292 கூட்டுறவு நகர வங்கி பணியாளர்களுக்கும், 1573 கூட்டுறவு நிலவளவங்கி பணியாளர்களுக்கும், 3862 கூட்டுறவு பணியாளர் சங்க ஊழியர்களுக்கும் மற்றும் 22,548 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி பணியாளர்களுக்கும் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு மூலமாக விவசாயிகளுக்கு அரசு அளித்த உதவிகள்:**

- குறுகிய காலப் பயிர்க் கடனுக்கு ஒரு சதவீத வட்டி 13-11-1997 முதல் குறைக்கப்பட்டது (13 விழுக்காட்டி லிருந்து 12 விழுக்காடு).
- 1996-97ல் வறட்சியாலும், 1997 நவம்பர் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாகவும், மத்திய காலக் கடன்கள் நீண்ட காலக் கடன்களாகவும் மாற்றியதால் அபராத வட்டித் தொகையாக ரூ.50 கோடி அளவுக்கு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- 1997-98ம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குறுகிய காலக்கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றியதால் 62 கோடியே 35 இலட்சம் ரூபாய் அரசு செலவிட்டது.
- 1998-99ல் குறுகிய காலப் பயிர்க்கடனை முறையாக திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு கடன் தொகையில் 6.25 சதவிகிதம் வட்டி ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது. இதனால் 1,47,654 பேர் 6 கோடியே 58 இலட்சம் ரூபாய் அளவுக்கு பயனடைந்தனர்.
- 1999-2000ல் வட்டி ஊக்குவிப்புத் தொகை 7 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 2,42,817 விவசாயிகளுக்கு 19 கோடியே 72 இலட்சம் ரூபாய் அளவிற்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது.
- 31-7-2000 வரை தவணை தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களை, வட்டியுடன் திருப்பிச் செலுத்திய 3,40,727 சிறிய, பெரிய விவசாயிகள் அனைவருக்கும் 13 கோடியே 20 இலட்சம் ரூபாய் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது.
- 1995-96ல் கூட்டுறவு வங்கிகள் மூலம் ஒருவருக்கு வழங்கப்பட்ட நகைக் கடன் ரூ.25,000/-ஐ 6-9-96 முதல் ரூ.50,000/- ஆகவும் 27-5-98 முதல் ரூ.1,00,000 ஆகவும் உயர்த்தப்பட்டது.
- குறுகிய காலப் பயிர்க்கடனாக ரூ.3512.58 கோடியும், வேளாண் சார்ந்த மத்திய காலக்கடனாக ரூ.434.39 கோடியும் மற்றும் நில மேம்பாட்டுக்கென நீண்ட காலக்கடனாக ரூ.867.42 கோடியும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- தமிழகத்தில் விவசாயிகள் கடன் அட்டை வழங்கும் திட்டத்தை 1999ம் ஆண்டு முதல் அமுல் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் 31-10-2000 வரை 1,64,837 விவசாயிகளுக்கு கிஸான் கடன் அட்டைகள் வழங்கப்பட்டு அவற்றிற்கு 606 கோடியே 29 இலட்ச ரூபாய் அளவிற்கு கடன் அளவு அனுமதிக்கப்பட்டுள்ளது.
- ரூ.5 கோடியும் அதற்கு மேலும் வைப்புத் தொகை வைத்துள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் புதிய வீடு கட்டிக்கொள்ள கடனுதவியாக ரூ.5 இலட்சம் வரையிலும், வணிகவளாகம் கட்டிக் கொள்ள கடனுதவி யாக ரூ.10 இலட்சம் வரையிலும், கணிப்பொறி மையம் அமைக்க கடனுதவியாக ரூ.10 இலட்சம் வரையிலும், விவசாய நிலம் வாங்க கடனுதவியாக ரூ.1 இலட்சம் வரையிலும், மூலப் பத்திர ஈட்டுக் கடனாக ரூ.1 இலட்சம் வரையிலும், மருத்துவமனை மற்றும் பொறியாளர் சேவை மையம் அமைக்க ரூ.10 இலட்சம் வரையிலும் நேரடியாக கடன் வழங்கி வருகின்றன.



- கூட்டுறவு வங்கிகள் மூலமாக வேளாண் சாரா கடன்கள் சிறு கைவினைத் தொழில்கள், தச்சுவேலை, வளையல், பிரம்பு, ரப்பர், தோல்

தொழில், மண்பாண்டம் செய்தல், அச்சகங்கள் அமைத்தல் போன்ற தொழில்களுக்கு கடந்த நான்காண்டுகளில் ரூ.761 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையில் ரூ.427 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

- 1996ம் ஆண்டு முதல் அக்டோபர் 2000 வரை ரூ.14 கோடியே 64 இலட்சத்திற்கு பூச்சிகொல்லி மருந்துகள் விவசாயிகளுக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் விநியோகம் செய்யப்பட்டன.

- அதே போல, 1996ம் ஆண்டு முதல் அக்டோபர் 2000 வரை ரூ.10 கோடியே 79 இலட்சத்திற்கு விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

- 1996ம் ஆண்டு முதல் அக்டோபர் 2000 வரை ரூ.3 கோடியே 13 இலட்சத்திற்கு வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

- 1996–97லிருந்து 2000–2001 வரை 71 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டடங்கள் ரூ.6 கோடியே 14 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 18 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டடங்கள் ரூ.2 கோடியே 34 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. 16 வங்கிகளின் கட்டடப்பணி நடைபெற்று வருகிறது.

- 1643 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு பாதுகாப்பு அறை மற்றும் பாதுகாப்பு கதவுகள் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

- நகர கூட்டுறவு வங்கிகள் கணினிமயமாக்கும் திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள 127 நகர கூட்டுறவு வங்கிகளில் இதுகாறும் 43 வங்கிகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளது.

- 1997ம் ஆண்டு முதல், புதிதாக 26 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளும் 62 இடங்களில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகளும் தொடங்க அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

- சரியான விலையில் தரமான பொருட்கள் பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் மொத்த விற்பனை பண்டக சாலைகள் மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன. புதியதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டங்களுக்கும் (விழுப்புரம், திருவண்ணா மலை, கரூர், நாமக்கல், திருவள்ளூர், பெரம்பலூர், தேனி) இதே நோக்கத்துடன் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தொடங்கப் பட்டுள்ளன.

- நட்டத்தில் செயல்பட்ட பல மொத்த விற்பனை பண்டகசாலைகள் முறையாக நெறிமுறைப்படுத்தப் பட்டு இன்றைய நிலையில் 22 மொத்த விற்பனை பண்டக சாலைகள் நடப்பாண்டு இலாபத்தில் இயங்கும் நிலைக்கு வந்துள்ளன.

- தமிழகத்தில் திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், திருவாரூர், நாகப்பட்டினம், திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், நாமக்கல், தூத்துக்குடி, கரூர், பெரம்பலூர், சென்னை ஆகிய 13 மாவட்டங்களில் புதிய மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் துவக்கப்பட்டுள்ளன.

- நாகர்கோவில், தருமபுரி , விழுப்புரம், திண்டுக்கல், திருச்சி, திருவாரூர், சிவகங்கை, நாமக்கல் ஆகிய 8 மாவட்டங்களில் புதிய கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. ஈரோட்டிலும், திருவண்ணாமலையிலும் புதிய கூட்டுறவு மேலாண்மை நிலையங்களை துவக்க அரசு ஆணையிட்டுள்ளது. நடப்பாண்டிலேயே இவை துவக்கப்பட உள்ளன.

- தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் (ஐ.டி.ஐ) ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.


- தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் திருச்சி மாவட்டம் இலால்குடியில் புதிய பாலிடெக்னிக் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

- தமிழகத்தில் செயல்படும் கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் வாயிலாக 43,288 நபர்களுக்கு முழுநேர கூட்டுறவு பட்டயப் பயிற்சியும், 10,172 நபர்களுக்கு அஞ்சல் வழி கூட்டுறவு பட்டயப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர், காஞ்சிபுரம், மதுரை ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவு மேலாண்மை நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

- திருநெல்வேலி, மொரப்பூர் ஆகிய கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் சொந்தக் கட்டடம் கட்டிக் கொள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

- கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப் பட்டவர்களின் புனர்வாழ்வுக்காக திண்டுக்கல் மாவட்டத்தில் 3 தொழிலாளர் தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன.



- காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுகாதார கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் வழக்கறிஞர்கள் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் துவக்கப் பட்டுள்ளன.
- மண்டல இணைப்பதிவாளர் களின் அலுவலகங்கள் கணினி மயமாக்கும் திட்டத்தின்கீழ் இதுகாறும் 15 அலுவலகங்கள் கணினிமயமாக்கப் பட்டுள்ளன.
- இந்த நான்கரை ஆண்டுகளில் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 1651 நபர்களும், நகரக் கூட்டுறவு வங்கிகளில் 796 நபர்களும், தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் 78 நபர்களும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 235 நபர்களும் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.
- பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும், 18 மலைவாழ் மக்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, பங்கு மூலதன மான்யம், வட்டி மான்யம், போக்குவரத்து மான்யம், வாகன ஓட்டுநர் மான்யம், வாகன பராமரிப்பு மான்யம் ஆகிய இனங்களுக்கு அரசு தொடர்ந்து நிதியுதவி வழங்கி வருகிறது. இதன்படி, 1996–97ம் ஆண்டில் ரூ.90 இலட்சம், 1997–98ம் ஆண்டில் ரூ.85 இலட்சம், 1998–99ம் ஆண்டில் ரூ.90 இலட்சம், 1999–2000ம் ஆண்டில் ரூ.90 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம் - சேமிப்புடன் கூடியது**

- 1–1–1999 அன்று சென்னையில் தொடங்கப்பட்டு, பின்னர் மற்ற மாநகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. 2–5–1999 முதல் அனைத்து நகராட்சி, பேரூராட்சிகளுக்கும் நீடிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தில் 5 ஆயிரம் ரூபாய் வரை கடனாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் இது வரை பயன் பெற்ற மகளிர் 1.59 இலட்சம் பேர். இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை ரூ.20 கோடியே 2 இலட்சம். நடப்பு ஆண்டில் கிராமப் புறங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- கிராமப்புறங்களில் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட சுய உதவிக் குழுக்களை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள 1999ல் அரசு ஆணை வழங்கியதை அடுத்து 31–10–2000 வரை 5,123 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, 651 சுயஉதவிக் குழுக்களுக்கு 2 கோடியே 49 இலட்ச ரூபாய் அளவிற்கு கடனுதவி அளிக்கப் பட்டுள்ளது.

அனைத்து மக்களுக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் அளிக்க வேண்டியது ஒரு நல்லரசின் கடமையாகும். அந்தக் கடமையினை தன் மனதிலே நிறுத்தி செயல்பட்டு வரும் இந்த அரசு கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் உணவுத் துறையிலே எந்தவிதமான பதற்ற நிலையும் வராமல் மத்திய அரசு அரிசியின் விலையை பல முறை ஏற்றிய போதிலும் அந்தச் சுமையை ஏழையெளிய மக்களின் தலையிலே ஏற்றாமல் செயல்பட்டு வருவது இந்த அரசு எந்த அளவிற்கு ஏழையெளிய, நடுத்தர மக்களுக்குப் பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்து வருகிறது என்பதற்கு சிறந்த சான்றாகும்.

• • •

# சமத்துவ சமுதாயம் அமைத்திடும் இந்த அரசின் சாதனைகள்!

**“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்”**

– என்று அய்யன் திருவள்ளுவர் வகுத்த வாக்கிற் கிணங்க தமிழகத்தில் சாதி சமய வேறுபாடுகளை அகற்றி சமத்துவ சமுதாயம் படைக்க வேண்டும் என்னும் உணர்வுடனும், உறுதியுடனும் செயல்பட்டு வரும் இந்த அரசு சமுதாயத்தின் அடித்தளத்தில் ஆண்டாண்டு காலமாக விழுந்து கிடக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களை முன்னேற்றுவதற் காக பல்வேறு சீரிய திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் மூலம் சமுதாய பொருளாதார அரசியல் விடுதலைகளை ஏழை எளிய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் எய்தி முன்னேற்றம் கண்டிட வேண்டும் என்பது இந்த அரசின் அவா. இந்த அவாவின் அடிப்படையில் வேலை வாய்ப்புகளிலும், கல்வி நிலையங்களிலும் இட ஒதுக்கீடுகள், ஏராளமான கல்விச் சலுகைகள், பொருளாதார மேம்பாட்டிற்கு மானியத்துடன் கூடிய பல நிதியுதவித் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. இவற்றின் மூலமாக கடந்த சில ஆண்டுகளாக ஏழை எளிய தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் படிப்படியாக உயர்ந்து ஒருவர் பின் ஒருவராக சமுதாயத்தில் ஏற்றம் பெற்று வருவதினை இன்று நாம் கண்கூடாகக் காண முடிகிறது.

மனிதநேய உணர்வுகளுக்குத் தெம்பூட்டுகின்ற இந்த வரலாற்று மாற்றங்களுக்கு மேலும் மேலும் வழி வகுத்து வருகிற இந்த அரசின் திட்டங்களால் 1996க்குப் பின் இந்தத் துறையிலே தமிழகத்தில் அடைந்துள்ள சாதனைகளை காணலாம்.



**ஆதிதிராவிடர் நலனுக்குத் தனித்துறை**

1969 வரை ஆதிதிராவிடர் நலத்துறையில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையும் இணைந்து இருந்தது. 2.5.1969 அன்று பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை எனப் புதிய துறையை தனியே உருவாக்கி – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – முழுவதும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலனுக் காகவே செயல்படும் நிலையை உருவாக்கிய அரசு 2000 ஆண்டில் பழங்குடியினர்க்குத் தனித் துறையை உருவாக்கி, ஆதி திராவிடர் நலத்துறை ஆதி திராவிட சமுதாய மக்களின் நலனிலும், புதிதாக உருவாக்கப்பட்ட பழங்குடியினர் நலத்துறை பழங்குடியினர் நலனிலும் முழுக் கவனம் செலுத்த வகை செய்துள்ளது.

**நிதி ஒதுக்கீடு**

ஆதி திராவிடர் நலன்களை மேம்படுத்து வதற்காக ஆண்டுக்காண்டு ஆதி திராவிடர் நலத்துறைக்கான நிதி ஒதுக்கீடுகளை அதிகரித்து, ஆதிதிராவிட சமுதாய மக்கள் பெரிதும் பயனடையக் கூடிய வகையில் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் ஆதி திராவிடர் ஆதி திராவிடர் நலனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ.696 கோடியே 16 இலட்சம் மட்டுமே. 1996க்குப் பின் இந்த அரசினால் ஆதிதிராவிடர் நலனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ.2,170 கோடியே 39 இலட்சம் ரூபாயாகும்.

**பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்**

சாதி சமய பிணக்குகளை அகற்றி அனைத்து சமுதாய மக்களும் நல்லிணக்கமாக ஒன்றுகூடி சமத்துவ உணர்வுடன் வாழ்கின்ற சூழ்நிலையை உருவாக்கும் வகையில் இந்திய சுதந்திரப் பொன் விழாவையொட்டி 1997ஆம் ஆண்டில் அரசு உருவாக் கிய புதுமையான, புரட்சிகரமான திட்டம் பெரியார்

நினைவு சமத்துவபுரத் திட்டம். இத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் ஒவ்வொரு சமத்துவபுரக் குடியிருப்பிலும், 100 வீடுகள் கட்டப்படுகின்றன. அவற்றுள் 40 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கும், 25 வீடுகள் மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், 25 வீடுகள் பிற்படுத்தப் பட்டவர்களுக்கும், 10 வீடுகள் இதர பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு ஆதிதிராவிடர் வீட்டின் இருமருங்கிலும் பிற சமுதாயத் தினரின் வீடுகள் அமையுமாறு இத்திட்டத்தில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இதுவரை 98 சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் 20 சமத்துவபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவிற்குத் தயாராய் உள்ளன.

**இலவச வீட்டு மனை**

1996க்குப் பின், 61 கோடியே 61 லட்சத்து 67 ஆயிரம் ரூபாய் செலவில் இலவச வீட்டுமனை பெற்ற ஆதிதிராவிடர்களின் எண்ணிக்கை 2,89,512.

**இலவச கான்கிரீட் வீடுகள்**

ஆண்டாண்டு காலமாக மண் குடிசைகளில் வாழ்ந்து வரும் ஆதிதிராவிட சமுதாய மக்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள் கட்டித் தந்து அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு அடித்தளம் அமைக்கும் சீரிய முயற்சியாக இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில்தான் ஆதி திராவிடர் இலவச வீட்டு வசதிக் கழகம் 15.2.1974 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டம் தான் இந்திரா வீட்டுவசதித் திட்டம் என மத்திய அரசால் ஏற்கப்பட்டு நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி ஓட்டு வீடுகளே கட்டப்பட்டு வந்த இத்திட்டத்திற்கு 1989இல் அமைந்த கலைஞர் அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து கான்கிரீட் வீடுகள் கட்ட ஆணையிட்டது. 1989, 1990 ஆகிய ஆண்டுகளில் 89,000 கான்கிரீட் வீடுகள் அரசினால் கட்டப்பட்டன. முந்தைய அரசு 5 ஆண்டுகளில் கட்டிய தொகுப்பு வீடுகள் 1,20,700. 1996 முதல் இதுவரையில் 631 கோடியே 6 லட்ச ரூபாய் செலவில் இந்த அரசு கட்டி முடித்துள்ள கான்கிரீட் தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை 2,96,131.

**ஜகஜீவன்ராம் பாராட்டு**

மத்திய அரசில் உணவு அமைச்சராகத் திகழ்ந்த பாபு ஜகஜீவன்ராம் அவர்கள் 1975 ஆம் ஆண்டு ஜனவரியில் செங்கற்பட்டு மாவட்டம் காட்டுப் பாக்கத்தில் அரிசன வீட்டுவசதிக் கழகத்தின் சார்பில் கட்டப்பட்டிருந்த குடியிருப்புகளைத் திறந்து வைத்து உரையாற்றியபோது, "மக்கள் நல அரசை, ஆட்சியை நாம் நடத்துகிறோம் என்றுதான் இந்தியாவில் கூறிவருகிறோம். மக்கள் நல அரசு என்ற வார்த்தைக்கு உண்மையான விசுவாசத்துடன் தமிழக அரசு பணியாற்றி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். வாடகை எதுவும் இல்லாமல் இலவசமாக இந்த வீடுகளை அரிசனச் சகோதரர்களுக்கு வழங்குவது என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் முடிவு செய்திருப்பது அவருடைய சீரிய மனப்பான்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். தமிழ்நாடு காட்டியுள்ள இந்தச் சிறந்த முன் உதாரணத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்ற முயலும் என்று நம்புவோமாக!" என்று பாராட்டியது இன்றைக்கும் பழைய நாளேடுகளில் அப்படியே உள்ளன.

**அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்**

1968ஆம் ஆண்டில் கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு தங்கப் பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப் பட்டது. 1974 ஆம் ஆண்டில் கலப்புத் திருமணம் செய்து கொள்வோர்க்கு ஒன்றரை சவரன் மதிப்புள்ள தங்கப் பதக்கமும், சிறுதொழில் தொடங்க வட்டியில்லாக் கடனும், 3 செண்ட் பரப்புள்ள வீட்டுமனையும், 200 ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கி ஊக்கம் அளிக்கப்பட்டது. 1976 சனவரியில் கலைஞர் அரசு கலைக்கப்பட்டபின் இத்திட்டத்திற்குப் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. 1989ல் கலைஞர் அரசு மீண்டும் அமைந்தபின் இந்தத் திட்டத்தின் நிதியுதவியை 5,000 ரூபாய் என நிர்ணயித்து அத்தொகையை தேசிய சேமிப்புப் பத்திரமாக தம்பதியர் இருவர் பெயரிலும் வழங்கியது. அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம் என பெயர் சூட்டப்பட்ட இத்திட்டத்திற்கு நிதியுதவி 1996ல் 10,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு அதில் 3,000 ரூபாய் ரொக்கமாகவும், 7,000 ரூபாய் சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படுகிறது. மணமக்களில் ஒருவர் ஆதி திராவிடர் எனில், 2.10.1997 முதல் இத்திட்ட நிதியுதவி 10,000 ரூபாய் என்பது 20,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு, 10 ஆயிரம் ரூபாய் ரொக்கமாகவும், 10 ஆயிரம் ரூபாய் தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படுகிறது. முந்தைய அரசு இத்திட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளில் 2793 தம்பதியருக்கு 1 கோடியே 39 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்கியதற்கு மாறாக 1996க்குப் பின் இத்திட்டத்தின் மூலம் 3281 தம்பதியருக்கு 4 கோடியே 72 லட்சத்து 65 ஆயிரம்ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**இட ஒதுக்கீடு**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும் இருந்த 16 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை 1971ஆம் ஆண்டில் 18 விழுக்காடாக உயர்த்தியது கலைஞர் அரசு. பின்னர் 1990இல் பொது ஒதுக்கீட்டிலிருந்து ஒரு விழுக்காடு எடுத்து, பழங்குடியினருக்கு தனியே ஒரு விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கியதுடன், ஆதி திராவிடர்களுக்கு மட்டும் 18 விழுக்காடு இட ஒதுக்கீடு முழுமையாகக் கிடைக்க வழி செய்துள்ளது கலைஞர் அரசு. கல்வி நிறுவனங்களில் சேருவதற்கும், வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கும் மதம் மாறிய ஆதிதிராவிட கிறித்தவர்களில் முதல் தலைமுறைக்கு மட்டும் வழங்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோருக்குள்ள இட ஒதுக்கீடு சலுகை ஆதிதிராவிட கிறித்தவர்களின் எல்லாத் தலைமுறைக்கும் வழங்கப்பட்டது.

**பின்னடைவு பணியிடங்களை நிரப்பிட சிறப்பு நியமனத் தேர்வு**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்டு ஆனால், நிரப்பப்படாமல் பின்னடைவாக உள்ள பணியிடங்களுக்கு ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கென ஒரு சிறப்பு நியமனத் தேர்வு முனைப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2.1.1997 அன்று இந்த அரசினால் ஆணையிடப்பட்டு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகப்படுத்தப் பட்டுள்ளன.

**காலியிடங்களை நிரப்பிட சிறப்புக் குழு**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை 27.7.1989 அன்றும், பிற்படுத்தப்பட்டோர் நலன், மற்றும் சமூகநலத் துறை 21.8.1989 அன்றும் வெளியிட்ட இரண்டு ஆணைகளின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர் ஆகிய இனத்தவர்களுக்கு நேரடி நியமனங்களில் இடஒதுக்கீடு செய்யப்பட்டு நிரப்பப் படாமல் உள்ள காலிப் பணியிடங்களை இட ஒதுக்கீட்டிலிருந்து நீக்கும் முறை இந்த அரசினால் தடை செய்யப்பட்டது.

அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப் பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப் பட்டோர்/சீர்மரபினர் ஆகியோருக்கு இடஒதுக்கீடு குறித்து ஆய்வு செய்ய ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்களின் தலைமையின்கீழ் இரண்டு உயர்நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களின் அறிக்கைகளை அமைச்சரவை ஆய்வு செய்து பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

“பத்தும் அதற்கு மேலும் எண்ணிக்கையுள்ள பணி நிலைப் பிரிவுகளுக்கு மட்டும் இட ஒதுக்கீடு பின்பற்ற வேண்டும் என்ற விதியை மாற்றி ஒன்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையுள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கும் இடஒதுக்கீட்டு முறையை அமுல்படுத்தலாம்; இவ்விட ஒதுக்கீட்டு முறையை நடப்பிலுள்ள இனச்சுழற்சி அடிப்படையில் கடைப்பிடிக்கலாம்; பணிமாறுதல் முறை மூலம் நியமனம் செய்யப்படும் பணி இடங்களிலும் இடஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படலாம்; இட ஒதுக்கீட்டு முறையை பல்கலைக் கழகங்கள்/தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள்/வங்கிகள் / மாவட்ட மத்திய கூட்டுறவு நிறுவனங்கள் / வங்கிகள்/பொதுத்துறை நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தலாம்; ஒதுக்கீட்டுக் குரிய எந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பினரும் பணி நியமனத் தேர்வு பெறுவதற்குரிய மதிப்பெண்களைப் பெறத் தவறினால் வேறு பிரிவினரைத் தேர்வு செய்வதைத் தவிர்த்து அடிப்படைத் தகுதிகளை அப்படியே வைத்துக் கொண்டு, அவர்கள் தேர்வு பெற ஏற்ற வகையில் தகுதிக்குரிய மதிப்பெண்கள் குறைக்கப்பட வேண்டும். 1.4.1989 முதல் முன் கொணரப்பட்ட பின்னடைவுப் பணியிடங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்; உரிய பிர்திநிதித்துவம் இல்லையெனில் எத்தனை பணியிடங்கள் குறைகின்றனவோ, அப்பணி யிடங்களை ஒவ்வொரு பதவியிலும் கணக்கில்



கொண்டு அத்துறையிலுள்ள நுழைவுப் பதவியில் (Entry Level Post) படிப்படியாக ஐந்தாண்டு காலத்திறகுள் நியமனம் செய்யலாம்; எங்கெல்லாம் இட ஒதுக்கீட்டு முறை வகை செய்யப் பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் இனச்சுழற்சி முறையைச் சரியாகக் கடைப்பிடிக்காத நியமன அதிகாரிகள் மீது தமிழ்நாடு குடிமைப் பணி விதி 17(பி)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து கடும் தண்டனை வழங்கலாம்" என்றும் முடிவு செய்யப்பட்டது.

#### சட்டமன்றத்தில் வெள்ளை அறிக்கை

2000-2001ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 24.3.2000 அன்று சட்டமன்றப் பேரவையில் வைத்து ஆற்றிய உரையில் கலைஞர் அரசு அறிவித்தவாறு வெள்ளை அறிக்கை 11.5.2000ல் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டது. இந்த அறிக்கையில் ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடி இன மக்களுக்கும் பின்னடைவுப் பணியிடங்களாக கண்டறியப்பட்ட 6001 பணியிடங்களும் படிப்படியாக நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டதோடு அதற்கான நடவடிக்கைகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

#### கல்வி வளர்ச்சிக்கு அரசின் உதவிகள்

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும் 100 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 26 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 23 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளி களாகவும் நிலை உயர்த்தப்பட்டன.

#### கணினிக் கல்வி

1996-97 கல்வியாண்டு முதலே ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் செயல்படும் உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் அறிமுகப் படுத்தப்பட்டு மொத்தம் 85 பள்ளிகளில் தற்போது கணினிக் கல்வி கற்பிக்கப்படுகின்றது. இத்துறையின் கீழ் இயங்கும் 55 உயர்நிலைப் பள்ளிகளிலும், 63 மேல்நிலைப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர் களுக்கும் கணினிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிட நலத் துறையின் கீழ் செயல்படும் 15 மேல்நிலைப் பள்ளிகளுக்கு 78 லட்ச ரூபாய் செலவில் ஆய்வுக் கூடங்கள் கட்டப் பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கூடங்களுக்கு 26 லட்ச ரூபாய் செலவில் ஆய்வகக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. 49 உயர்நிலைப் பள்ளிகளுக்கு 2 கோடியே 6 லட்ச ரூபாய் செலவில் ஆய்வுக் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, அவற்றிற்கு 21 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஆய்வகக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

#### மாணவர் விடுதி கட்டடங்கள்

53 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் 166 விடுதிகளுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு இதுவரை 40 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் 126 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய விடுதிகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

#### மாணவியர் விடுதிகள் அனைத்திற்கும் கட்டடம்:

1996ஆம் ஆண்டு, மூன்றாண்டுத் திட்டம் எனும் பெயரில் திட்டமிடப்பட்டு, சொந்தக் கட்டடம் இல்லாத 82 ஆதிதிராவிடர் மாணவியர் விடுதிகளுக்கு 30 கோடியே 45 இலட்ச ரூபாய் செலவில் மூன்றாண்டுகளில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

#### மாணவ, மாணவிகளுக்கு புதிய விடுதிகள்

1996க்குப் பின் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக் கென முதன் முதலாக 5 விடுதிகள் தொடங்கப் பட்டுள்ளன. இது தவிர பட்டப்படிப்பு வரை உள்ள மாணவர்களுக்கு 126 புதிய விடுதிகள் தொடங்கப் பட்டன.

#### விடுதிகளில் சேர குடும்ப வருமான வரம்பு உயர்வு

1997ஆம் ஆண்டில் ஆதி திராவிட மாணவர்கள் விடுதிகளில் சேர்ந்து படிக்க குடும்ப வருமான உச்ச வரம்பு 14,000 ரூபாய் என்பது 50,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

#### விடுதிகளில் உணவுக் கட்டணச் சலுகை

ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறைப் பள்ளி விடுதிகளில் தங்கிப் படிக்க ஒரு மாணவருக்கு அரசு தரும் உதவித் தொகை 138.75 ரூபாய் என்பதை 180 ரூபாய் என 1996-97ஆம் ஆண்டில் உயர்த்தி வழங்கி அதனை 1998-99இல் 225 ரூபாயாக மேலும் உயர்த்தி வழங்கியது கலைஞர் அரசு. கல்லூரி மற்றும் தொழில் நுட்பப் பயிலகங்களில் பயிலும் மாணவர்களுக்கும் இந்தச் சலுகை 1.10.1997 முதல் 300 ரூபாய் எனவும், 1998இல் 400 ரூபாயாகவும் இந்த அரசினால் உயர்த்தப்பட்டுள்ளது.

#### இலவசச் சீருடைகள்:

1996 வரை - 8ஆம் வகுப்பு வரை படிக்கும் ஆதிதிராவிட மாணவர்களுக்கும், 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்கும் வழங்கப்பட்ட இரண்டு ஜோடி இலவசச் சீருடை 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் இருபால் மாணவ மாணவியருக்கும் விரிவுபடுத்தப்பட்டு வழங்கப்படுகிறது.



### பழங்குடி மாணவர்களுக்கு உண்டி – உறைவிடப் பள்ளிகள் (Residential Schools)

1996க்குப் பின் பழங்குடியின மாணவ மாணவியருக்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் 19 உண்டி–உறைவிடப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

### இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்கு சிறப்புத் திட்டம்

1997ஆம் ஆண்டு ஆதி திராவிடர்களுக்கென உரிய ஒதுக்கீடான 18 விழுக்காடு இடங்களில் நியமனம் செய்திட இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர் இல்லாமையால் ஆதிதிராவிடர்க்கு இடைநிலை ஆசிரியர் பயிற்சியளிக்க 5 கோடியே 8 இலட்ச ரூபாய் செலவில் சிறப்புத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது; 17 அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில், ஒவ்வொன்றிலும் 50 ஆதி திராவிடர்களைக் கொண்ட தனிப்பிரிவு தொடங்கப்பட்டு – ஆண்டுதோறும் 850 ஆதி திராவிட இளைஞர்களுக்கு கூடுதலாக இடைநிலை ஆசிரியர் பயிற்சி வழங்கப்படுகிறது.

### சுயநிதிக் கல்லூரிகளில் கல்விக் கட்டணச் சலுகை

சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடாக இலவச இடங்களில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர் குடும்பங்களின் ஆண்டு வருமானம் 50,920 ரூபாய்க்குள் உள்ளவர்களுக்கு அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் அப்படிப்பிற்கு அனுமதிக்கப்படும் கல்விக் கட்டண அளவிற்கு கல்விக் கட்டணச் சலுகை (Tuition Fees) 1999–2000 ஆண்டு முதல் அளிக்கப்பட்டுள்ளது.

### கல்லூரிகளில் பதிவுக் கட்டணமும் சேர்க்கைக் கட்டணமும் ரத்து

அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழிற் கல்லூரிகளில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு பதிவுக் கட்டணமும் (Registration Fees) சேர்க்கைக் கட்டணமும் (Admission Fees) கட்டுவதிலிருந்து 1999–2000 ஆண்டு முதல் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. 1998ஆம் ஆண்டு முதல் தொழிற் கல்விக்கென நுழைவுத் தேர்வு எழுதும் ஆதிதிராவிட மாணவ மாணவியரின் விண்ணப்பக் கட்டணம், பதிவுக் கட்டணம் ஆகியவை ரத்து செய்யப்பட்டுள்ளன.

### கல்லூரி மாணவர்களுக்கு கல்விக் கடன் உயர்வு

கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்விக் கடன் 2000 ரூபாய் என்பது 7000 ரூபாய் வரை உயர்த்தி 19.2.1997 அன்று இந்த அரசு ஆணையிடப்பட்டது.

### ஆசிரியர்களாகத் தேர்வு பெற தனிச் சலுகை

1998இல் பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான தேர்வில் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த இளைஞர்கள் கூடுதலாகத் தேர்வு பெறத்தக்க வகையில் ஆசிரியர் தேர்வு வாரிய நேர்காணலில் அவர்கள் பெறவேண்டிய குறைந்தபட்ச மதிப்பெண் 15 என்பது 7 ஆகக் குறைக்கப்பட்டது.

### மேல்நிலைத் தேர்வில் முதல் இடம் பரிசுத் தொகை ரூ.25,000/-

மேல்நிலைப் பள்ளித் தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெறும் ஆதிதிராவிட மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் 5 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கும் திட்டம் 1989–90 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்பரிசுத் தொகை 25 ஆயிரம் ரூபாய் என 11.5.1998 அன்று உயர்த்தப்பட்டதுடன், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம்மாறிய கிறித்தவ ஆதிதிராவிடர் ஆகிய 3 பிரிவுகளில் 1 மாணவர், 1 மாணவி என மொத்தம் 6 பேருக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் பரிசு வழங்கி ஊக்கம் அளிக்கப்படுகிறது.

**10 ஆம் வகுப்பில் முதலிடம் ரூ.10,000/- பரிசுத் தொகை**

10 ஆம் வகுப்புத் தேர்வில் மாநில முதன்மை பெறும் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவர், ஒரு மாணவி என இருவர்க்கு மட்டும் 1989-90 ஆம் ஆண்டில் 3 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில், ஆதிதிராவிட, பழங்குடியின, மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட வகுப்புகள் ஒவ்வொன்றிலும் ஒரு மாணவ - மாணவியர் என மொத்தம் 6 பேருக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் பரிசுத் தொகை வழங்க 11.5.1998 அன்று ஆணையிடப்பட்டு வழங்கப்படுகிறது.

**மாநில முதன்மை பெறும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரிசுத் தொகை**

அத்துடன் 10, 12 ஆம் வகுப்புத் தேர்வுகளில் ஒவ்வொரு பாடத்திலும் மாநில அளவில் முதன்மை பெறும் ஆதிதிராவிட வகுப்பு மாணவ மாணவியர்க்கு ஊக்கம் அளித்திடக் கருதி, 10 ஆம் வகுப்பு மாணவ - மாணவியர்க்கு 1000 ரூபாய் வீதமும், 12 ஆம் வகுப்பு மாணவ - மாணவியர்க்கு 2000 ரூபாய் வீதமும் பரிசுகள் வழங்கிட 11.5.1998 அன்று ஆணையிட்டுச் செயல்படுத்துகிறது.

**பட்டப் படிப்புகளில் உயர்மதிப்பெண் பெறுவோருக்கு பரிசுத் தொகை உயர்வு**

இளங்கலை, முதுகலை, தொழிற்கல்வி பட்டப் படிப்புகளில் 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகை முறையே 1000 ரூபாய் என்பது 2000 ரூபாயாகவும், 1250 ரூபாய் என்பது 4000 ரூபாயாகவும், 1500 ரூபாய் என்பது 5000 ரூபாயாகவும், 1997-98ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

**சுவாமி சகஜானந்தா கலையரங்கம் சீரமைப்பு**

ஆதிதிராவிட மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக அரும்பாடுபட்ட சுவாமி சகஜானந்தாவின் நூற்றாண்டு விழா 1990ஆம் ஆண்டில் அரசு சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது மாத்திரமல்லாமல் அதையொட்டி சிதம்பரம் நந்தனார் பள்ளி விடுதி வளாகத்தில், 15 இலட்ச ரூபாய் செலவில் சுவாமி சகஜானந்தா பெயரில் சமூகக் கலையரங்கம் கட்டப்பட்டது. இக் கலையரங்கம் 1997-98 ஆம் ஆண்டில் 10 லட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டது. தற்போது மீண்டும் 1997-98ஆம் ஆண்டில் சிதம்பரத்திலுள்ள சுவாமி சகஜானந்தா அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 22லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டடம் கட்டப்பட்டது. 1998-99ஆம் ஆண்டில் இந்த தொழிற்பயிற்சி நிலையத்திற்கான புதிய விடுதி 37 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

**தியாகி கக்கன் சிலை - நினைவு மண்டபம்**

மதுரையில் தியாகி கக்கன் சிலையை இந்த அரசின் சார்பில் 31-8-1997 அன்று திறந்து வைத்ததோடு தும்பைப்பட்டியில் தியாகி கக்கன் அவர்களுக்கு 25 லட்ச ரூபாய் செலவில் நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம்**

ஆதிதிராவிடர்களில் தொழில் முனைவோரை உருவாக்கும் சிறப்புத் திட்டம் 1989ல் அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டம் ஆதிதிராவிடர்களிடையே தொழில் முனைவோரை உருவாக்குவதற்காக ஆதிதிராவிடர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் வரை கடன் வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர் ஒவ்வொருவருக்கும் உயரளவு மானியமாக 25,000 ரூபாயும், உயரளவு விளிம்புத் தொகையாக 1,25,000 ரூபாயும் எஞ்சிய தொகை வங்கிகளின் மூலமாகவும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 1996க்குப் பின் இதுவரையில் 9,412 பயனாளிகளுக்கு 33 கோடியே 75 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் நிதியுதவி செய்யப்பட்டுள்ளது. விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்ட ஆதிதிராவிடர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும் பல்வேறு உதவித் திட்டங்களில் ஒன்றாக இரண்டு காளை மாடுகளுடன் டயர் வண்டி வாங்கிட 1996க்குப் பின் இதுவரையில் 6912 விவசாயிகளுக்கு 6 கோடியே 74 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 50 விழுக்காடு மானியத்தில் ஆதி திராவிட விவசாயிகளுக்கு ஒரு இணை உழவு மாடுகள் வாங்கிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 1996க்குப் பின் இதுவரையில் 4771 பயனாளிகளுக்கு 3 கோடியே 12லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 50 விழுக்காடு மானியத்தில் ஆதி திராவிட விவசாயிகளுக்கு வடிமுனை ஊற்றுக் கிணறுகள் தோண்டுதல், பம்ப் செட்டுகளுக்கான டீசல் மோட்டார், மின்சார மோட்டார் ஆகியவைகளுக்கு உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 1996க்குப் பின் இதுவரையில் 1628 பயனாளிகளுக்கு 1 கோடியே 9 லட்சத்து 99 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

#### ஆதிதிராவிடர்களுக்கு சுயதொழில் பயிற்சித் திட்டம்

சிறுதொழில்களுக்கான பயிற்சிகளை வழங்கி ஆதிதிராவிடர்கள் சுயதொழில் தொடங்குவதற்கு ஊக்கம் அளிக்கும் திட்டத்தின் கீழ் 1996க்குப் பின் இதுவரையில் 9223 ஆதி திராவிட இளைஞர்களுக்கு 95 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் சிறுதொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

#### திருக்கோவில்களில் இலவசத் திருமணம்

1997ஆம் ஆண்டில் வசதியற்ற ஆதி திராவிடக் குடும்பத்தைச் சார்ந்தவர்களின் திருமணத்திற்காக திருக்கோவில்களின் நிதியிலிருந்து 3000 ரூபாய் வரை செலவு செய்யும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் இதுவரை 2075 ஆதிதிராவிடர்களுக்கு திருமணங்கள் நடத்தப் பட்டுள்ளன.

#### தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகள்

1997ஆம் ஆண்டு மதுரையில் தீண்டாமை ஒழிப்பு மாநாடும் தமிழகமெங்கும் மனிதச் சங்கிலி, சமபந்தி விருந்து போன்றவை நடத்தப்பட்டு, தீண்டாமைக்கு எதிரான விழிப்புணர்வு வளர்க்கப்பட்டது.

1999ஆம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமை ஆண்டாகக் கடைப் பிடிக்கப்பட்டது. மக்கள் அனைவரும் மனிதாபிமான உணர்வோடு வாழ்வதற்கு தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் பிரச்சார இயக்கங்களும், விளம்பரப் பணிகளும் ஒரு கோடி ரூபாய் செலவில் மேற் கொள்ளப்பட்டன. "சாதிகள் இல்லையடி பாப்பா" என்ற கருத்து விளக்கப்படம் தயாரித்து வெளியிடப்பட்டது. சமூக வேற்றுமைகளைக் களைந்திடும் நோக்குடன், கல்லூரி, பள்ளிகளில் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டன. வாரந் தோறும், திங்கட்கிழமையன்று பள்ளிகளில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப் பட்டு வருகிறது.


#### இரட்டைக் குவளை முறை ஒழிப்பு

தேநீர் கடைகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யின மக்களுக்காக தேநீர் வழங்க தனிக் குவளைகள் பயன்படுத்தும் முறை பெரும்பாலும் மாற்றப் பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

#### வன்கொடுமைத் தடுப்பு நடவடிக்கைகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் வன்கொடுமைகளைத் தடுத்து, அவர்களைக் காப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள என்னுடைய தலைமையில் மக்களவை உறுப்பினர் ஒருவர், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் ஆகியவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு 9.10.1996 அன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருவதுடன் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை 4 கோடியே 98 லட்சத்து 17 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

தீண்டாமைக் கொடுமையை வேரறுக்கவும், ஆதி திராவிடர், பழங்குடியினர் மீது நடத்தப்படும் வன் கொடுமைகளைத் தடுக்கவும் 1989ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை செம்மையாக நடைமுறைப்படுத்திட உதவும் வகையில் நெல்லை, மதுரை, தஞ்சை, திருச்சிராப்பள்ளி ஆகிய 4 இடங்களில் கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் 12.11.1997 அன்று நிறுவப்பட்டன.



### துப்புரவுப் பணியாளர்களுக்கான மறுவாழ்வுத் திட்டம்

இந்த அரசு கடைப்பிடிக்கும் மனித நேயக் கொள்கையின் அடிப்படையில் மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றவும், சுமக்கவுமான இழிநிலை தனிச் சட்டத்தின் மூலம் அகற்றப்பட்டுள்ளது. இத் தொழிலில் ஈடுபட்டிருந்த ஆயிரக்கணக்கான துப்புரவுப் பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு, சுயதொழில் வசதி போன்ற மறுவாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் இதுவரை 19,505 துப்புரவுப் பணியாளர்கள் மறுவாழ்வு பெற்றுள்ளனர். இவர்களுக்கு 20 கோடியே 43 லட்ச ரூபாய் மானியமாகவும், விளிம்புத் தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது.

### கொத்தடிமைகள் ஒழிப்பு

கொத்தடிமை ஒழிப்பில் இந்நாட்டிற்கே தமிழகம் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது. இம்மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் உச்சநீதிமன்றத்தால் பாராட்டப்பட்டு பிற மாநிலங்களுக்கு முன் மாதிரியாகக் காட்டப்பட்டுள்ளன. தொண்டு நிறுவனங்கள் கண்டறிந்துள்ள 25,008 கொத்தடிமைகளை விடுவித்து அவர்களுக்கு மறுவாழ்வு வழங்கத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முந்தைய ஆட்சிக் காலத்தில் 1340 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். 1996க்குப் பின் 2000 மார்ச் வரை 8120 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

### வீரன் சுந்தரலிங்கம் நகர்

1998ஆம் ஆண்டு கட்டபொம்மனின் தளபதிகளில் ஒருவராக விளங்கிய ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த வீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு பாஞ்சாலங் குறிச்சிக்கு அருகிலுள்ள கவர்னகிரியில் குடிநீர், சாலை வசதிகள், மின்விளக்கு, பள்ளிக்கூடம் முதலிய அனைத்து அடிப்படை வசதிகளுடன் ஒரு கோடியே ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் 200 வீடுகளைக் கட்டிக் கொடுத்து, ''வீரன் சுந்தரலிங்கம் நகர்'' என்ற பெயரில் அழகிய நகரை உருவாக்கி, 18.4.98 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

### அம்பேத்கரைப் போற்றும் அரசு

1972ஆம் ஆண்டில் வியாசர்பாடியில் அம்பேத்கர் பெயரில் புதிய கலைக்கல்லூரி; அதே ஆண்டில் மயிலாப்பூர் ஹாமில்டன் பாலத்திற்கு டாக்டர் அம்பேத்கர் பெயர்; 1989ஆம் ஆண்டில் டாக்டர் அம்பேத்கர் பிறந்த மராட்டிய மாநிலத்திலுள்ள மரத்துவாடா பல்கலைக் கழகத்திற்கு ''மரத்துவாடா அம்பேத்கர் பல்கலைக் கழகம்'' எனப் பெயரிட வேண்டும் என அங்கு ஆசிரியர்களும், மாணவர்களும் போராடியபொழுது எனது வேண்டுகோளின் பேரில் தமிழகத்திலிருந்து மராட்டிய மாநில ஆளுநருக்குத் தந்திகள் அனுப்பப்பட்டு, மரத்துவாடா பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயரைச் சூட்டிட வலியுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மராட்டிய மாநிலத்தில் மரத்துவாடா பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயர்; 1990ஆம் ஆண்டு கலைஞர் அரசின் ஆணையினால் அம்பேத்கர் நூற்றாண்டு விழா; அதனையொட்டி சென்னை சட்டக் கல்லூரிக்கு அம்பேத்கர் பெயர்; 20.9.1997 அன்று டாக்டர் அம்பேத்கர் பெயரில் சென்னையில் இந்தியாவிலேயே முதல் சட்டப் பல்கலைக் கழகம்; 1997ல் ஆங்கிலத்தில் எடுக்கப்படும் அண்ணல் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு திரைப்படத்தைத் தமிழாக்கம் செய்து வெளியிடுவோர்க்கு ரூபாய் 10 இலட்சம் பரிசு வழங்கப்படும் என அறிவிப்பு; (ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டு திரையிடப்படும் நிலையில் உள்ள அம்பேத்கர் படம், தற்போது தமிழில் மொழிமாற்றம் செய்யப்படுகிறது. மொழிமாற்றம் செய்யும் பணி முடிவடைந்ததும் இப்பரிசு வழங்கப்படும்.) 1997ஆம் ஆண்டில் அம்பேத்கர் பெயரில் சேலம் பெரியார் பல்கலைக் கழகத்தில் 25 இலட்ச ரூபாய் முதலீட்டில் கல்வி அறக்கட்டளை என்று அம்பேத்கர் பெயர் நிலைக்க இத்தனை சாதனைகளையுழ் குவித்த இந்த அரசு 4 கோடி ரூபாய் செலவில் 55 அடி விட்டத்துடன் கூடிய அரைக் கோள வடிவத்தில் அம்பேத்கர் மணிமண்டபத்தை சென்னையில் கட்டி முடித்து 10.6.2000 அன்று திறந்து வைத்துள்ளது.

இவை தவிர, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் ஒருவருக்கு ஆண்டுதோறும் அம்பேத்கர் பெயரில் விருது வழங்கி ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழி வழங்கும் திட்டம் 1998ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்திய மனித உரிமைக் கட்சியின் தலைவர் திரு எல்.இளையபெருமாள் அவர்களுக்கு 1998ஆம் ஆண்டிலும், திருமதி வண்ணை மு.தேவகி அவர்களுக்கு 1999ஆம் ஆண்டிலும், அம்பேத்கர் விருது வழங்கப்பட்டுள்ளது. 2000 ஆண்டிற்குரிய அம்பேத்கர் விருது முன்னாள் அமைச்சர் திரு.என். இராஜாங்கம் அவர்களுக்கு 24.12.2000 அன்று வழங்கப்பட்டது.

★ ★ ★

“உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்” என்றார் பாரதியார். கலைஞர் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பொழுதெல்லாம் தமிழகத்தின் வேளாண்மை வளர்ச்சியில் எந்த அளவுக்கு கண்ணுங்கருத்துமாக ஈடுபாடு காட்டப்படுகிறதோ, அதில் எள்முனை அளவுக்கும் குறைந்திடாமல் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியிலும் கருத்தொன்றி, பாடுபட்டு வருகிறார்.

**புதிய தொழில் கொள்கை**

**1996**, மே மாதம் கலைஞர் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், தொழில் முன்னேற்றத்திற்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் அளித்திட முடிவு செய்யப்பட்டது. இந்தியாவின் தொழில் மயமான



மாநிலம் என்ற பெருமையை மீண்டும் அடைதல்; இந்தியா மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விரும்பும் இடமாகத் தமிழ்நாட்டை உருவாக்குதல்; தொழில் முனைவோருக்கு உலகத் தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளைத் திட்டமிட்டு ஏற்படுத்துதல்; தொழில் முதலீடுகளை ஊக்குவிக்க விதிகள் மற்றும் நடைமுறைகளை எளிமையாக்குதல்; முதலீட்டாளர்கள் விரும்பும் ஒளிவு மறைவில்லாத நடைமுறையைப் பின்பற்றுதல்; மாநிலத்தில் உள்ள அளப்பரிய மனித சக்தியை உகந்தவாறு பயன்படுத்துதல் என்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய தொழில் கொள்கை ஒன்றை வகுத்து அமல்படுத்தப்பட்டதின் காரணமாக, இன்று முதலீடு செய்வதற்கு சிறந்த இடமாகத் தமிழ்நாடு கருதப்படுகிறது.

**முதலில் தொழில் வளாகங்கள் உருவானது கலைஞர் ஆட்சியிலேதான்**

தமிழகத்தின் தொழில் வரலாற்றில், ஒரே இடத்தில் பல தொழில்கள் உருவாவதற்கு வகை செய்யும் தொழில் வளாகங்களை முதன்முதல் அமைத்த பெருமை கலைஞர் அரசிற்குத்தான் உண்டு. இதற்காக **1971**ஆம் ஆண்டில் அரசு, தமிழகத்தில் “சிப்காட்” என்னும் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனத்தை (State Industrial Promotion Corporation of Tamil Nadu) உருவாக்கியது. அதன்மூலம், **1973**ஆம் ஆண்டில் இராணிப் பேட்டையில் **729.78** ஏக்கர் பரப்பில் ஒரு தொழில் வளாகம் உருவாக்கப்பட்டு அங்கே **168** கோடி ரூபாய் முதலீட்டில் **107** புதிய தொழில்கள் தொடங்கப் பட்டன.

**1974**ஆம் ஆண்டில் ஒசூரில் **1236** ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டாவது தொழில் வளாகம் அமைக்கப்பட்டு, அதில் **500** கோடி ரூபாய் முதலீட்டில் **186** தொழிற் சாலைகள் தொடங்கப் பட்டன. இந்த இரண்டு தொழில் வளாகங்களிலும் ஏறத்தாழ **20** ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டன.

**1989**ஆம் ஆண்டில் கலைஞர் ஆட்சியில் இராணிப்பேட்டையில் இரண்டாம் பிரிவு தொழில் வளாகம் **133** ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டு

## வளமார் எமது தமிழகம் வளரும் பல தொழிலகம்!

அங்கே 99 புதிய தொழில்கள் தொடங்கப்பட்டு 3400 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. ஓசூரிலும் இரண்டாம் பிரிவு தொழில் வளாகம் 457 ஏக்கர் நிலப்பரப்பில் 64 புதிய தொழில்களுடன் தொடங்கப்பட்டு, அங்கே ஏறத்தாழ 6 ஆயிரம் இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றனர்.


1996இல் நான்காவது முறையாக கலைஞர் அரசு அமைந்த பின், திருப்பெரும்புதூர், இருங்காட்டுக் கோட்டை, கும்மிடிப்பூண்டி ஏற்றுமதி வளாகம் ஆகிய இடங்களில் சிப்காட் நிறுவனத்தால் புதிய தொழில் வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. செய்யாறு, நெமிலி ஆகிய இடங்களில் புதிய தொழில் வளாகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொழில் வளாகங்களுக்காக இதுவரை 12,500 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. 2,800 ஏக்கர் பரப்பளவில் 110 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப் பட்டுள்ள பெருந்துறை வளர்ச்சி மையத்தின் மேம்பாட்டுப் பணி முடிவடைந்து, அந்த மையம் 1.7.2000 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

**1969 முதல் 1975 வரை கலைஞர் அரசு உருவாக்கிய புதிய தொழில்கள்**

1. தூத்துக்குடியிலே உரம் தயாரிக்கும் ஸ்பிக் தொழிற்சாலை; 2. "சோடா ஆஷ்" அமோனியம் குளோரைடு தயாரிக்கும் தூத்துக்குடி அல்கலி கெமிக்கல்ஸ் தொழிற்சாலை; 3. காரைக்குடியில் சோடியம் ஹைட்ரோசல்பேட் தயாரிக்கும் தமிழ்நாடு கெமிக்கல்ஸ் பிராசஸ் லிமிடெட் தொழிற்சாலை; 4. இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில் குரோமியம் சல்பேட், சோடியம் டெக்ரோமேட், சோடியம் சல்பேட் ஆகிய பொருட்களைத் தயாரிக்கும் தமிழ்நாடு குரோமேட் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை; 5. மதுரை மாவட்டம், நரசிங்கம் பட்டியில் பொட்டாசியம் குளோரைட் உற்பத்தி செய்யும் பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை; 6. இராமநாதபுரம் மாவட்டம், மணலூரில் அலுமினிய புளோரைடு தயாரிக்கும் தமிழ்நாடு புளோரின் அண்டு அலைட் கெமிக்கல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை; 7. பல்லாவரத்தில் மருந்துகள் தயாரிக்கும் தமிழ்நாடு தாதா பார்மசூடிக்கல்ஸ் தொழிற்சாலை; 8. அடையாறில் டெலிவிஷன் பெட்டிகள் தயாரிக்கும் டைனாவிஷன் லிமிடெட் தொழிற்சாலை; 9. கோவளம் பகுதியில் தொழில் உப்பு தயாரிக்கும் மார்த்திக் கிறிஸ்டல் சால்ட் தொழிற்சாலை; 10. ஒசூருக்கு அருகில் ஆசியா புகையிலை நிறுவனம்; 11. மண்டபம் பகுதியில் கடல் சார்ந்த பெரும் இழுபடகு கட்டும் தொழிற்சாலை; 12. அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தமிழ்நாடு ஆல்கலைன் பேட்டரீஸ் லிமிடெட் தொழிற்சாலை; 13. ஒசூருக்கு அருகில் ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட் தொழிற்சாலை; 14. அரக்கோணத்தில் வார்ப்படம் கொல்லுலை தொழிற்சாலை; 15. சென்னையில் இண்டர் காண்டினென்டல் லெதர் லிமிடெட் தொழிற்சாலை; 16. காரைக்குடியில் தமிழ்நாடு ஆல்கலைன் பேட்டரி தொழிற்சாலை; 17. அடையாறு இன்ஸ்ட்ரானிக்ஸ் கேம்பஸ் வளாகத்தில் தொழிற் சாலை; 18. அதே வளாகத்தில் படச்சுருள் தயாரிக்கும் ஸ்டீரோ பிலிம்ஸ் லிமிடெட்; 19. ஒசூருக்கு அருகில் தமிழ்நாடு இண்டர்நேஷனல் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட்; 20. சோழவரம் ஒன்றியம் தச்சூரில் சதர்ன் போராக்ஸ் லிமிடெட்; 21. சேலத்தில் இரும்பு ஆலை (16.9.1970); 22. ஆலங்குளத்தில் சிமெண்ட் ஆலை; 23. இராமநாதபுரத்தில் டயர் உற்பத்தி தொழிற்சாலை.

**1989 - 90இல் கலைஞர் அரசு காலத்தில் முக்கிய தொழில்கள்**

கலைஞர் அரசு பொறுப்பில் இருந்தபோது, 1989–90இல்தான் 22 கோடி ரூபாய் முதலீட்டில் "ஏஷியன் பெயிண்ட்ஸ்" என்ற தொழில் நிறுவனம்; 29 கோடி ரூபாய் முதலீட்டில் "டெலிகம்யூனிகேஷன்ஸ் கன்சல்டண்ட் இண்டியா லிமிடெட்" என்ற நிறுவனம்; 10 கோடி ரூபாய் முதலீட்டில் திருச்சி எஸ்.எஸ். சங்கர ரெட்டி அசோசியேட்ஸ் தொழிற்சாலை; ஓசூரில் 140 கோடி ரூபாயில் "டைட்டானியம் டை ஆக்ஸைடு" தயாரிக்கும் தொழிற்சாலை; கடலூரில் ரூ. 20 கோடி முதலீட்டில் மரவள்ளிக்கிழங்கில் இருந்து இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் உஸ்தா–தே–பயோடெக் தொழிற்சாலை; கடலூரிலேயே ரூபாய் 6 கோடி செலவில் டான்டெக் அக்ரோ தொழிற்சாலை மற்றும் ரூ.40 கோடி முதலீட்டில் கடலூரில் டங்ஸ்டன் மெட்டல் பவுடர் தொழிற்சாலை; மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் பியூட்டின் உற்பத்திப் பிரிவு; மணலியில் ரூ.81 கோடி மதிப்பீட்டில் யு.பி.பெட்ரோ புராடக்ட்ஸ் தொழிற்சாலை; மேலூருக்கு அருகில் நரசிங்கம் பட்டியில் ரூ.8.88 கோடி மதிப்பீட்டில் செயற்கை வைரம் தயாரிக்கும் தொழிற்சாலை; இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில் ரூ. 10.40 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மேக்னசைட் மற்றும் மெரைன் இரசாயனத் தொழிற்சாலை ; கடலூரில் ரூ. 29.50 கோடி முதலீட்டில் தமிழ்நாடு புளோரின் மற்றும் சல்பைடு கெமிக்கல் (TANFAC) தொழிற்சாலை; ஓசூரில் ரூ. 30.30 கோடி முதலீட்டில் டைட்டான் கைக்கடிகார உறுப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலை; சேத்தியாதோப்பில் ரூ. 28 கோடி மதிப்பீட்டில் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை ; பெரம்பலூரில் சர்க்கரை ஆலை விரிவாக்கம்; வேலூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ரூ. 10 கோடி செலவில் விரிவாக்கம்.



## 1996 முதல் இதுவரை தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள்

1996–க்குப் பின் இதுவரை தொடங்கப்பட்டுள்ள 118 தொழிற்சாலைகளின் மூலம் நேரடியாக 19 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். கடந்த கால ஆட்சியில், ஐந்து ஆண்டுகளில், 22 தொழிற்சாலைகள் மட்டுமே தொடங்கப்பட்டு அவற்றின் மூலம் 4,230 பேர் மட்டுமே வேலை வாய்ப்பைப் பெற்றனர்.

## கார் தொழிற்சாலைகளின் வளர்ச்சி

தமிழகம், குறிப்பாகச் சென்னை மாநகரம் "இந்தியாவின் டெட்ராய்டு" என்று சொல்லக்கூடிய அளவிற்கு சென்னையிலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் பிரம்மாண்டமான கார்த் தொழிற்சாலைகளும், வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் இருங்காட்டுக் கோட்டையில் புதிய கார் தொழிற்சாலை ஒன்றை 2,450 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டுக்கு 1 இலட்சத்து 20,000 கார்களை உற்பத்தி செய்யும் திறனுடன் தொடங்கியுள்ளது. வெளிநாடுகளுக்கு இக்கார்களை ஏற்றுமதி செய்வதின் மூலம் அன்னியச் செலாவணியும் கணிசமான அளவில் கிடைக்கிறது. ஏறத்தாழ 2,500 தொழிலாளர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும், 25,000 தொழிலாளர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பினையும் இத்தொழிற்சாலை வழங்கியுள்ளது.

திருவள்ளூரில் மிட்சுபிசி லேன்சர் கார் தொழிற்சாலை ஆண்டுக்கு ஒரு இலட்சம் கார் தயாரித்திடும் ஆற்றலுடன், ஏறத்தாழ 320 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. 14.4.1998 அன்று உற்பத்தியைத் தொடங்கியது. 800 பேருக்கு மேல் நேரடி வேலை வாய்ப்பையும், 6,400 பேருக்கு மேல் மறைமுக வேலை வாய்ப்பையும் அளித்துள்ளது.

ஃபோர்டு மோட்டார் தொழிற்சாலை மறைமலைநகரில் 1700 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஆண்டுக்கு 1 இலட்சம் கார்களைத் தயாரித்திடும் திறனுடன் 19.3.1999 அன்று தொடங்கிவைக்கப்பட்டது. இதன் மூலம் 2000 பேருக்கு மேல் நேரடி வேலை வாய்ப்பும் 10,000 பேருக்கு மேல் மறைமுக வேலை வாய்ப்பும் கிடைத்துள்ளது.

## 1996ஆம் ஆண்டிற்குப் பின் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள்

டான்டெக் அக்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட் 12.16 கோடி ரூபாய் முதலீட்டில் கடலூரில் தொடங்கப்பட்டுள்ளது. ப்ளூமிங் மெடோஸ் லிமிடெட் – மலர் பதப்படுத்தும் தொழிற்சாலை, இது 100 விழுக்காடு ஏற்றுமதி அடிப்படையில் ஆனது. ஒசூருக்கு அருகே 5.42 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டு, 1997 ஜனவரியில் உற்பத்தியைத் தொடங்கியது. எஸ்.கே.எம். எக் புராடக்ட்ஸ் தொழிற்சாலை – 100 விழுக்காடு ஏற்றுமதி பொருள்களைத் தயாரித்திடும் இத்தொழிற்சாலை, 35 கோடி ரூபாய் முதலீட்டில் ஈ.ரோடு மாவட்டம், சோளங்கபாளையத்தில் 12.7.1997 அன்று தொடங்கப்பட்டது. பாரத் டெக்ஸ் ஃபேஷன்ஸ் லிமிடெட் தொழிற்சாலை 5.10 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் செட்டிபுண்ணியம் கிராமத்தில் 1997 அக்டோபரில் தொடங்கியுள்ளது. தாப்பர் டூபான்ட் லிமிடெட் தொழிற்சாலை கும்மிடிப்பூண்டியில் 300 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

ஏசியன் லைட்டிங் ரிசோர்சஸ் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை 27 கோடி ரூபாய் முதலீட்டில் தாம்பரம் ஏற்றுமதி வளாகத்தில் 26.3.98 அன்று உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. கரூர் யார்ன் லிங்க்ஸ் லிமிடெட் தொழிற்சாலை ஏற்றுமதி அடிப்படையிலானது. கரூர் மாவட்டம் அப்பர்பாளையத்தில் 4.5 கோடி ரூபாய்


முதலீட்டில் 1998 மார்ச் மாதத்தில் உற்பத்தியைத் தொடங்கியது. டவுரஸ் நவல்டீஸ் லிமிடெட் தொழிற்சாலை ஒசூருக்கருகில் சொக்கராசன்பள்ளி கிராமத்தில் 10.20 கோடி ரூபாய் முதலீட்டில் உற்பத்தியைத் தொடங்கியது. ஸ்ரீராம் ஆட்டோ உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை திருப்போரூர் அருகில் இடையன்குப்பம் கிராமத்தில் 21 கோடி ரூபாய் முதலீட்டில் 25.6.1998 அன்று உற்பத்தியைத் தொடங்கியது.

வி.எஸ்.என்.எல். எர்த் ஸ்டேஷன் 110 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டு, பி–டிஷ் பிரிவு 1998 ஜூன் மாதத்திலும், ஏ–டிஷ் பிரிவு 1999 ஜூன் மாதத்திலும் செயல்படத் தொடங்கியுள்ளன. லுமெக்ஸ் சாப்ளிப் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை 8.6 கோடி ரூபாய் செலவில், இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ளது. ரமணசேகர் ஸ்டீல்ஸ் லிமிடெட் தொழிற்சாலை சென்னை மணலியில் 10.18 கோடி ரூபாய் முதலீட்டில் 1998 அக்டோபரில் உற்பத்தியைத் தொடங்கியது. ஜே.பி.எம். சங்வூ லிமிடெட் தொழிற்சாலை தகடு உலோகப் பாகங்கள் தயாரிக்கும் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்சாலை இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்டு உள்ளது. ஜே.கே.எம். டெரிம் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை இருங்காட்டுக்கோட்டையில் 17 கோடி ரூபாய் முதலீட்டில் அமைந்துள்ளது. மெட்–டெக் புராடக்ட்ஸ் லிமிடெட் தொழிற்சாலை திருப்பெரும்புதூர் அருகில் மானூர் கிராமத்தில் 27.70 கோடி ரூபாய் முதலீட்டில் 20.8.98 அன்று உற்பத்தியைத் தொடங்கியது. இல்ஜின் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை 40 கோடி ரூபாய் முதலீட்டில் இருங்காட்டுக்கோட்டையில் 1998ல் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. டைனமேட்டிக் குரூப் கம்பெனி வாகன உதிரிபாகங்கள் தயாரித்திட 23 கோடி ரூபாய் முதலீட்டில், இருங்காட்டுக் கோட்டையில் அமைக்கப்பட்டுள்ளது. கார் கதவுகள் தயாரிக்கும் எச்.சி. மேனுபேக்சரிங் லிமிடெட் தொழிற்சாலை 9 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்டு உள்ளது. உலோகத் தகடு பாகங்கள் தயாரிக்கும் டோங்கி விஷன் இண்டஸ்ட்ரீஸ் தொழிற்சாலை 43 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கப் பட்டுள்ளது. கார் எக்சாஸ்ட் (Car Exhaust) தயாரிக்கும் ஷார்தா மோட்டார் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் தொழிற்சாலை 9 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ளது. ஆர்க்கிட் கெமிக்கல்ஸ் மற்றும் பார்மசூடிகல்ஸ் தொழிற்சாலை சென்னைக்கருகில் ஆலந்தூரில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டு, 1998 நவம்பரில் செயல்படத் தொடங்கியது. சிட்டிசன் வாட்சஸ் – வாட்ச் அசெம்ப்ளிங் புராஜக்ட் தொழிற்சாலை சென்னையில் 8 கோடி ரூபாய் முதலீட்டில் 1998 டிசம்பரில் செயல்படத் தொடங்கியது. சுந்தரம் கிளேட்டன் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோமொபைல் பவுண்ட்ரி தொழிற்சாலை ஒசூரில் 1998 டிசம்பரில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

சாம் க்ரீவ்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ட்ராக்டர் மற்றும் அசெம்ப்ளிங் பிரிவு ராணிப்பேட்டையில் 44 கோடி ரூபாய் முதலீட்டில் 1998 டிசம்பரில் திறக்கப்பட்டது. அம்பிகா சர்க்கரை ஆலை 40 கோடி ரூபாய் முதலீட்டில் கோவையில் 1999 மார்ச்சில் தொடங்கி வைக்கப்பட்டது. டேன்பேக் இண்டஸ்ட்ரீஸ் (ப்ளோரோ பென்சீன் புராஜக்ட்) தொழிற்சாலை 11.60 கோடி ரூபாய் முதலீட்டில் கடலூரில் 1999 பிப்ரவரியில் உற்பத்தியைத் தொடங்கியது. டேன்பேக் இண்டஸ்ட்ரீஸ் (ஹைட்ரோ ப்ளோரிக் ப்ராஜக்ட்) தொழிற்சாலை கடலூரில் 1999 மார்ச்சில் தனது உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. சேலம் அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட் தொழிற்சாலை 500 கோடி ரூபாய் முதலீட்டில் 31.3.99 அன்று தொடங்கப்பட்டுள்ளது. எபாக்சி ரெசின் புராஜக்ட்–பெட்ரோ அரால்டைட் கம்பெனி மணலியில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் 1999 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கியது. அசோசியேட்டட் சிமெண்ட் கம்பெனியின் மதுக்கரை சிமெண்ட் புராஜக்ட் தொழிற் சாலை 33 கோடி ரூபாய் செலவில் 1999 மார்ச் மாதத்தில் உற்பத்தியைத் தொடங்கியது. ஹைதராபாத் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் Autoclayed Aerated Concrete Block Project தொழிற்சாலை ஏறத்தாழ 25 கோடி ரூபாய் முதலீட்டில் 1999 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கியது. லட்சுமி ஆட்டோ காம்பொனன்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோ உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை 43 கோடி ரூபாய் முதலீட்டில் ஒசூரில் 1999 மார்ச்சில் செயல்படத் தொடங்கியது. ஜி.எம்.ஆர்.வாசவி தனியார் மின் உற்பத்தித் திட்டம் 825 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை பேசின் பிரிட்ஜில் 1999 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கியது. திரு.ஆரூரான் சுகர்ஸ் சர்க்கரை ஆலை 22.90 கோடி ரூபாய் முதலீட்டில் தஞ்சை மாவட்டம் திருமண்டங்குடியில் 1999 ஜூன் திங்களில் செயல்படத் தொடங்கியது. விஸ்டன் பவர்ட்ரைன் சிஸ்டம் இந்தியா லிமிடெட் கம்பெனி 275 கோடி ரூபாய் முதலீட்டில் 1999ல் இயங்கத் தொடங்கியது. விஸ்டன் ஆட்டோமோடிவ் சிஸ்டம் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை 325 கோடி ரூபாய் முதலீட்டில் 1999ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மஹிந்த்ரா இண்டஸ்ட்ரியல் பார்க் லிமிடெட்

தொழிற்சாலை சென்னைக்கு அருகில் சிங்கப் பெருமாள் கோவிலில் 210 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டு 1999 செப்டம்பரில் செயல்படத் தொடங்கியுள்ளது. மட்சுசிட்டா ஏர் கண்டிஷனர் ப்ராஜக்ட் தொழிற்சாலை அறைகளுக்கு வைக்கக் கூடிய ஏர்கண்டிஷன் இயந்திரங்களைத் தயாரிக்கும் இத்தொழிற்சாலை இருங்காட்டுக் கோட்டையில் 59.54 கோடி ரூபாய் முதலீட்டில் 1999ல் செயல்படத் தொடங்கியது. மேண்டோ ப்ரேக் சிஸ்டம் இந்தியா நிறுவனத்தின் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை 30 கோடி ரூபாய் முதலீட்டில் இருங்காட்டுக் கோட்டையில் 1999ல் செயல்படத் தொடங்கியது. வேலியோ இந்தியா ப்ரிக்சன் மெட்டீரியல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் கார் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை மறைமலை நகரில் 27 கோடி ரூபாய் முதலீட்டில் 1999ல் உற்பத்தியைத் தொடங்கியது. Schwing Stetter GmbH எனும் ஜெர்மனி நாட்டு கட்டுமான கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை 18 கோடி ரூபாய் முதலீட்டில் 1999ல் ஒரு பகுதி செயல்படத் தொடங்கி யுள்ளது. ஆட்டோலெக் இண்டஸ்ட்ரீஸ் எண்ணெய் மற்றும் தண்ணீர் பம்புகள் தயாரிக்கும் தொழிற்சாலை 5 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் 1999 அக்டோபரில் தனது உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் சார்பில் துறைமுகத்தை ஆழப்படுத்தும் திட்டம் 202 கோடி ரூபாய் முதலீட்டில் 1999 நவம்பரில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தியன் அண்டு நேச்சுரல் மெடிகல் புரொடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலை சென்னைக்கருகில் 5.60 கோடி ரூபாய் முதலீட்டில் 1999 டிசம்பர் முதல் செயல்பட்டு வருகிறது.

இன்வோல் மெடிக்கல் (இந்தியா) லிமிடெட் தொழிற்சாலை: திருப்பெரும்புதூரில் 15 கோடி ரூபாய் முதலீட்டில் 2000 ஆண்டு மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. ரினால்ட்ஸ் பால் பென் காம் பொனன்ட்ஸ் தொழிற்சாலை இருங்காட்டுக் கோட்டையில் 30 கோடி ரூபாய் முதலீட்டில் 2000 ஆண்டு மார்ச் மாதம் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. சிங்கப்பூரைச் சேர்ந்த செம்பவாங் ஸ்ரீராம் பொருள் விநியோகத் தொழிற்சாலை 33 கோடி ரூபாய் செலவில் புழல் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ளது. மார்க்யூப் இந்தியா காகித அட்டை தயாரிக்க உதவும் எந்திர உற்பத்தித் தொழிற்சாலை 50 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் 2000–மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. கோவேமா வுட் பிளாஸ்ட் பி.வி.சி. தகடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை 44 கோடி ரூபாய் செலவில் இருங்காட்டுக்கோட்டையில் 2000 மார்ச்சில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. இன்ட்ஸில் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் வாகன உதிரிபாகங்களைத் தயாரிக்கக்கூடிய இத்தொழிற்சாலை 12.5கோடி ரூபாய் முதலீட்டில் மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. ஆப்டிக் பைபர் கேபிள் தொழிற்சாலை தமிழ்நாடு அரசு நிறுவனமான டிட்கோ, மத்திய அரசு நிறுவனமான டி.சி.ஐ.எல். (Telecommunications Consultants India Limited) மற்றும் ஜப்பான் நாட்டின் ஃப்யூஜிகூரா நிறுவனம் ஆகியவை இணைந்து மிக நவீனமான ஆப்டிக் பைபர் டெலிகாம் கேபிள்ஸ் (Optic Fibre Telecom Cables) உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை 28.50 கோடி ரூபாய் செலவில் 26.5.2000 அன்று நிறுவியுள்ளது. ப்ராக்ஸ் ஏர் இந்தியா பிரைவேட் லிமிடெட் (PRAX AIR INDIA PRIVATE LIMITED) தொழிற்சாலை 60 கோடி ரூபாய் முதலீட்டில் திருப்பெரும்புதூர் தொழில் வளாகத்தில் அமைக்கப்பட்டு, அதனை நான் 21.8.2000 அன்று திறந்து வைத்துள்ளேன். இது தொழிற்சாலைகளுக்கான வாயுக்களை (Industrial Gases) தயாரித்து வழங்குகிறது. ப்ராக்ஸ் ஏர் நிறுவனம் மொத்தம் 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு தொழில் பிரிவுகளை அமைத்துள்ளது. செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை இருங்காட்டுக்கோட்டை சிப்காட் வளாகத்தில் பிரெஞ்சு நாட்டுத் தொழில்நுட்பத்துடன் 525 கோடி



ரூபாய் செலவில் முதற்கட்டமாக அமைக்கப்பட்டு 27.9.2000 அன்று தொடங்கப்பட்டது. ஆண்டுக்கு நூறு கோடி ரூபாய் அளவுக்கு அன்னியச் செலாவணி கிடைக்கச் செய்யும்.

2–9–1989 நாளிட்ட கலைஞர் அரசின் தொழில் துறை ஆணைப்படி குவாரிகளுக்கு குத்தகைகள் ஒப்பந்தப்புள்ளி (Tender System) முறையில் மட்டுமே வழங்கப்பட்டன. ஆனால் முந்தைய அரசு 8–3–93 அன்று குவாரி குத்தகைகளை வேண்டியவர்களுக்கு வழங்குவதற்காக 39 என்ற புது விதியை தமிழ்நாடு சிறு கனிம விதிகளில் புகுத்தியது. 1996இல் இந்த அரசு ஏற்பட்டவுடன் வெளிப்படையான ஒப்பந்தப் புள்ளி மற்றும் ஏல முறையை (Tender-cum-Auction system) கொண்டு வர 27–6–1996 அன்று முடிவெடுத்து, கடந்த ஆட்சியில் அறிமுகப்படுத்தப் பட்ட விதிமுறை 39 நீக்கப்பட்டது. கடந்த ஆட்சியில் 1991 முதல் 1996 வரை மணல் குவாரிகள் மூலம் 4.43 கோடி ரூபாயும், கருங்கல் குவாரிகள் மூலம் 9.18 கோடி ரூபாயும், கிரானைட் குவாரிகள் மூலம் 32.22 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 45.83 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் வந்ததற்கு மாறாக, விதி 39ஐ நீக்கி ஒப்பந்தப்புள்ளி மற்றும் பகிரங்க ஏலமுறை இந்த ஆட்சியிலே அறிமுகப்படுத்தப்பட்டதால் 1996 முதல் 2000 நவம்பர் வரை மணல் குவாரிகள் மூலம் 59.95 கோடி ரூபாயும், கருங்கல் குவாரிகள் மூலம் 40.12 கோடி ரூபாயும், கிரானைட் குவாரிகள் மூலம் 85.74 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 185.81 கோடி ரூபாய்; அதாவது நான்கு மடங்கு கடந்த ஆட்சியை விட அதிகமாக வருவாய் அரசுக்கு வந்து சேர்ந்துள்ளது.

### சிறப்பான அடிப்படை கட்டமைப்பு வசதிகள்

ஏராளமான தொழில்முனைவோர் தொடர்ச்சியாக 1996க்குப் பின்னர் தமிழகத்திற்கு வந்து, தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு தலையாய காரணமாக இருப்பது இங்கே அமைக்கப்பட்டு வரும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்தாம். தேவையான அளவுக்கு தரமானக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் இந்த அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

2000 அக்டோபர் மாதத்தில், C.M.I.E. "இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம்" அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைப் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு 145.62 குறியீட்டு எண்களையும், கர்நாடகம் 106.12 குறியீட்டு எண்களையும், ஆந்திரப்பிரதேசம் 104.01 குறியீட்டு எண்களையும் பெற்றுள்ளன. அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் மாநகரங்களுக்கு இடையேயான மதிப்பீட்டில், சென்னை மாநகரம் 472.48 குறியீட்டு எண்களையும், ஐதராபாத் 153.70 குறியீட்டு எண்களையும், பெங்களூர் 100.28 குறியீட்டு எண்களையும் பெற்றுள்ளன.

### தொடங்கப்படவுள்ள தொழிற் திட்டங்கள்

24.85 கோடி ரூபாய் முதலீட்டில் மலர் பதப்படுத்தும் டான்ப்ளோரா இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பார்க் – மலர்த் தொழில் பூங்கா ஒசூரில் 220 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு வருகிறது. 2001 மார்ச்சில் ஏற்றுமதியைத் தொடங்கும். இத்திட்டத்தின் மூலம் 500 பேருக்கு நேரடியாகவும், 1000 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

தமிழ்நாடு அரசு, டிட்கோ ஆகியவை இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்துடன் (ITPO) இணைந்து கண்காட்சி மற்றும் மாநாட்டுக் கூடத்துடன் கூடிய இந்திய வர்த்தக மையம் ஒன்றினை சென்னைக்கருகே நந்தம்பாக்கத்தில் அமைக்கிறது. இவ்வளாகம் 2 இலட்சம் சதுர அடி பரப்பளவில் அனைத்துக் கட்டமைப்பு வசதிகளுடனும், சாதனங்களுடனும் அமையும். முதல் கட்டத்தில் 50000 சதுர அடி பரப்புடைய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.


மெட்ராஸ் ரீபைனரீஸ் லிமிடெட் – இருங்காட்டுக் கோட்டையில் செயின்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலைக்கு அருகில் சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவனம் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர்தர மோட்டார் ஸ்பிரிட், அதிவேகப் பயணத்திற்கு உகந்த டீசல் ஆகியவற்றின் விற்பனை மையத்தினை அமைத்து வருகிறது.

சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள மெட்ராஸ் ரீபைனரீஸ் நிறுவனத்தின் மணலி தொழிற்சாலை பிரிவு 2360 கோடி ரூபாய் செலவில் 30 லட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணையை சுத்திகரிப்பு செய்யும் திறனுடையதாக விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

எபோமின் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் தொழிற் சாலை திருப்பெரும்புதூர் தொழில் வளாகத்தில் 2 கோடியே 88 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

முக்குட்ஸ் பேக்கேஜிங் லிமிடெட் தொழிற்சாலை திருப்பெரும்புதூர் தொழில் வளாகத்தில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

கடலூர் மாவட்டம் திருச்சோபுரம் கிராமத்தில்



ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பென்னார் ரிபைனரீஸ் லிமிடெட் கம்பெனியின் பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலை 3480 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆண்டுக்கு 6.5 மில்லியன் கச்சா எண்ணெயைச் சுத்திகரிப்பு செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவி வருகிறது.

கும்மிடிப்பூண்டியில் 224 ஏக்கர் பரப்பில் 19 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்றுமதி தொழில் மேம்பாட்டுப் பூங்கா (Export Promotion Industrial Park) அமைப்பதில் மத்திய அரசின் வர்த்தக அமைச்சகமும் சிப்காட்டுடன் பங்கெடுத்து வருகிறது.

நர்மதா டெக்ஸ்டைல்ஸ் கம்பெனி ஆடைகள் ஏற்றுமதியில் ஒரு முன்னணி நிறுவனம். 80 கோடி ரூபாய் முதலீட்டில் நர்மதா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ஒரு நவீன ஆடை தயாரிப்புப் பிரிவினை அமைத்திட "டிட்கோ" திட்டமிட்டுள்ளது. 33.64 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள முதல்கட்ட திட்டப் பணிகள் 2001 மார்ச் மாதத்தில் முடிவடையும்.

தருமபுரி மாவட்டத்தில் 377 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முற்றிலும் நூறு சதவீதம் ஏற்றுமதி செய்யக்கூடிய ஒருங்கிணைந்த ஜவுளி ஆலை (Composite Textile Mills) ஒன்றினை அமைத்திட, "டிட்கோ" நிறுவனம், திருவாளர்கள் வாசவி தொழில் குழுமத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. வர்த்தக ரீதியிலான உற்பத்தியினை இந்நிறுவனம், அடுத்த ஆண்டில் (2001-2002) தொடங்கும்.

உலகச் சந்தையில் போட்டியிடும் நோக்கில், ஆடைகள் தயாரிக்கும் பூங்கா ஒன்றை 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டிட்கோ கூட்டுத் துறையில் சென்னைக்கருகே அமைக்கவுள்ளது. அடுத்த ஆண்டில் இந்த ஆடைகள் பூங்கா வர்த்தக ரீதியில் செயல்படத் துவங்கும்.

**நாங்குனேரியில் உயர் தொழில்நுட்பத் தொழிற்பூங்கா**

அமெரிக்காவைச் சேர்ந்த இன்ஃபேக் இந்தியா குரூப் மற்றும் ஆக்ஸஸ் டெக்னாலஜிஸ் என்ற நிறுவனங்களுடன் சேர்ந்து இணைத்துறையில் டிட்கோ இப்பூங்காவை அமைத்து வருகிறது. இந்தத் தொழிற்பூங்காவில் அமெரிக்கா, ஜப்பான், கொரியா போன்ற நாடுகள் தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும். இங்கு அமையவுள்ள தொழிற்சாலைகளில் 8000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யப்படும்.

மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு.முரசொலி மாறன் 31.3.2000 அன்று அறிவித்த ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கொள்கையில் (EXIM POLICY) நாங்குனேரி உயர்தொழில் நுட்பத் தொழிற்பூங்காவைச் சிறப்புப் பொருளாதார மண்டலமாக (SPECIAL ECONOMIC ZONE) அறிவித்துள்ளார். இதனால், இந்தத் தொழிற் பூங்காவில் உருவாகும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் தேவையான சாதனங்கள் இறக்குமதி எளிதாக அமையும்.

**ஏற்றுமதிச் சாதனையில் ஒப்பீடு :**

கடந்த ஆட்சிக் காலத்தில் 1992-93-ஆம் ஆண்டில் 6 ஆயிரத்து 808 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் மட்டுமே தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி ஆயின. ஆனால், 1996-97-ஆம் ஆண்டில் 17 ஆயிரத்து 802 கோடி ரூபாய் அளவிற்கும், 1997-98-ஆம் ஆண்டில் 18 ஆயிரத்து 982 கோடி ரூபாய் அளவிற்கும் உயர்ந்துள்ளது. 1999-2000 ஆண்டில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி மதிப்பு 21 ஆயிரத்து 387 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது.

**தொழில் முதலீடுகளில் தமிழ்நாடு முதலிடம்:**

1989-91 கால கட்டத்தில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு, கலைஞர் அரசு அளித்த ஊக்கத்தின் காரணமாக தமிழகம் இந்தியாவில் மூன்றாம் இடத்தை அடைந்திருந்தது. 1991-96 கால கட்டத்தில் கடந்த ஆட்சியின்போது, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில்

பின்தங்கி, ஐந்தாம் இடத்திற்கு இறங்கிவிட்டது. 1996-ல் இந்த அரசு மீண்டும் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னர், தமிழகம் தொழில் வளர்ச்சியில் மீண்டும் முன்னணியில் இருந்து வருகிறது. 22.5.2000 அன்றைய நிலையில் "இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம்" (C.M.I.E. - Centre for Monitering Indian Economy) வெளியிட்ட அறிக்கையின்படி 1 இலட்சத்து 56 ஆயிரத்து 893 கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்று தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தியாவிலேயே முதலாவது மாநிலமாக முன்னேற்றம் கண்டது. அண்மையில் 21.7.2000 அன்று அதே மையம் இந்திய மாநிலங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகளை எல்லாம் தொகுத்து வெளியிட்டுள்ள அறிக்கையின்படி தமிழகம் தொழில் முதலீடுகளில் இந்தியாவில் முதலிடம் என்னும் நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**பத்திரிகைகள் பாராட்டு**

கடன் வைப்புத்தொகை விகிதாச்சாரத்தில் (Credit Deposit Ratio) அகில இந்திய அளவில் தமிழகம் முதலிடத்தை பெற்றிருக்கிறது என 6-7-1998 நாளிட்ட டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது. கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரம் அதிக அளவில் இருப்பது தொழில்வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும். அனைத்திந்திய சராசரி கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரம் 55.5 விழுக்காடாக இருக்க தமிழகத்தில் 92.3 விழுக்காடாகும்.

தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பின், முழுவதும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழில் நிறுவனங்களை (100% export-oriented units) நிறுவுவதில் தமிழகம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது என்று 28-4-1999 தேதியிட்ட எகானமிக் டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

லண்டனில் இருந்து வெளிவரும் "பைனான்சியல் டைம்ஸ்" என்ற பத்திரிகை 1997, ஏப்ரல் மாதத்தில் "சென்னை-இந்தியாவின் டெட்ராய்ட்" என்று வர்ணித்தது.

மார்க் நிக்கல்சன் என்கிற தலைசிறந்த பத்திரிகையாளர் லண்டனில் இருந்து வெளிவரும் "பைனான்சியல் டைம்ஸ்" என்கிற பத்திரிகையில் 10.4.1997 அன்று Tamil Nadu raise upto achieve car ambitions எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் அவர், Tamil Nadu's car industry is perhaps the most spectacular result of the race between States to attract foreign investment and develop new industries. அதாவது, "வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து புதிய தொழில்களை உருவாக்கி வளர்ப்பதில் மாநிலங்களுக்கு இடையேயான போட்டியில், தமிழ்நாட்டின் கார் தொழில் வியக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி 1994-95-ல் 8.7 சதவீத அளவிற்கு இருந்தது. கலைஞர் அரசு எடுத்து வரும் தொடர்ச்சியான தொழில் முனைவோர் நேயமிக்க நடவடிக்கைகளின் காரணமாக 1999-2000 ஆண்டில் தொழில் வளர்ச்சி 15.02 சதவீதம் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது.

"இன்டஸ்ட்ரியல் ஹெரால்ட்" (ஏப்ரல் 2000) என்ற ஆங்கில நாளிதழ்; வாகன உற்பத்தி, வாகன உதிரி பாகங்கள் உற்பத்திப் பிரிவுகள் அமைப்பதில் மிகுந்த கவனம் செலுத்திடும் சென்னை மாநகரம் இந்தியாவின் டெட்ராய்ட் எனக் குறிப்பிட்டு பாராட்டியுள்ளது.

7.2.2000 நாளிட்ட "எகனாமிக் டைம்ஸ்" நாளிதழில், "இந்தியாவில் பெரிதும் தொழில்மயப் படுத்தப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. நாட்டின் ஏற்றுமதிக்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு மிகப்பெரிதாகும்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு, நிகழ்காலத் தமிழ்ச் சந்ததியினரின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காகவும், வருங்காலச் சந்ததியினர் வளங்கொழித்திடும் வாய்ப்புக்களைப் பெற்று, வாழ்வில் ஏற்றம் பெற்று, இன்பம் துய்த்திட இப்போதிருந்தே வழிகோல வேண்டும் என்பதற்காகவுமே தொழில்மயமாக்குதலில் தொய்வில்லாத ஈடுபாடு காட்டி வருகிறோம்.

இந்நாட்டு நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் என நம்மூர் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக யார் வந்தாலும், ஆக்கமும், ஊக்கமும் அளித்து அளவிடற்கரிய வளர்ச்சிக்கு, கைமாறு கருதாத மாரி போல் கடும்பணி, அரும்பணி ஆற்றி வருகிறது இந்த அரசு. அதன் விளைவாக, ஆங்காங்கே, தொழில் கூடங்கள் காட்சிப் பொருள்களாக மட்டுமன்றி, கருத்துப் பெட்டகங்களாக, அரசு ஆற்றும் மக்கள் பணியின் சாட்சிப் பொருள்களாகவும் உருவாகி உயர்ந்தோங்கி நிற்கின்றன. ★

# தமிழ்த்துறை வளர்த்திடத் தனித்துறை

தமிழர்களின் நலன் காக்க நாளும் பாடுபடும் இந்த அரசு தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் பாடுபடுவதை எந்த நிலையிலும் நிறுத்தாது என்பதற்கு உதாரணம்தான் நான்காவது முறையாக இந்த அமைச்சரவை பதவியேற்ற போது த்மிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறைக்காக ஒரு தனி அமைச்சகத்தை உருவாக்கி அந்தத் துறை 13–5–1996 முதல் செயல்பட்டு வருகின்றது. அந்தத் துறையின் சார்பில் கடந்த நான்கரை ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டுள்ள சாதனைகளின் பட்டியல்தான் இங்கு தொகுக்கப்பட்டுள்ளது.

**அகரமுதலி**

1974 இல் கலைஞர் அரசால் "செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்" நிறுவப்பட்டு, மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்கள் அதன் முதல் இயக்குநராக நியமிக்கப் பட்டார். 1974 முதல் 1980 வரை முழுமையாக உழைத்தும் பாவாணர் அவர்களால் "ஆசைமொழி" வரைதான் எழுத முடிந்தது. 1981 இல் பாவாணர் மறைந்தார். அதன்பின் 1985 ஜனவரியில் அவர் உருவாக்கிய முதல் தொகுதி நூல் வெளியிடப்பட்டது. 1989இல் கலைஞர் அரசு அகரமுதலித் திட்டத்திற்கு அளித்த ஊக்கம் காரணமாக இரண்டாம் தொகுதி உருவாக்கப்பட்டது. 1991 ஜனவரியில் கலைஞர் அரசு கலைக்கப்பட்டதன் காரணமாக இப்பணியில் தொய்வு ஏற்பட்டு, இந்த இரண்டாம் தொகுதி நூல் 8.5.1992இல் தான் வெளியிடப்பட்டது. 13.5.1996இல் இந்த அரசு அமைந்த பிறகு அகரமுதலி உருவாக்கும் திட்டம் முடுக்கி விடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் மூன்றாம் பாகம் உருவாக்கப்பட்டு, 25.2.1997இல் வெளியிடப் பட்டது. "அ" முதல் "ஔ" வரையிலான சொற்கள் தொகுக்கப்பட்டு நூல்களாகிவிட்டன. மேலும் நான்கு, ஐந்தாம் பாகங்களும் வெளிவந்து விட்டன.

**அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்**

58 வயது முடிந்த தமிழறிஞர்களுக்கு திங்கள் தோறும் 400 ரூபாய் என வழங்கப்பட்ட நிதியுதவி 10.1.1996 முதல் 500 ரூபாயாக உயர்த்தப்பட்டு, தற்போது 467 பேர் பயன்பெற்று வருகின்றனர்.

**அஞ்சல்வழிக் கல்வி - தமிழ்**

சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக அஞ்சல் வழியில் தமிழ்க் கல்வியைப் பயிற்றுவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, மொரீசியஸ், ரீயூனியன், டர்பன், மடகாஸ்கர் ஆகிய பகுதிகளில் அஞ்சல் வழித் தமிழ்க் கல்வியைத் தொடரவும், மொரீசியசில் உள்ள மகாத்மா காந்தி நிலையம் இதன் தொடர்பகமாக விளங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம்**

1869இல் தொடங்கப்பட்ட பழமையான இந்த நூலகத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி, இசுலாமிய மொழிகளில் உள்ள 72,314 ஓலைச் சுவடி களைப் பாதுகாப்பதற்கு 13.32 இலட்சம் ரூபாய் செலவில் 1996இல் குளிர்ப்பதன வசதி செய்யப்பட்டுள்ளது. அனைத்துச் சுவடிகளையும் நுண்படச் சுருளில் கொண்டு வர 25 இலட்சம் ரூபாய் செலவில் நுண்படக் கருவி (Microfilm) வாங்கப்பட்டுள்ளது.

**அரசு அருங்காட்சியகம்**

13.5.1996க்குப்பின் பழநி, திருவாரூர், சிவகங்கை, காஞ்சிபுரம், நாகை, இராமநாதபுரம், கரூர் ஆகிய 7

இடங்களில் புதிய அருங்காட்சியகங்கள் தோற்று விக்கப்பட்டுள்ளன. கபிலர் எழுதிய குறிஞ்சிப்பாட்டு இலக்கியத்தில் கூறப்படும் 96 மலர்களைப் பற்றிய காட்சி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, அதன்படி இம்மலர்கள் தொகுக்கப் பட்டுப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. தமிழக வரலாற்றில் இது முதல் முயற்சியாகும்.

**ஆசியவியல் நிறுவனம்**

1996க்கு முன் தமிழியல் ஆய்வுக்காகத் தமிழக அரசிடமிருந்து இந்நிறுவனம் பெற்ற தொகை ரூ.11 இலட்சம். 1996க்குப் பின் 1996–97இல் ரூ.19 இலட்சமும், 1997–98இல் ரூ.20 இலட்சமும், 1998–99இல் ரூ.20 இலட்சமும், 1999–2000இல் ரூ.22.50 இலட்சமும் இந்நிறுவனத்திற்கு இந்த அரசு வழங்கியுள்ளது.

**ஆட்சிமொழிக் கருத்தரங்குகள்**

1996க்குப் பின், ஆண்டுக்கு 6 மாவட்டங்கள் எனும் அளவில் 29 மாவட்டங்களிலும் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளன. மாவட்ட அலுவலகங்களில் 100 விழுக்காடு தமிழை ஆட்சி மொழியாக்கிட இந்த முயற்சி பெரிதும் பயன்படுகிறது.

**இசைப்பள்ளி**

13.5.1996க்கு முன் சென்னை, மதுரை, கோவை ஆகிய 3 மாவட்டங்களில் மட்டுமே இசைப்பள்ளிகள் இருந்தன. 13.5.1996க்குப் பின் திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருவாரூர், சேலம், கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, சீர்காழி, சிவகங்கை, இராமநாதபுரம், ஈரோடு ஆகிய 17 இடங்களில் இசைப் பள்ளிகள் தொடங்கப் பட்டுள்ளன. திருவையாற்றில் தமிழிசை விழா நடத்திட ஒரு இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. சீர்காழியில் மாரிமுத்தா பிள்ளை, முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர் ஆகிய தமிழிசை மூவர்களுக்கு மணி மண்டபம் கட்டப்பட்டு வருகிறது.

**இணையம்**

1999 பிப்ரவரியில் உலகத் தமிழ் இணைய மாநாடு தமிழக அரசினால் நடத்தப்பட்டு, கணினியின் விசைப்பலகை ஒரே சீராக்கப்பட்டதுடன், உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இணையத்தில் கலைஞர் அனுப்பிய தமிழ் வாழ்த்துச் செய்தியே முதல் வாழ்த்துச் செய்தியாகும். இந்தியாவிலேயே இணையத்தில் அதிக பக்கங்களைக் (Home Page) கொண்ட மொழி தமிழ்தான் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

**இந்திய ஆட்சிப்பணித் தேர்வு**

இந்திய ஆட்சிப்பணித் தேர்வுகளைத் தமிழில் எழுதினால் அதிகம் பேர் வெற்றி பெற வாய்ப்புள்ளது. இதற்கு ஏற்ப முந்தைய ஆட்சியில் தமிழில் நூல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. தமிழ் மொழி, இலக்கிய வரலாறு, புவியியல், வரலாறு போன்ற பாடங்களை தமிழில் தனித் தனியே தொகுத்து வெளியிட முடிவு செய்யப்பட்டு, முதல் முயற்சியாக தமிழ்மொழி வரலாறு நூல் வெளியிடப் பட்டுள்ளது.

**இயல் இசை நாடக மன்றம்**

இயல் இசை நாடக மன்றத்திற்கு வழங்கப்பட்ட நல்கைத் தொகை 25 இலட்சம் ரூபாய் என்பது 1996க்குப் பின் 45 இலட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. புகழ்பெற்ற கலைஞர்களின் மறைவுக்குப் பின் கலங்கும் குடும்பத்தாருக்கு நிதியுதவி அளிப்பதற்காக வைப்பு நிதி ரூ.4.70 இலட்சம் என்பது ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. நலிந்த கலைஞர்கள் எனும் முறையில் இதுவரை 4267 பேர் மாத உதவித்தொகையாக ரூ.500 வீதம் பெற்று வருகின்றனர். ஆண்டுதோறும் 300 பேருக்கு வழங்கப்பட்ட இந்த உதவித்தொகை இந்த ஆண்டு 500 பேருக்கு உயர்த்தி வழங்கப்படுகிறது.

**இலக்கணக்குழு**

தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்களின் அடிப்படையில் இக்காலத் தேவைக்கேற்பவும், பள்ளி/கல்லூரி மாணவர்கள்



பயன் கொள்ளத்தக்க வகையிலும் ஒரு புதிய இலக்கண நூலை எழுதி வெளியிடுவதற்காக வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டு கட்டுரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**உலகத் தமிழர் அமைப்புகளின் ஒருங்கிணைப்பு**

உலகில் 36 நாடுகளில் வாழும் ஏறத்தாழ 87 இலட்சம் தமிழர்கள் இடையே பலவகைகளிலும் உறவுகளை வலுப்படுத்த மொரீசியஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குத் தமிழ்க்குழு நேரில் சென்று உரிய பணிகளைச் செய்துள்ளது. 22 நாடுகளுக்குச் சிறந்த நூல்களை அனுப்பும் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணம், சிங்கப்பூர், மொரீசியஸ், ரீயூனியன் முதலிய நாடுகள் ஒவ்வொன்றிற்கும் 100க்கும் மேற்பட்ட சிறந்த நூல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூர், மலேசியா, துபாய், மொரீசியஸ், டர்பன், ரீயூனியன் ஆகிய நாடுகளுக்கு அஞ்சல் வழி பட்ட வகுப்புப் பாடங்களும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

1968இல் பேரறிஞர் அண்ணா அவர்களால் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் அறிவிக்கப்பட்டு, 1970இல் பதிவு செய்யப்பட்டு இயங்கி வரும் இந்நிறுவனம், 1996க்கு முன் 29 இலட்சம் ரூபாய் உதவி பெற்றுவந்ததற்கு மாறாக 1996க்குப் பின் 48.5 இலட்சம் ரூபாயாக பெற்று வருகிறது. கூடுதலாக மொழிப்பயிற்சிக்கூடம் (Language Lab), தமிழியல் இதழ் ஒலி நாடா வெளியீடுகள், நூலக விரிவாக்கம் ஆகிய பணிகளுக்காக மேலும் 19 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**ஊர்திகளில் தமிழ்**

ஊர்திகளில் காணப்படும் பதிவெண் பலகைகளில் ஆங்கில எழுத்துக்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது அவற்றைத் தமிழில் எழுதிக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டு ஆணையிடப் பட்டுள்ளது.

**ஓவிய நுண்கலைக்குழு**

13.5.1996க்கு முன் இந்த ஓவிய நுண்கலைக் குழுவிற்கு 5 இலட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டது. 1996க்குப் பின் 15 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் நிர்வாகக் குழு, நடிகர் சிவகுமார் தலைமையில் புதுப்பிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

### கருவூலத்தில் தமிழ்

கருவூலங்கள் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகங்களில் பட்டியையோ (Bill), கைச்சாத்தையோ (Voucher) தமிழில் தயாரிக்கலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

### கலைக்களஞ்சியம்

நாடகக் கலைக்களஞ்சியம் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக ஒரு தொகுப்பும், தமிழிசைக் கலைக்களஞ்சியம் – பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் வாயிலாக மூன்று தொகுப்புகளும், மருத்துவக் கலைக் களஞ்சியம் – தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 5 தொகுப்புகளும் வெளி வந்துள்ளன. தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் வெளியிடப்பட்ட குழந்தைகள் கலைக் களஞ்சியம் நூல் தயாரிக்கும் பணிக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

### கலைத்தொழில்

100 ஆண்டுகளுக்கு மேல் சிறந்து விளங்கும் சென்னை கலைத் தொழில் கல்லூரியில் முதன் முறையாக முதுகலை வகுப்பு (வண்ணக்கலை) தொடங்கப்பட்டுள்ளது. மேலும் காட்சி வழித் தகவல் தொடர்புக் கலையில் முதுகலை வகுப்பும் தொடங்கப்பட்டது. குடந்தைக் கல்லூரியிலும் வண்ணக் கலையில் முதுகலை வகுப்பு தொடங்கப் பட்டுள்ளது. இக்கல்லூரிகளின் வரலாற்றில் முதுகலைப் படிப்பு தொடங்கப்பட்டுள்ளது 1996க்குப் பின்னர்தான்.

### ஜவகர் சிறுவர் இல்லம்

1996க்கு முன் மூன்றே மாவட்டங்களில் இருந்த இந்தச் சிறுவர் இல்லம் இந்த அரசில் 1996க்குப் பின் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளன.

### சென்னை பெயர் மாற்றம்

"மெட்ராஸ்" என்னும் பெயர் "சென்னை" என 30.9.1996 அன்று மாற்றப்பட்டு, இன்று ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் சென்னை என்றே உலகெங்கும் வழங்கப்படுகிறது.

### தட்டச்சுப் பொறிகள்

ஆட்சிமொழித் திட்ட விதிமுறைகளின்படி தலைமைச் செயலகத்தில் 65 சதவீதம் தமிழ்த் தட்டச்சுகள் இருக்க வேண்டும். எனவே தலைமைச் செயலகத் துறைகளுக்கு 90 இலட்சம் ரூபாய் செலவில் 1000 தமிழ்த் தட்டச்சுகள் வழங்கப் பட்டுள்ளன. தலைமைச் செயலகத்தில் எடுக்கப்பட்ட ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகளில் ஆங்கில விசைப் பலகைகளை தமிழில் மாற்றிட தலைமைச் செயலகத்திற்கு மேலும் 500 தமிழ்த் தட்டச்சுகள் வழங்கப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றம், சார்பு நீதிமன்றங்கள் ஆகியவற்றில் நகல் எடுப்போர் அனைவரும் பயன்படுத்தும் வகையில் 65 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்த் தட்டச்சுகள் வழங்கப் பட்டுள்ளன.

### தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்

தமிழ்ச் சுருக்கெழுத்து நூலின் தேவையைக் கருத்திற் கொண்டு, நான்காம் பதிப்பாக 5000 படிகள் அச்சிட்டு 24.12.1998 அன்று வெளியிட்டுள்ளது.

### தமிழ் வளர்ச்சித் துறைக்கு அலுவலர்கள்

13.5.1996க்கு முன் 3 உதவி இயக்குநர்கள், 8 தமிழ் ஆய்வு அலுவலர்கள், சில இடங்களில் மட்டும் உதவியாளர்கள், தட்டச்சர்கள் என 29 மாவட்டங்களில் தமிழ் வளர்ச்சித் துறையில் பணியாற்றினர். 1996க்குப் பின் தமிழ் ஆய்வு அலுவலர்கள் அனைவரும் பணிவரன்முறை செய்யப்பட்டு உதவி இயக்குநர்கள் ஆயினர். இயக்குநர் அலுவலகத்தில் இருந்த தகுதியுடைய கண்காணிப்பாளர்களில் மூவருக்கு உதவி இயக்குநர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டது. தமிழில் முதுகலைப் பட்டம் பெற்ற இத்துறையின் உதவியாளர்கள் இருவர் உதவி இயக்குநர் களாகவும் அமர்த்தப்பெற்றனர். தமிழில் முனைவர் பட்டம் பெற்றவர்கள் பட்டியல் வேலை வாய்ப்பகம் மூலம் பெறப்பட்டு, 13 பேர் உதவி இயக்குநர்களாக முறையான நேர் காணல் வழி மூலம் அமர்த்தப்

பட்டுள்ளனர். சேலம், திருநெல்வேலி ஆகியவற்றைத் தலைமை இடங்களாகக் கொண்டு இரண்டு மண்டலத் தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

**தமிழ் வளர்ச்சி வளாகம்**

சென்னை அருங்காட்சியகப் பகுதியில் தமிழ் வளர்ச்சி வளாகம் ஒன்று அமைத்திட இந்த அரசு முடிவு செய்து அனுமதிகளை வழங்கியுள்ளது. இதில் தமிழ் வளர்ச்சி இயக்ககம், தொல்பொருள் ஆய்வுத்துறை, ஓலைச்சுவடி நூலகம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் ஆகிய அனைத்தும் ஒரே இடத்தில் அமையுமாறும் இதனைப் பார்வையிட வரும் உள்நாட்டாரும், வெளிநாட்டாரும் ஒரே இடத்தில் தமிழ் தொடர்பான விளக்கங்களைப் பெறும் வகையிலும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

**தமிழில் அறிவியல் நூல்கள்**

வருங்காலத்தில் பொறியியல் கல்வியைத் தமிழில் பயில 15 பல்கலைக் கழகங்களுக்கு 64 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு, அதனடிப்படையில் இன்று அனைத்து நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

**தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்**

13.5.1996க்கு முன், ஆண்டுதோறும் வெளியிடப் பெறும் நூல்களில் சிறந்த நூல்களைத் தெரிவு செய்து முதற்பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசுகள் முறையே ரூ.5,000/-, ரூ.3,000/-, ரூ.1,000/- என வழங்கப்பட்டு வந்தன. பதிப்பகத்தாருக்கு பாராட்டுச் சான்றிதழ் மட்டுமே வழங்கப்பட்டது. இந்த ஆட்சியில், முதற்பரிசு ரூ.10,000/- என்றும் இரண்டாம் பரிசு ரூ. 5,000/- என்றும் மூன்றாம் பரிசு ரூ.2,000/-என்றும் உயர்த்தி வழங்கப்படுகிறது. வரும் ஆண்டிலிருந்து பரிசுபெறும் நூல்களைப் பதிப்பித்துள்ள பதிப்பகத் தாருக்கும் பரிசுத் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழில் மருத்துவம்**

மருந்துச் சீட்டுகள் அனைத்தும் தமிழில் எழுதப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரசு வெளியிடும் மாத்திரைகளுக்கான உறைகளில் தமிழ் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

**திராவிடப் பல்கலைக் கழகம்**

தென்னக மொழிகளையும், அவற்றிடையே உள்ள உறவுகளையும், ஊடாடி நிற்கும் பண்பாட்டுக் கூறுகளையும் உறுதி செய்யும் வகையில் 'குப்பம்' எனும் நகரில் "திராவிடப் பல்கலைக் கழகம்" தொடங்கப்பட்டது. நான்காவது முறையாக கலைஞர் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழக அரசின் சார்பில் ரூ.50 இலட்ச ரூபாயும், கடந்த ஆண்டில் மேலும் 25 இலட்ச ரூபாயும் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

**சிறப்புச் சொல் துணையகராதி**

1972 முதல் புதுப்பிக்கப்படாத அகராதிகளில் துறையின் புதிய சொற்கள் சேர்க்கப்பட்டு முதலில் 10 துறைகளுக்குரிய சிறப்புச் சொல் துணை அகராதிகளைப் புதுப்பித்து வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**புகைவண்டிகளில் தமிழ்**

தமிழக அரசு எடுத்த முயற்சியின் விளைவாக அனைத்து புகை வண்டிகளிலும் தமிழில் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. 'கம்பன் விரைவு வண்டி', 'மலைக்கோட்டை விரைவு வண்டி', வேகத் தொடர் வண்டி' முதலிய சொற்றொடர்களை புகை வண்டிகளில் இப்போது காணலாம்.

**தொல்பொருள் ஆய்வுத் துறை**

வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழாய்வு மேற்கொண்டு அரிய தொல்பொருட்கள் அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டத் திலுள்ள அழகன்குளம், நாகப்பட்டினத்திலுள்ள பூம்புகார், பெரியார் மாவட்டம் கொடுமணல் ஆகிய இடங்களில் பெரிய அளவில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. திருக்கோயிலூர் கோவலன் பொட்டல், கரூர் போன்ற இன்னும் பல்வேறு இடங்களிலும் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மறைந்த பூம்புகார் நகரின் சில கட்டடப் பகுதிகளும்,

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பாகக் கடலில் மூழ்கிப் போன ஐரோப்பிய நாட்டைச் சார்ந்த கப்பலும், பூம்புகார் ஆழ்கடலாய்வு மூலம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. பூம்புகாரில் நிலம் மற்றும் நீர் அகழாய்வு மூலம் சேகரிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு ஆழ்கடல் தொல்லியல் அகழ் வைப்பகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. படி எடுக்கப்பட்ட 10,000 கல்வெட்டுகளை அச்சில் கொணர ரூ.8.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**தேர்வாணையம்**

வினாத்தாள்கள் அனைத்தும் தமிழில் முதலிலும் ஆங்கிலத்தில் அடுத்தும் அமைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**நூல் வெளியிட உதவி**

விடுதலைப் போராட்ட வீரர் ஜமதக்கினி அவர்கள், காரல்மார்க்சின் 'மூலதனம்' நூலைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட அரசு ரூ.5 இலட்சமும், திரு. ஐ. சண்முகநாதன் அவர்கள் "ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு" என்னும் நூலை வெளியிட ரூ. 3 இலட்சமும் நிதியுதவி வழங்கப்பட்டன.

வரலாற்றுப் பேராசிரியர் மறைந்த திரு. கே.கே. பிள்ளை அவர்களின் "தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்" எனும் நூலை வெளியிட 77,800/- ரூபாயும்; அமரர் ஜே.பி. ராட்லர் அவர்களால் தொகுக்கப்பெற்ற தமிழ் - ஆங்கில அகராதியை மறுபதிப்பாக வெளியிட 2 இலட்ச ரூபாயும்; இதுகாறும் வெளிவந்த "தமிழ் இலக்கிய வரலாறு" தமிழ் நாட்டு இலக்கியங்களை மட்டுமே சார்ந்து நிற்கும் நிலையை மாற்றி இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் இலக்கிய வரலாறுகளையும் ஒருங்கிணைத்து "புதிய தமிழ் இலக்கிய வரலாற்றை" உருவாக்க 3 இலட்ச ரூபாயும், கன்னியாகுமரியில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவையொட்டி வெளியிடப்பெற்ற "குறளமுதம்", "திருக்குறள் - நூல்கள்", "திருக்குறள் - ஆங்கிலக் கட்டுரைகள்", "திருக்குறள் - ஆங்கில மொழி பெயர்ப்பு" ஆகிய 4 நூல்களை அச்சிட்டு அளித்தமைக்காக அச்சுச் செலவுத் தொகையாக 1,60,420 ரூபாயும்; திருக்குறளை மலையாள மொழியில் மொழி பெயர்த்து வெளியிட திரு.எஸ்.ரமேசன் நாயருக்கு 2 இலட்ச ரூபாயும் திரு.மணவை முஸ்தபாவிற்கு "கணினிக் கலைச்சொல் களஞ்சிய அகராதி" வெளியிட 2 இலட்ச ரூபாயும் நிதியுதவியாக உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டன.



### மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

1997–98ஆம் நிதியாண்டில் சேலம், தஞ்சாவூர், விருதுநகர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் தோற்று விக்கப்பட்டன. தற்போது, மேலும் இரண்டு மண்டலக் கலை–பண்பாட்டு மையங்கள் தோற்றுவிக்கப் படவுள்ளன.

### மழலையர் பள்ளிகளில் தமிழ்

தமிழ்நாட்டில் தமிழ்மொழியை ஒரு பாடமாகச் சொல்லித்தரும் மழலையர், தொடக்க நிலைப் பள்ளி களுக்கே அரசின் ஏற்பு வழங்கப்படும் என்றும், தாய்த்தமிழ் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டணங் களில் சலுகை வழங்கப்படும் என்றும் ஐந்தாம் வகுப்புவரை அனைத்துப் பாடங்களும் தமிழ் அல்லது தாய்மொழியிலேயே பயிற்றுவிக்கப்படும் என்றும் முதன்மை மொழியாக தமிழ் அல்லது தாய்மொழியே இருக்குமென்றும் அரசு ஆணையிட்டது. இந்த ஆணைக்கு எதிராக உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதின்பேரில் தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது.

### மொழிப்போர்க் காவலர்கள்

1998இல் 387 பேருக்கும், 1999இல் 159 பேருக்கும் மொழிப்போர்க் காவலர்க்கான ஒய்வூதியம் வழங்கப் பட்டுள்ளது. ரூ.400/–ஆக இருந்த ஒய்வூதியம் ரூ.500/– ஆகவும், பின்னர் ரூ.1,500/–ஆகவும், அதன்பின் ரூ.3,000/–ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மருத்துவப்படி ரூ.15/–ம் சேர்த்து, 2055 பேர் மாதம் ரூ.3,015/–ம், மரபுரிமையர் 426 பேர் மாதம் ரூ.1,515/– பெறுகின்றனர். அத்துடன் இவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணச் சலுகையும் வழங்கப் பெறுகிறது.

### யாழ் நூலகத்துக்கு நூல்கள் நன்கொடை

இலங்கை அரசு வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப் பாணம் நூலகத்திற்கு 2,573 தமிழ் நூல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

### தமிழக வரலாறு

பல்லவர் – பாண்டியர் காலம் பகுதி–2, சோழப் பெருவேந்தர் காலம் பகுதி–1 மற்றும் பகுதி–2 ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழக வரலாறு முழுவதையும் ஒரே தொகுதியாக வெளியிடும் பணி நடைபெற்று வருகின்றது.

### விளம்பரப் பலகை

515 சொற்கள் அடங்கிய 'வணிக நிறுவனப் பெயர்ப் பலகைகளில் தமிழ்' எனும் நூல் வெளியிடப்பட்டது. சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் இதனை இணை யத்தில் வெளியிட்டுள்ளது. தமிழில் பெரிய எழுத் திலும், அடுத்து ஆங்கிலத்திலும், அடுத்து விரும்பு கின்ற மொழியிலும் எழுதிட ஆணை பிறப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### வெளி மாநிலம்

கல்கத்தாவிலும், மும்பையிலும் தமிழ் மையம் அமைத்திட ரூ.12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளியில் பேரா. பி. சுந்தரம்பிள்ளை நினைவாக நூலகக் கட்டடம் கட்டுவதற்குத் தமிழக அரசு ரூ.10 இலட்சம் வழங்கியுள்ளது. 1998–99ஆம் ஆண்டு மானியமாக இந்நிறுவனத்திற்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### வெளிநாட்டு உதவி

மொரீசியசுத் தீவில் வாழும் தமிழாசிரியர் களுக்கும், இசையாசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கத் தமிழ்நாட்டிலிருந்து தமிழ் ஆசிரியர் ஒருவரையும், இசையாசிரியர் ஒருவரையும் மொரீசியசுத் தீவிற்கு ஓராண்டு காலத்திற்கு அனுப்பவும், இத்திட்டத்தை மொரீசியசில் மகாத்மா காந்தி நிறுவனம் மூலம் செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை

மலேயாப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வெளிநாடுகளுக்கு நூல் அனுப்பும் திட்டம்

தேர்ந்தெடுக்கப்பெற்ற வெளிநாடுகளுக்கு தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு தொடர்பான நூல்களை அன்பளிப்பாக வழங்குவதற்கென அரசு ரூ.5 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நூல்கள் வாங்கி 20 வெவ்வேறு நாடுகளுக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டு இதுவரை மொரீசியசு, சிங்கப்பூர், யாழ்ப்பாணம், ரீயூனியன் ஆகிய நாடுகளுக்கு நூல்கள் அனுப்பப் பட்டுள்ளன. பிறநாடுகளுக்கும் அனுப்பிட ஏற்பாடு நடந்து கொண்டுள்ளது.

### வானொலி

1–11–96 முதல் வானொலியில் 'நாளொன்று பிறக்கச் சொல் ஒன்று அறிவோம்' எனும் நிகழ்ச்சி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

### நிதியுதவி

திரைப்பட உரையாடலாசிரியர் மறைந்த திரு. இளங்கோவன் குடும்பத்திற்கு ரூ.2.25 இலட்சம், உ.வே.சா. நூலகத்தில் சிலையமைப்பில் பற்றாக் குறையை நிறைவு செய்ய ரூ.50,000, மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு ரூ.45 இலட்சம், திண்டுக்கல்லில் கலையரங்கம் கட்ட ரூ. 12 இலட்சம், தில்லித் தமிழ்ச் சங்கக் கட்டடத்திற்காக ரூ.10 இலட்சம், பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் தமிழ்வழி நடத்தும் காமராசர் உயர்நிலைப் பள்ளிக்கு ஆண்டுக்கு ரூ.10,000/–, மறைமலையடிகள் நூலகத்திற்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த ரூ.10,000/– உயர்த்தப்பட்டு இப்போது ஆண்டு நல்கையாக ரூபாய் ஒரு இலட்சம், மும்பைத் தமிழ்ச் சங்கத்திற்குச் சங்கக் கட்டடத்தைப் புதுப்பிக்க ரூபாய் ஒரு இலட்சம், தென் மொழிகள் புத்தக நிறுவனம் கூரியர் இதழ் வெளியிட ரூபாய் ஒரு இலட்சம், தமிழில் தந்தி அனுப்பும் முறையைக் கண்டுபிடித்த புலவர் அ. சிவலிங்கனாரின் பணியைப் பாராட்டும் வகையில் அவருக்கு ரூ.50,000/–, ந.மு. வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி வகுப்பறை கட்ட ரூ. 15 இலட்சம் நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

### தமிழறிஞர்களின் நூற்றாண்டு விழாக்கள்

19.2.97இல் இ.மு. சுப்பிரமணியன்பிள்ளை, மே.வி.வேணுகோபால் பிள்ளை, 24.12.98இல் முங்கலங் கிழார், 4.8.97இல் மனோன்மணியம் சுந்தரனார், 30.10.1999இல் ராய சொக்கலிங்கம், 13.3.2000இல் கி.ஆ.பெ.விசுவநாதம் ஆகியோரின் நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

### அரசுடைமையாக்கப்பட்ட தமிழ் மேதைகளின் நூல்கள்


1 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 1996ஆம் ஆண்டிற்குப் பிறகு தேவநேயப் பாவாணர் (20 இலட்சம் ரூபாய்), மறைமலை அடிகளார் (30 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய்), தமிழ்த் தென்றல் திரு.வி.க. (20 இலட்சம் ரூபாய்), பேராசிரியர் கல்கி (20 இலட்சம் ரூபாய்), சுதந்திரப் பொன்விழா நிறைவினை யொட்டி சுதந்திரக் கனலைப் பரப்பிய தமிழ்ச் சான்றோர்களாகிய கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பா. ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர், வ.உ.சிதம்பரனார், சுத்தானந்த பாரதியார், ஏ.எஸ்.கே. அய்யங்கார், வ.ரா., கவி கா.மு.ஷெரீப், நாவலர் சோமசுந்தர பாரதியார், பரலி சு.நெல்லையப்பர், வ.வே.சு. அய்யர், காரைக்குடி சா. கணேசன், எஸ். டி.எஸ். யோகி ஆகிய 13 பேரின் நூல்களும் அரசுடைமையாக்கப் பட்டு அவர்களது குடும்பம் ஒவ்வொன்றிற்கும் 5 இலட்சம் ரூபாய், வெ.சாமிநாத சர்மா (5 இலட்சம் ரூபாய்), சாமி சிதம்பரனார் (பத்து லட்சம் ரூபாய்), மயிலை சீனி வேங்கட சாமி (பத்து இலட்சம் ரூபாய்), கவிஞர் முடியரசன் (பத்து இலட்சம் ரூபாய்) ஆகியோருக்கு பரிவுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார் அவர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு அவரின் குடும்பத்தாருக்கு ரூபாய் பத்து இலட்சம் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டது.

### விருதுகள்

ஏற்கனவே இருந்த திருவள்ளுவர் விருது,

திரு.வி.க. விருது, பாரதிதாசன் விருது ஆகிய வற்றுடன் 1997 இல் பாரதியார் விருதும், 2000இல் கி.ஆ.பெ. விசுவநாதம் விருதும் நிறுவப்பட்டன. தமிழ் அறிஞர்களுக்கு வழங்கப்படும் இந்த விருதுத் தொகை ரூ.10 ஆயிரம் என்பது 1996இல் ரூ.20 ஆயிரமாகவும், 1998இல் ரூ.1 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டது.

1996 முதல் திருவள்ளுவர் விருது முனைவர் கு. மோகனராசு, இரா. சாரங்கபாணி, வா.செ. குழந்தை சாமி, த.சி.க.கண்ணன் ஆகியோருக்கும்; திரு.வி.க. விருது டாக்டர் மா. நன்னன், மா.சு. சம்மந்தன், புலவர்



மருதவாணன், யாழ்ப்பாணம் கா. சிவத்தம்பி ஆகியோருக்கும்; பாரதிதாசன் விருது கவிஞர் வைரமுத்து, சரளா ராஜகோபாலன், மலேசியக் கவிஞர் முரசு நெடுமாறன், பாவலர் மணிவேலன் ஆகியோருக்கும்; பாரதியார் விருது மதிவண்ணன், குமரி அனந்தன், கவிஞர் வாலி ஆகியோருக்கும்; கி.ஆ.பெ. விருது கோ. முத்துப் பிள்ளைக்கும் வழங்கப்பட்டுள்ளன.

23 சிறார் சிறுமிகளுக்குக் "குறள் பரிசு" மாதம் ரூ.1000/– அவர்கள் வாழும் காலம் வரை வழங்க 8.1.2000 அன்று ஆணையிடப்பட்டு, 9.2.2000 அன்று முதல் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு "ஞானபீட விருது" வழங்குவதுபோல், தமிழ் எழுத்தாளர்களுக்குக் "குறள்பீட விருது" வழங்கிட, "தமிழ்ச் சங்கப் பலகை" அமைக்கப்பட்டுள்ளது.

சிறந்த படைப்பிலக்கியச் செம்மல் ஒருவர்க்கு அவர்தம் ஒட்டுமொத்த வாழ்நாள் சாதனைக்காக குறள்பீட விருது, தமிழ் இலக்கியச் சங்கப் பலகைக் குறள்பீடத்தின் சார்பில் வழங்கப்படுகிறது. விருதுத் தொகை ரூ.2 இலட்சம். இவ்வாண்டு திரு. அ.ச. ஞானசம்மந்தம் அவர்களுக்கு குறள்பீட விருது வழங்கப்பட்டது.

தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு உதவும் படியாக, கவிதை, அறிவியல், நாட்டுப்புறவியல், மொழி பெயர்ப்பு, திறனாய்வு ஆகிய ஐந்து துறைகளில் சிறந்த நூல்கள் படைத்தும், தொண்டாற்றியும் வரும் ஐவருக்கு இந்த ஆண்டு குறள்பீடப் பரிசாக தலா ரூ.25,000/– வழங்கப்பெற்றது.

தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு உதவும்படி யான சிறந்த நூல்கள் படைத்த 30 வயதுக்குட்பட்ட இளம் எழுத்தாளர்கள் பத்துப் பேருக்கு குறள்பீடப் பாராட்டிதழ் வழங்கப் பெறும். பாராட்டுத் தொகை ரூ.5,000/– ஆகும்.

**பேச்சொலிப் பிழைநீக்கக் குறும்படம் தயாரிப்பு**

மக்கள் செய்தி ஊடகங்களிலும், பொது வகையிலும் தமிழ் உச்சரிப்பை நெறிப்படுத்தும் நோக்கில் "பேச்சொலிப் பிழைநீக்கக் குறும்படம்" தயாரிக்க வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. குறும்படத் தயாரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது.

## இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பு

இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பை விளக்கி உரைக்கும் வகையில் "இருபதாம் நூற்றாண்டுக்குத் தமிழர்களின் பங்களிப்பு" என்னும் தலைப்பில் அரசியல், சமூகச் சீர்திருத்தம், விளையாட்டு, பொருளாதாரம், வரலாறு, கல்வி, நுண்கலைகள், இயல் அறிவியல், பொறியியல் தொழில் நுட்பம், மருத்துவம் ஆகிய பொருண்மை களைக் கொண்ட நூலைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தயாரித்து வெளியிடவும், கவிதை, சிறுகதை, புதினம், நாடகம், ஆய்வுகள் ஆகிய பொருண்மைகளில் தனித்தனியே ஐந்து நூல்களைத் தயாரித்து வெளியிடவும் ரூ.16,64,180/– ஒப்பளிப்புச் செய்யப் பட்டு இதற்கென வல்லுநர் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு உரிய முறையில் கட்டுரைகள் எழுதும் பணியும், படைப்புகளைத் தொகுக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன.

## அரசு அறிவிப்புப் பலகைகளில் திருக்குறள்

அரசின் தலைமைச் செயலகத் துறைகளிலும், துறைத் தலைமை அலுவலகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள், வாரியங்கள், கழகங்கள், இணையங்கள் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்களிலும் ஆட்சிச் சொல் அகராதியில் உள்ள சொற்களில் நாள்தோறும் ஓர் ஆங்கிலச் சொல்லையும், அதற்குரிய தமிழ்ச் சொல்லையும், ஒரு திருக்குறளைப் பொருளுடனும் கரும்பலகையில் எழுதி வைக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

திருக்குறளுக்குப் பண் அமைத்து, சுரம் அமைத்து 1958ஆம் ஆண்டிலேயே அறத்துப் பாலின் முதல் பகுதியை (கீர்த்தனையாக) வெளியிட்டுள்ள இசை வித்தகர் மயிலாடுதுறை விசுவநாத சாஸ்திரி அவர்களின் அரும் தொண்டினைப் போற்றி அவரது இசைக் குறிப்புகளுடன் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இப்போது அச்சிட்டு இசைக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் பாடமாக வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## விவேகானந்தர் நினைவு இல்லம்

நமது பண்பாட்டுப் பெருமையை நானிலமீது நிலைநாட்டிய பெருமகனார் விவேகானந்தர் சென்னையில் தங்கியிருந்த கடற்கரை மாளிகையில் கலாச்சார கண்காட்சி ஒன்றினை நடத்திக்கொள்ள ராமகிருஷ்ண மடத்தினருக்கு ஓர் ஒப்பந்த அடிப்படையில் ஆரம்பக் கட்டமாக மூன்றாண்டு காலத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## நாளிதழ்கள் - இதழ்களுக்குப் பரிசு

இவ்வாண்டில் தமிழில் வெளிவரும் நாளிதழ்கள் மற்றும் இதழ்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. நாளிதழ்களுக்கு முதல் பரிசு ரூ.50,000/– இரண்டாம் பரிசு ரூ.30,000/– மூன்றாம் பரிசு ரூ.20,000/– கிழமை இதழ்களுக்கு முதற்பரிசு ரூ.20,000/– இரண்டாம் பரிசு ரூ.15,000/– மூன்றாம் பரிசு ரூ.10,000/– திங்கள் இதழ்களுக்கு முதற்பரிசு ரூ.20,000/– இரண்டாம் பரிசு ரூ.15,000/– மூன்றாம் பரிசு ரூ.10,000/– எனப் பரிசுகள் வழங்கவும், பரிசு பெறுவோரைப் பாராட்டவும் ரூ. 2 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டது. பரிசுக்குரிய இதழ்களைத் தெரிவு செய்யும் பணியை நீதியரசர் கோகுல கிருஷ்ணன் தலைமையிலான குழு மேற்கொண்டு வருகிறது.

★ ★ ★

சாதனைகளின் தொடர்ச்சி – தொகுப்பு – II இல்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368927

பதிவு எண் M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

# தமிழரசு









